
# வித்தியா







வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு
2014

# வித்தியா

## வலயக் கல்வி அலுவலகம்
## மட்டக்களப்பு
## 2014

# சஞ்சிகை விபரம்


- சஞ்சிகையின் பெயர்:
  வித்தியா
- சஞ்சிகை ஆசிரியர்:
  த. யுவராஜன், உ.க.ப (தமிழ்)
- வெளியீடு:
  வலயக் கல்வி அலுவலகம்,
  மட்டக்களப்பு.
- இதழ்:
  05
- வெளியிடும் காலம்:
  2014 மார்கழி
- பக்கங்கள் :
  X +76
- பிரதிகள் :
  200
- அச்சுப்பதிப்பு :
  துர்க்கா அச்சகம்,
  கொக்குவில், மட்டக்களப்பு.
  065 2053060

- Title of the Magazine :
  **Viththiya**
- Name of the Editor :
  **D. Juwarajan, ADE (Tamil)**
- Published By :
  **Zonal Education Office,**
  **Batticaloa.**
- Issue :
  **05**
- Published on :
  **December 2014**
- Pages :
  **X +76**
- Copies :
  **200**
- Printers :
  **Thurkka Press, Kokkuvil,**
  **Batticaloa.**
  **065 2053060**


இச்சஞ்சிகையில் இடம்பெறும் படைப்புக்களுக்கு அவற்றைப் படைத்த அவ்வப்படைப்பாளிகளே பொறுப்பாவர்.

# மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின்

## மகுட வாசகம்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

மட்டக்களப்பு கல்வி வலயம்

## தூர நோக்கு

சிறந்த அறிவும் திறனும் மனப்பாங்குமுடைய ஆளுமைமிக்க சமூகம்.

## Vision

**Personable Society with excellent knowledge, skill and attitude**

## பணிக்கூற்று

சிறந்த விளைதிறனுடனான பயனுள்ள கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கூடாகத் தரமானதும் தகுதியானதுமான ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்கல்.

## Mission

**Creating a quality improved, capable and personable Society by initiating excellent, efficient and effective activities through teaching learning process.**

# வலய கீதம்

இராகம் :-ஹிந்தோளம்
தாளம் :- ஆதி

அமுதத் தமிழும் கலையும் மிளிரும் உதயவாசல் மீதிலே
அழகும் வளமும் சேர ஒளிரும் மட்டு மா நகரிலே
அன்பு நலமும் அறிவும் திறனும் நாற்றிசையும் ஓங்கவே
அரிய சேவை நல்கும் மட்டு கல்வி வலயம் வாழ்கவே

மண்முனைப் பற்றினை மகிழ்வுடனே சேர்த்திடும்
மனமுவந்து ஏறாவூர்ப் பற்றினையும் அணைத்திடும்
மண்முனையின் வடக்கில் மையங்கொண்டு செங்கோலோச்சிடும்
மட்டக்களப்பு கல்வி வலயம் மாண்புடனே வாழ்கவே

கணனியுடன் கைவினையும் கலந்து ஒன்றாய் வளரவே
கலாசாரம் தொழில் நுட்பம் சிறந்து வளம் பெருகவே
மண்ணில் மட்டு மங்கை புகழ் ஞாயிறு என ஒளிரவே
முழுமனதாய் உழைக்கும் எங்கள் கல்வி வலயம் வாழ்கவே

ஆற்றல் மிகு நற்பணியை ஆசிரியர் நாட்டவே
அன்புடனே அதிகாரிகள் நாடி வழிகாட்டவே
ஏற்றமுடன் மாணவர்கள் நாளும் வெற்றி ஈட்டவே
அணைத்து ஆற்றுப்படுத்தும் மட்டு கல்வி வலயம் வாழ்கவே

வாவியுறை மீனினங்கள் மதுர இசை மீட்டிடும்
வங்கக்கடலலைக் கரங்கள் சேர்ந்து தாளம் போட்டிடும்
தேவி கலை மாதின் மேடை மட்டுநகர் மண்ணிலே
சேர்ந்து கலை வளர்க்கும் எங்கள் கல்வி வலயம் வாழ்கவே

**இசை அமைத்தவர்:**
செல்வி ரஜனி நடராஜா
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் -
(அழகியற்கல்வி)

**இயற்றியவர்:**
திரு.எஸ்.அருளானந்தம் (அதிபர்)
மட் / மஞ்சந்தொடுவாய் பாரதி வித்.

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வித்தியா - 2014

பொதுவாக ஒவ்வொருவரிடமும் ஒரு விடயத்திலேதானும் தெளிவற்ற புரிதல்கள் இருக்கும். அவ்வாறான தெளிவற்ற புரிதல்களைத் தெளிவாக்குவதற்கான படைப்புக்கள் எப்போதும் தேவைக்குரியனவாகவே இருக்கின்றன. இன்னொரு வகையில் சொல்வதானால் உடைப்பெடுக்கும் படைப்புக்கள் அவசியமாகின்றன. ஒரு வகையிலே இது ஒரு சமூகத் தேவையாகவும் கொள்ளப்படுகிறது. அந்தவகையில் இந்த வித்தியா சஞ்சிகையும் அத்தகைய ஆக்கங்களைத் தருவதில் கவனத்தைச் செலுத்தியிருக்கும் என நம்புகிறேன்.

படைப்பு என்ற போர்வையில் படைப்பொன்றைத் தருவதில் அர்த்தம் இல்லை. மாறாக அந்தப் படைப்பில் வியர்வை தெரிய வேண்டும். வியர்வை தெரிந்தால்தான் தேடல் இருக்கிறது என்பதும் விளைச்சல் நன்றாக இருக்கிறது என்பதும் தெரியவரும்.

காத்திரமான படைப்புக்களைப் படைப்பாளிகள் தர வேண்டும் என்று சொன்னால் மட்டும் போதாது. அதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டும். அதாவது களம் அமைத்துக்கொடுக்க வேண்டும். அந்தவகையில் காத்திரமான படைப்புக்களை உருவாக்கும் பணியைப் பாடசாலையிலிருந்தே ஆரம்பிப்பது பொருத்தமானதாகும். காரணம் படைப்பாளிகளுக்குக் களம் அமைத்துக்கொடுப்பதில் பாடசாலைச் சஞ்சிகைகள் அத்திவாரமாக விளங்குகின்றமையேயாகும். இதனாலேதான் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஆகக் குறைந்தது, கையெழுத்துப் பிரதி வடிவிலாவது பாடசாலைச் சஞ்சிகை வெளிவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ரீதியிலே பாடசாலைகள் அறிவூட்டம் செய்யப்படுகின்றன.

அந்தவகையில் களம் அமைத்துக் கொடுப்பதில் வலயத்துக்கும் பங்குண்டு என்பதை உணர்ந்து, மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகம் வித்தியா என்ற பெயரில் வெளியிடும் சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைந்து இச்சஞ்சிகை வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய ஒவ்வொருவரையும் பாராட்டுகின்றேன்.

**எம்.ரி.ஏ.நிசாம்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம், திருகோணமலை.

# மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்வி வலயத்தால் வெளியிடப்படுகின்ற வித்தியா சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வுறுகின்றேன்.

பாடவிதானத்திற்கு இணையானதாக இணைப்பாடவிதானம் கொள்ளப்படுகின்றது. இந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுள் ஒன்றாக அமைகின்ற சஞ்சிகை வெளியீட்டினைப் பாடசாலைகள் பொதுவாகவும் சிறப்பாகவும் குறிப்பாகவும் செய்துவருகின்றன. இச்செயற்பாடு, பாடசாலைகளுக்கு உரித்தான செயற்பாடாகவும் அமைகின்றது. இச்செயற்பாட்டினைச் சில பாடசாலைகள் தமது வருடாந்தச் செயற்பாடுகளுள் ஒன்றாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஏனைய கல்வி நிறுவனங்களில் இந்த நிலை உண்டு என்று கூறிவிடமுடியாத நிலையே காணப்படுகிறது. இருப்பினும் சில கல்வி நிறுவனங்களில் இத்தகைய நிலையைப் பேணுவதில் அக்கறை காட்டப்படுகிறது. அவ்வாறு அக்கறை காட்டும் கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக எமது கல்வி வலயம் அமைவதை நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதற்காக உழைக்கும் எமது குழாத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

"பண்ணிய பயிரில்
புண்ணியம் தெரியும்"

என்பது வெறும் வார்த்தைக் கூட்டம் அல்ல. வளம் உள்ள வாழ்க்கையின் பாணி.

நாம் எதைச் செய்தாலும் அதில் அர்த்தம் இருக்க வேண்டும், பெறுமதி இருக்க வேண்டும். அவ்வாறு அர்த்தத்தோடும் பெறுமதியோடும் செயற்பட்ட சஞ்சிகைக் குழுவினரையும் குறிப்பாக இதில் கூடிய பங்காற்றிய தமிழ்த் துறைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.த.யுவராஜன் அவர்களையும் பாராட்டுவதோடு இனி வரும் காலங்களிலும் கிரமமாகவும் வழமை போல் கனதியாகவும் வித்தியா சஞ்சிகை வெளிவரும் விதத்தில் செயற்படுவது இன்றியமையாதது என்பதையும் தெரிவிக்கிறேன்.

க.பாஸ்கரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
மட்டக்களப்பு.

வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

# சஞ்சிகைக் குழுச் செயலாளரின் சிந்தனையிலிருந்து....



வித்தியா - 2014

இவ்வருடத்துக்கான "வித்தியா" சஞ்சிகை மட்டக்களப்புக் கல்வி வலயத்தினரின் ஐந்தாவது வெளியீடாக உங்கள் கைகளில் மலர்கிறது.

2014 ஆம் ஆண்டுக்கான வித்தியாவைச் சிறப்புற வெளியிட வேண்டும் என்னும் நோக்குடன் எம்முடைய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு க. பாஸ்கரன் ஐயா அவர்கள் எங்களை ஒன்று கூட்டி, பழைய சஞ்சிகைக் குழுவே இப்பணியை இம்முறையும் தொடரவேண்டும் என முன்மொழிந்தார். வலயத்தின் அலுவலர்கள் அனைவரும் இக்கருத்தினை வழி மொழிந்ததால் நாங்கள் இவ்வாண்டுக்கான சஞ்சிகை வெளியீட்டுப் பணியைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளோம். வித்தியா சஞ்சிகை உருவாக்கத்தில் இதன் ஆசிரியர் திரு .த. யுவராஜன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) அவர்களது அயராத முயற்சி அபாரமானது.

இம்முறை, இற்றைப்படுத்தப்பட்ட கல்விசார் சிந்தனைகளுடனும் கலை இலக்கிய பரப்புக்களின் தற்கால வீச்சுக்குள்ளும் வித்தியா உள் நுழைய முயன்றுள்ளாள். விபுலம் பதிந்த மண்ணின் விளைச்சல்களில் எமது வித்தியாவும் ஒரு வீரிய நாற்றங்கால். இந்நாற்றங்காலுக்கு உரமூட்டிய பேராசிரியர்கள், கல்வியியலாளர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் நாம் நன்றியுடையவர்களாய் உள்ளோம். அத்துடன் இச்சஞ்சிகையை வெளிக் கொணர ஊக்கமுடன் உழைத்த எமது சஞ்சிகைக் குழுவினர், மற்றும் எங்கள் வலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் "வித்தியா" நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறாள்.

**சி. ரவீந்திரன்.**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)

வலயக் கல்வி அலுவலகம்.
மட்டக்களப்பு.

# சஞ்சிகை ஆசிரியரின் எண்ண அலைகள்...



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வலயங்களுள் தாய்வலயமாக அமைவது, மட்டக்களப்புக் கல்வி வலயமாகும். தாய்நாடு, தாய்மொழி, தாயுறுதி என்பனவற்றின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டால் தாய்வலயம் என்பதன் அர்த்தமும் புரியும். இத்தகைய வலயத்திலிருந்து ஐந்தாவது வெளியீடாக வெளிவரும் வித்தியா சஞ்சிகை பயன்நிறைந்த வெவ்வேறு விடயங்களை உள்ளடக்கிய படைப்புக்களைக் கொண்டதாக விளங்குகிறது.

வாழ்த்துச் செய்திகளும் வெறுமனே வாழ்த்தாக மட்டுமல்லாமல் வாழ்த்துடன் கூடிய வழிகாட்டல்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. இவ்வழிகாட்டல்கள் சஞ்சிகை ஒன்றை ஆக்குவதற்கு மிகவும் அவசியமானவை. எமது சஞ்சிகைக்கு இவ்வழிகாட்டல்கள் செய்திகள் மூலமாகவும் வாய்வார்த்தைகள் மூலமாகவும் கிடைத்துள்ளன. அத்தகைய வழிகாட்டல்கள் இச்சஞ்சிகையைச் சிறப்பிக்கின்றன. அந்த வகையில் வழிகாட்டல்களை வழங்கியவர்கள் பாராட்டுக்குரியவர்களாவர்.

“போங்கள் வருகிறேன் என்று ஒருவர் கூறுவாராயின் அவர் எஜமான். வாருங்கள் போவோம் என்று ஒருவர் கூறுவாராயின் அவர் தலைவன்” என்று பெரியோரால் கூறப்பட்ட வார்த்தைக் கூட்டம் சிறப்பான தத்துவமாக இருக்கின்றது. இதில் தலைவன் ஒருவனின் உன்னதமான பண்பு எடுத்துக்காட்டப்படுகிறது. அத்தகைய தலைமைத்துவத்தினுடைய வழிகாட்டல்களின் துணையுடன் வெளிவரும் இச்சஞ்சிகை, ஆக்க நிலையிலும் அச்சு நிலையிலும் சிறப்பாக அமையத் துணைநின்ற சஞ்சிகைக் குழுவினர் உள்ளிட்ட ஒவ்வொருவரையும் நன்றியுடன் பாராட்டுகிறேன்.


**த. யுவராஜன்**

உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)

வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

# "வித்தியா" சஞ்சிகைக் குழு - 2014

| | |
|---|---|
| தலைவர் | : திரு.க.பாஸ்கரன், வலயக் கல்விப் பணிப்பாளர் |
| உப தலைவர்கள் | : திரு.ம.குருகுலசிங்கம், பி.க.ப (நிருவாகம்)<br>திரு.பொ.கோவிந்தராஜா, பி.க.ப (திட்டமிடல்)<br>திருமதி சி.கங்கேஸ்வரன், பி.க.ப (கல்வி அபிவிருத்தி)<br>திரு.சு.சசீந்திரசிவகுமார், பி.க.ப (கல்வி முகாமைத்துவம்) |
| செயலாளர் | : திரு.சி.ரவீந்திரன், சே.ஆ.ஆ (சித்திரம்) |
| உபசெயலாளர் | : திருமதி ஐ.இந்திரகுமாரன், சே.ஆ.ஆ(ஆரம்பக் கல்வி) |
| பொருளாளர் | : திரு.கு.கிருஷ்ணமூர்த்தி, சே.ஆ.ஆ (வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்) |
| சஞ்சிகை ஆசிரியர் | : திரு.த.யுவராஜன், உ.க.ப (தமிழ்) |

## ஏனைய அங்கத்தவர்கள்

திரு.க.சந்திரகுமாரன், உ.க.ப (ஆங்கிலம்)

திரு.வா.லவக்குமார், உ.க.ப (உடற்கல்வி)

திரு.மு.சச்சிதானந்தம், உ.க.ப (ஆரம்பக் கல்வி)

திருமதி சி.கிருபாகரன், உ.க.ப (முறைசாராக் கல்வி)

திரு.வே.கந்தசாமி, கோ.க.ப (மண்முனைப்பற்று)

திருமதி எஸ்.கணேசலிங்கம், (ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்)

திரு.ச.இலங்கேஸ்வரன், சே.ஆ.ஆ (தகவல் தொழில் நுட்பம்)

திரு.ப.சர்வேஸ்வரன், சே.ஆ.ஆ (விஞ்ஞானம்)

திரு. அ. ஜெயநாதன், தொழில் வழிகாட்டல் ஆலோசனை உத்தியோகத்தர்.

திரு.பெ.அன்ரனி – இணைப்பாளர் (RESC)

திருமதி இ.அருளம்பலம், சே.ஆ.ஆ (ஆரம்பக்கல்வி)

திரு.பொ.செல்வநாயகம், சே.ஆ.ஆ (விவசாயம்)

# "வித்தியா" சஞ்சிகைக் குழு - 2014



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)**

திரு. வே. கந்தசாமி, திரு.சு. சசீந்திரசிவகுமார், திருமதி சி. கங்கேஸ்வரன், திரு. சி. ரவீந்திரன், திரு. க. பாஸ்கரன், திரு. த. யுவராஜன் திரு. ம. குருகுலசிங்கம், திரு. பொ. கோவிந்தராஜா, திரு. வா. லவக்குமார்

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி, திருமதி இ. அருளம்பலம், திரு. க. சந்திரகுமாரன், திரு. பொ. செல்வநாயகம், திரு. ப. சர்வேஸ்ரன், திரு. ச. இலங்கேஸ்வரன், திரு. பெ. அன்ரனி, திருமதி ஜ. இந்திரகுமாரன், திரு. அ. ஜெயநாதன்.

**புகைப்படத்தில் இல்லாதவர்கள்**

திருமதி எஸ். கணேசலிங்கம், திருமதி சி. கிருபாகரன், திரு. மு. சச்சிதானந்தம்

# பொருளடக்கம்


- சஞ்சிகை விபரம் ii
- மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின்... iii
- வலய கீதம் iv
- கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி v
- மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி vi
- சஞ்சிகைக் குழுச் செயலாளரின் சிந்தனையிலிருந்து vii
- சஞ்சிகை ஆசிரியரின் எண்ண அலைகள் viii
- சஞ்சிகைக் குழு விபரம் ix
- பொருளடக்கம் x
- பண்பெனப்படுவது 1 - 3
- சமாதானக் கல்வி பற்றிய நோக்கு 4 - 6
- எடுத்துரைப்பு உத்தி ஒன்று 7 - 12
- ஈழத்தில் நவீன கவிதையின் ஆரம்பகாலம் (1940 - 1950) 13 - 18
- பாடசாலைக்கு வெளியில் உள்ள வளங்களைக் கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாகப் பயன்படுத்துதல் 19 - 21
- கல்வி 22
- வறுமையும் புலமையும் 23
- The Dream of a child 24
- பரிகாரக் கற்பித்தல் எண்ணக்கரு 25 - 26
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒரு நோக்கு 27 - 29
- வரலாற்றுப் பாடம் கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுச் செயன்முறை ஆலோசனைகள் 30 - 31
- பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒரு பார்வை 32 - 34
- விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகளுக்கான விசேட கல்வியின் முக்கியத்துவம் 35 - 38
- க.பொ.த உயர்தர வகுப்புக்களில் "வாழ்க்கை மேம்பாட்டுக்கான தேர்ச்சி விருத்திச் செயற்றிட்ட நடைமுறை" 39 - 43
- ஆரம்பக் கல்வி மாணவர்களும் உடல் விருத்திச் செயற்பாடுகளும் 44 - 48
- ஆசிரியர்களின் வாண்மை விருத்தித் தேவைகளும் அதற்கான வாய்ப்புக்களும். 49 - 55
- கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்குக் கணித பாடம் கற்பித்தல் தொடர்பான ஓர் இலக்கிய மீளாய்வு 56 - 59
- The Art of Verse Speaking 60 - 63
- Meditation 64
- Diminishing trend of English literature in Batticaloa 65
- அதிபர் / ஆசிரியர்களுக்கான படிப்பு விடுமுறை - முழுநேர / பகுதிநேர (முழுச் சம்பளத்துடனான / சம்பளமற்ற) 66 - 68
- அரச பெறுகைச் செயன்முறையை விளங்கிக்கொள்ளல் 69 - 71
- உள்நாட்டுக் கடமைப் பிரயாணம் 72 - 74
- சிறிது சிறிது சிறிது 75 -76

# பண்பெனப்படுவது....

கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா
BA (Hons), MPhill, Dip-in-Edu, Ph.D
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
மாகாணக் கல்வித் திணைக்களம்,
திருகோணமலை.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்பது சங்கச் சான்றோர் வாக்கு. பண்பாடு என்றால் என்ன? அதன் பொருள் என்ன? இவ்வினாக்களுக்கான விடையை நம்மில் அறிந்தவர் சிலர். அறியாதவர் பலர் என்றே கூறலாம்.

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

என்றார் வள்ளுவப் பெருந்தகை. குடும்பப் பண்பாடு, பாடசாலைப் பண்பாடு, சமயப் பண்பாடு, இனப் பண்பாடு, மொழிப் பண்பாடு, சமூகப் பண்பாடு, நாட்டுப் பண்பாடு போன்ற இன்னோரன்ன பண்பாடுகள் பற்றி நாம் பேசுகின்றோம். இவ்வாறு பண்பாடு பற்றிப் பலவிதமாக வகுத்துக் கொண்டாலும் இப்பண்பாட்டின் அடிநிலை என்ன? இதற்கான விடையாகப் பெரும்பாலும் "சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாடே" என்று கூறலாம். பண்பட்ட நிலம் என்று நாம் கூறுவது போல பண்பட்ட மனம் என்றால், பண்பட்ட மனிதப் பாங்கு என்பதும் பொருளாகும். அவ்வாறாயின் பண்பாடு என்பது எங்கிருந்து முகிழ்க்கின்றது? இந்த மேன்மையை எவ்வாறு அடையலாம்? அன்பும் தர்மநெறிகளும் சுயமதிப்பும் தவறை ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் பிறர் குறைகளை மன்னிக்கும் மனோபாவமும் என வாழ்வியலில் இணையும் பொழுது மேன்மை அடையலாம். ஆனால் இதனைப் பண்பாடு என்று கூறிவிடலாமா? வள்ளுவப் பெருந்தகையார் ஒருவர் பண்புடையராதற்கான வழிமுறைகளை வரைவிலக்கணமாகக் கூறுகின்றார்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

யாவரிடத்தும் அன்புடையவராயிருத்தலும் உயர்வான குடியின் கண்ணே பிறந்திருத்தலும் பண்புடையவர் என்று சொல்லப்படுவதற்கான வழிமுறைகளாகும். எனவே, ஒருவருடைய உள்ளத்தில் அன்பு நிலை மட்டும் தோன்றினாலும் அதனைப் பண்பாடெனச் சொல்லிவிட முடியாது. நற்குடிப்பிறப்பும் அங்கே கருத்திலெடுக்கப்படுகின்றது. எனவே ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தின் பண்பாடு என நாம் கூறுவது அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவருடைய பண்பாடாகவும் அது வெளிக்கொணரப்படவேண்டும்.

பாண்பாட்டை நாகரிகம் என்றும் கூறலாம் என்பர் சிலர். பண்டைக் காலத்தில் பல நகரங்களில் ஏற்பட்ட ஆரவாரங்களைத்தான் நாகரிகம் என்ற வட்டத்தில் அடக்குகின்றனர். இந்து நாகரிகம் என்பது இந்துப் பண்பாடு என்பதும் ஒத்த பொருள் உடையனவா?

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

இக்குறட்பாவில் பகைவரின் மனங்கூடத் துன்பப்படாதபடி வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாட்டைத்தான் வள்ளுவர் நாகரிகம் என்கிறார். ஆதலால்தான் நம் முன்னர்

குறிப்பிட்டது போல சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே நாம் பண்பாடு என்கின்றோம். இப்பண்பாட்டின் வெளிப்பாடு சுவையுணர்வாகத் தோன்றலாம். நடை, உடை, பாவனைகளாகத் தோன்றலாம். வார்த்தைகளினூடாகவும் வெளிப்படலாம். இப்பண்பாடில்லாதவனைத்தான் நாம் காட்டுமிராண்டி என்கின்றோம். எனவே, வாழ்வியலில் பல்வேறு போக்குகளையும் இப்பாண்பாடென்பது தன்னுள் அடக்கிக்கொள்ளும். உள்ளத்தின் தூய்மை, இன்சொல், உடல் பற்றிய நன்னிலை இவைகூடப் பண்பாட்டினுள் அடங்கும். இவற்றின் உட்பொருள்தான் உண்மை, மெய்மை, வாய்மை என்ற நோக்கத்தில் வழங்கியிருக்கலாம். உண்மை பேசுவது என்பது எல்லாப் பண்பாடுகளிலும் விளங்கும் ஒரு பொது நிலையாகும். இவ்வுலகில் உள்ள மக்கள் எல்லோருமே பிறப்பில் ஒத்த தன்மையுடையவராய் இருக்கின்றனர். ஆனால், அவர்களின் செயல்களால் அவர்களின் சிறப்புகள் ஒத்திருப்பதில்லை.

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு
என்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

பண்பாடு, நம் மனநிலையைக் குறிப்பதென்றாலும்கூட அங்கேயும் நம் மனப்பாங்கு பல நிலைகளில் அமையக் காண்கின்றோம். கலைகள்பல அகத்தே தோன்றி புறத்தே வெளிப்படுவன. பற்பல கலைகளாலும் அந்தக் கலைகள் உயர ஓங்கும் நாகரிகத்தாலும் உள்ளங்கள் பண்படுத்தப்படுகின்றன. இதுபோலவே பல்வேறுபட்ட கல்விச் சூழ்நிலைகளால் வேறுபட்டு நிற்கும் மக்கள் கூட்டத்தின் நிலையில் ஒவ்வொருவனும் அப்போதைய நிலையை அடையப்பெறும் உள்ளுணர்வு நிலையும் அதன் விளக்கமும்கூடப் பண்பாடுதான். ஆனாலும் எவ்வளவுதான் உயர்வான கல்வியால் அறிவு பெற்றவனும் மக்கட் பண்பில்லாவிட்டால் அவன் மரத்துக்கு ஒப்பானவன் என்கிறார் வள்ளுவர்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்

வள்ளுவப் பெருந்தகையின் இக்குறட்பா, ஒருவன் அறிவினால் மட்டும் மேன்மை அடைந்துவிட முடியாது என்பதனை எடுத்துரைக்கின்றது.

ஒருவனது அகப்புற நிலையில் கலை, அறிவு முதலியன பண்பாட்டின் விளக்கமாக அமைவதாலும் ஒழுக்க நெறியும் பண்பாட்டின் விளக்கமேயாகும்.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

இக்குறட்பா பண்புடையாரது ஒழுக்க நெறியினாலேயே உலகம் நிலைத்திருப் பதாகவும் இல்லையேல் அது மண்ணில் புதைத்து மறைந்துவிடும் என்றார், வள்ளுவப் பெருந்தகை. ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்கள் எம் மத்தியில் சிறந்து விளங்குகின்றன. சங்க காலம் தொடக்கம் தற்காலம் வரையிலும் நீதி நூல்களுக்குத் தனியானதொரு இடமுண்டு. இளம்பிராயத்திலே நாம் குழந்தைகளுக்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நல்வழி, நீதி வெண்பா, நீதிநெறி விளக்கம் போன்ற நீதி நூல்களையே கற்றுக்கொடுக்கின்றோம். இந்நூல்கள் மனிதப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளையும்

எளிதாக, இனிதாக எடுத்துரைக்கின்றன. பல்வகைக் கூறுகளிலும் இருந்து முகிழ்த்தெழுந்த பண்பாடு, வளர்ந்து செல்லும் தன்மையுடையதாகின்றது. "தனிமனித மனப்பாங்கு வளர்ச்சி" உள்ளத்தில் ஆன்மிக ஒளியினையும் உண்டாக்கும் தன்மையுடையதாகின்றது. "தனிமனித மனப்பாங்கு வளர்ச்சி" உள்ளத்தில் ஆன்மிக ஒளியினையும் உண்டாக்க வல்லது. பண்பாட்டின் மேலான வெளிப்பாடாக வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் நீர்மையை உண்டாக்க வல்லது. சங்கப்புலவன் கணியன் பூங்குன்றனின் பண்பட்ட உள்ளத்திலிருந்து தோன்றியதுதான்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற அடிகொண்ட செய்யுளிள், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற நம்பிக்கையில் மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் கூறிய உண்மையில் எல்லாம் நாம் வாழ்ந்த வாழ்வின் நுட்பத்தைக் கண்டு மகிழ்கின்றோம். இவ்வாறு வளர்ந்த பண்பாடு **"திரைகடலோடியும் திரவியம் தேடு"** என்ற உலகத்தோடு ஒட்டிய பண்பாடாக வளர்ந்தது. இவ்வாறு வீறுகொண்ட உலகப் பண்பாட்டு இலக்கினை நோக்கி எமது இலக்கியங்கள் நகர்வதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. தெய்வப்புலவர் சேக்கிழார் தனது பெரியபுராணம் பாட எடுத்த முதலடி **"உலகெலாம்"** என்பதாகும். வாசகம் பாடிய மாணிக்கவாசகர்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றார்.

அதாவது எந்நாட்டவர்க்கும் உரிய இறைவனைத் தென்னாட்டவர் சிவன் என்றார். "உலகெங்கும் மேவிய தேவாலயந்தோறும் மேவிய பெருமானே" என்றார் அருணகிரிநாதர். பண்பாட்டின் ஒருமைப்பாட்டினால் விளையும் சமரச சன்மார்க்கத்தினை எடுத்துரைத்தோர் பலர். நல்ல குணங்கள் நிரம்பிய சான்றோர்களின், நல்ல செயல்களின் அளவிற்கு ஏற்ப உலக மக்கள் பண்பட்டு வாழ்வார்கள். அப்பண்பாட்டின் பயன் இல்லை என்றால் உலகம் அழிவது உண்மை. உலக வாழ்க்கையை இன்பமாகவோ துன்பமாகவோ அமைத்துக் கொள்ள மனிதனுடைய பண்பாடு காரணமாகின்றது. எல்லாருடனும் கலந்து உறவாடத் தெரியாததால் பண்பில்லாதவர்க்கு உலகியல் பற்றி அறிய முடியாததாகின்றது. இனிய குணங்களைப் பெற்றுப் பெரு மகிழ்ச்சியோடு வாழத் தெரியாதவருக்கு இன்பமயமாகக் காணப்படும் இவ்வுலகானது எப்போதும் துன்பமயமானதாகவே காணப்படும். இவ்வாறானவர்களிடம் காணப்படும் செல்வம்கூடப் பிறருக்குப் பயன்படாது. இதனை வள்ளுவர்,

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று என்றார்.

எனவே, பண்பாடு என்பதனை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. உள்ளத்தில் அதனை ஊன்ற வேண்டும். அது அன்பை ஊற்றெடுக்கச் செய்யும். அவ்வன்பு உள்ளத்தில் ஆன்மிக ஒளியை ஏற்றும். அவ்வான்மிகம்தான் எம்மை முழுமையடையச் செய்யும்.

**"பண்பாடென்பது துறைமுகம் போன்றது.**
**நாகரிகமென்பது அங்கு வந்துபோகும் கப்பல்கள் போன்றது."**

# சமாதானக் கல்வி பற்றிய நோக்கு

இரத்தினம் பாஸ்கரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம்.
மட்டக்களப்பு.

மாணவர்கள் சமாதானமான குடிமக்களாக வளர வேண்டும். அதற்கு, கல்வி அவர்களுக்கு உதவ வேண்டும். இக்கருத்து தற்காலத்தில் பிரபல்யம் அடைந்து வருகிறது.

இந்நாட்களுள் சமூகத்தில் நிலவும் சில கொடுமையான நிகழ்வுகளுள் சிறுவர்கள் அதிகமாகத் தள்ளப்படுகின்றனர். சிறுவர்களுடைய நடத்தைகள் சமாதான மற்றவையாக மாறுகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிறுவர்கள் மற்றவர்களை இம்சைப்படுத்துதல், ஏனையவர்களுடைய உடைமைகளை அழித்தல், குழுச்சண்டையிடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவரிடத்தே சமாதான எண்ணக் கருவினை வளர்ப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். சமாதானம் ஒரு பாடமல்ல. ஆனால் சமாதான எண்ணக்கரு அனைத்துப் பாடங்களிலும் கற்றல் கற்பித்தல் செயலொழுங்குகளிலும் ஊடுருவி இருத்தல் வேண்டும். வேறு வகையில் சொல்வதாயின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சமாதான எண்ணக்கரு ஒன்றிணைந்து இருத்தலாகும்.

அறிவு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கற்றற் செயற்பாடுகளினால் மாத்திரம் சமாதானத்தினைக் கொண்டுவர முடியாது. மாணவர்களிடத்தே சமாதான வாழ்க்கைக்குரிய பண்புகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இதன் வாயிலாக மாணவர்களிடத்தே அந்நியோந்நியமானதுமான வாழ்க்கை முறைக்குத் தேவையான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதோடு அவர்களை நாட்டின் சமாதானத்தை மேம்படுத்தச் செய்யக் கூடியவர்களாகவும் உருவாக்க முடியும் என நம்புகின்றோம்.

**சமாதானம் ஏன் தேவை ?**

- மகிழ்ச்சியாக வாழ்வதற்கு
- மனத்திருப்தியுடன் வாழ்வதற்கு
- அந்நியோந்நிய வாழ்க்கைக்கு
- தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு
- ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சிக்கு
- சமநிலை ஆளுமையை வளர்த்தெடுப்பதற்கு
- கல்வி அபிவிருத்திக்கு
- பொருளாதார அபிவிருத்திக்கு
- ஆன்மிக விருத்திக்கு
- பண்பாட்டு விருத்திக்கு

**தனிமனிதனிடத்தே காணப்பட வேண்டிய சமாதானத்திற்கான பண்புகள்.**

- அன்பு
- கருணை
- ஜீவகாருண்யம்
- உண்மை
- நேர்மை
- நீதி
- பொறுமை
- புரிந்துணர்வு
- விட்டுக் கொடுத்தல்
- பிறரை மதித்தல்
- பிறர் நலம் பேணல்
- ஒற்றுமை
- பரோபகாரம்
- பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- மனிதாபிமானம்
- நட்புறவு
- சமய, சமுகவிழுமியங்களை மதித்தல்
- எதிலும் நல்லதையே காணல்
- தன்னம்பிக்கை

**பாட உள்ளடக்கத்தினூடாகச் சமாதானத் திற்கான பண்புகளை விருத்திசெய்தல்.**

பாடசாலைகளில் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மூலமாகப் பிள்ளைகளில் சமாதானத்திற்கான சிறந்த பண்புகளை விருத்திசெய்ய முடியும். விளையாட்டுக்களைச் செயற்பாடுகளையும் சமாதானப் பண்புகளையும் வளர்த்தெடுக்கும் கருவிகளாகப் பயன்படுத்த முடியும்.

**பாடங்களினூடாகப் பிள்ளைகளுக்கு எவ்வாறு சமாதான எண்ணக்கருவினை விருத்திசெய்யலாம்?**

**மொழித்திறன் செயற்பாடுகள்**

மொழித்திறன்களை வளர்க்கத் தெரிந்தெடுக்கப்படும் கதைகள், பாடல்கள், கவிதைகள் போன்றவற்றில் சமாதானத் திற்கான நற்பண்புகள் உள்ளடக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

சிறுவர் நாடகம், அபிநயப் பாடல்கள், நடனங்கள், குழுவாகச் சேர்ந்து பாடுதல் போன்ற கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிடும் போது சமாதானத்திற்கான அம்சங்கள் உள்ளடக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

சுவரொட்டிகள், கையெழுத்துச் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் போன்ற தனியாள், குழுச் செயற்பாடுகளைத் திட்டமிடும் போது சமாதானச் சிந்தனைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

குழுச்செயற்பாடுகளைத் திட்டமிடும் போது வன்செயல்கள், குழப்பங்கள், முரண்பாடுகள், ஈவிரக்கமின்மை, பொறாமை போன்ற துர்க்குணங்களைத் தூண்டும் எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும்.

**கணிதப் பாடச் செயற்பாடுகள் :-**

கணிதச் செயற்பாடுகளைத் திட்டமிடும் போது பிரச்சினைகளைத் தீர்க்கும், சிந்தனைகளைத் தூண்டும் சந்தர்ப்பங்களைப் பிள்ளைகளுக்கு வழங்குவதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஒற்றுமை, கூட்டுணர்வு, பரஸ்பர உதவி போன்ற நற்குணங்களை விருத்தி செய்யும் வண்ணம் குழுச் செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும்.

பிள்ளைகளின் ஆற்றலுக்கேற்றதாகக் கணிதச் செயற்பாடுகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். படிப்படியாக அவர்களைக் கடினமான செயற்பாடுகளுக்கு இட்டுச்செல்ல வேண்டும்.

இப்படியாகச் செய்வதன் மூலம் ஒரு காரியத்தை நிறைவேற்றிய திருப்தியும், மகிழ்ச்சியும் அவர்களுக்கேற்படும். இது எதிர்காலத்தில் தம் வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களைச் சமாளிக்கத் தன்னம்பிக்கையை அவர்களில் ஏற்படுத்தும்.

**சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள் :-**

இப்பாடம் சுற்றாடல்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம், ஆக்கத்தொழிற்பாடு, உடற் கல்வி, செயற்பாடுசார்ந்த வாய்மொழி ஆங்கிலம், இணைப்பாட விதானச் செயற் பாடுகள் போன்ற பல பாடத்துறைகளைக் கொண்டுள்ளது. செயற்பாடுகளைத் திட்டமிடும் போது ஒவ்வொரு பாடத்துறையிலும் சமாதானத்திற்கான அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

சுற்றுலாக்கள், வெளிக்களப் பயணங்கள் கற்றல் குறிக்கோள்களை எய்துவது மாத்திரமன்றி புரிந்துணர்வு, பரஸ்பர உதவி, ஒற்றுமை, சமாதானச் சகவாழ்வு போன்ற மனப்பாங்குகளை விருத்தி செய்யும் சந்தர்ப்பங்களைப் பிள்ளைகளுக்கு வழங்கத்தக்கதாகவும் திட்டமிடப்பட வேண்டும்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மூலம் இயற்கையைப் பாதுகாத்தல், சூழல் மாசடைதலைத் தவிர்த்தல் போன்ற சமாதானப் பண்புகளை விருத்திசெய்தல் வேண்டும். உயிரினங்களில் பரிவு, தாவரங்களையும் மண்ணையும் பேணுதல் போன்றவற்றில் செயல்ரீதியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும்.

தனியாள் மற்றும் குழு ரீதியான பொதுநிகழ்ச்சிகளைத் திட்டமிடும் போது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் சமாதானத்திற்கான நற்பண்புகளை வளர்க்கும் ஆற்றல்களை வழங்கும் சந்தர்ப்பங்களைப் பிள்ளைகளுக்கு அளிக்கக் கரிசனை எடுக்க வேண்டும்.

வன்செயல், முரண்பாடு, துன்புறுத்தல், கோஷ்டி மோதல் போன்ற தீங்கிழைக்கும் கருத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதில் கரிசனை காட்ட வேண்டும். மாறாகப் பிள்ளைகளைச் சமாதானமும், மகிழ்ச்சியுமுள்ள சூழலில் வாழ வகை செய்ய வேண்டும்.

பிள்ளைகளை ஒன்றிணைத்துச் செயற்படும் குருளைச் சாரணீய பாசறைகளை ஒழுங்கு செய்தல், சமூகத்திற்கும் பாடசாலைகளுக்கும் நலன்தரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் போன்றவற்றில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், மனத்தை ஒருநிலைப்படுத்தல் போன்ற நற்குணங்களை வளர்க்க உதவும் சித்திரங்கள், இசை, நடனங்கள், நிறந்தீட்டல் போன்ற செயற்பாடுகளில் பிள்ளைகளின் ஈடுபாட்டைக் கூட்ட வேண்டும்.

**சமயப் பாடம் சார்ந்த செயற்பாடுகள் :-**

எல்லாச் சமயங்களும் சமாதான வாழ்வுக்கான நற்பண்புகளையே வலியுறுத்துகின்றன. சிறந்த கொள்கைகளும் (பிரசாரங்களும்) போதனைகளும் மாத்திரம் பிள்ளைகள் நல்லவர்களாகவும், பயனுள்ள பிரசைகளாகவும் வாழப் போதுமானவையல்ல. பாடசாலையின் உள்ளும், புறமும் அவர்கள் கற்றவற்றைக் கடைப்பிடிக்கப் போதிய சந்தர்ப்பங்களை ஆசிரியர்கள் வழங்க வேண்டும்.

உதாரணமாகப் பிள்ளைகள் பின்வருவன போன்றவற்றைச் செய்யத் தூண்டப்படலாம்.

- அன்றாடம் தாம் செய்யும் நல்ல செயல்களை நினைவுபடுத்திக்கொள்ளல்.
- தம் வீடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றத் தம் சகாக்களை அழைத்தல்.
- நற்காரியங்களுக்கு உதவுமுகமாக சிறு தியாகங்கள் செய்யும்படி ஆர்வப் படுத்தல்.
- அன்பு, நட்புறவு, ஒத்துழைப்புப் போன்ற நற்பண்புகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை ஆசிரியர்கள் ஒழுங்கு செய்யலாம்.
- பெற்றோரையும் வயோதிபர்களையும் கனம் பண்ணல், பிறர் உரிமைகளையும் கருத்துக்களையும் மதித்தல், நல்லொழுக்க சமய விழுமியங்களை மதித்தல் போன்றவற்றைச் செயற்படுத்தக் கூடிய சூழ்நிலைகளை உண்டாக்கலாம்.
- ஜீவகாருண்யம் தொடர்பான சமயக்கதைகளைப் பிள்ளைகள் பாத்திர மேற்று நடிக்கச் செய்தல்.
- சுற்றாடலிலும் வீட்டிலும் காணப்படும் தீங்கு விளைவிக்காத பிராணிகளிடத்தில் அன்பும் பரிவும் காட்டச்செய்தல்.
- பிறசமய விழாக்களிலும் பங்கு பற்றச் செய்தல்.
- சமயச் சடங்குகள், பழக்கவழக்கங்களினதும் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு அவற்றில் ஈடுபடச் செய்தல்.
- மேற்படி நற்பண்புகளைப் பிள்ளைகள் தம்மிடத்தே வளர்த்துக் கொள்வதற்கு ஆசிரியர்களும், பெற்றோரும் மற்றோரும் உதவி செய்ய வேண்டும்.

**"மொழி என்பது ஒவ்வொருவருக்கும் விழி போன்றது."**

# எடுத்துரைப்பு உத்தி ஒன்று

க. இரகுபரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கருத்துக்கள் மொழிவழியாக வெளிப்படுத்தப்படுகின்றன. சாதாரண பொதுமக்களுக்கு இடையிலான உரையாடல் முதற்கொண்டு உயர்தர இலக்கியம் வரையில் அவற்றின் நோக்கம், "கருத்து வெளிப்பாடே". ஒருவர் வெளிப்படுத்தும் கருத்து, சென்றடைய வேண்டியவரிடத்து எவ்வளவு தாக்கத்தைச் செலுத்துகிறதோ அவ்வளவுக்கு அந்தக் கருத்தைச் சொன்னவரிடம் மொழியாற்றல் இருக்கிறது என்று தீர்மானிக்கலாம். சொல்லாற்றல் அல்லது எழுத்தாற்றல் மிக்கவர்கள் தங்கள் எண்ணத்தை இலகுவாகச் சாதித்துவிடுவார்கள். அதாவது, தாங்கள் கூற முற்படும் கருத்தைக் கேட்பவன் / படிப்பவன் உடம்படும்படியாக அவர்கள் செய்துவிடுவார்கள் உடம்படச்செய்ய முடியவில்லையாயினும் குறைந்தபட்சம் தாம் கூறுவதை விரும்பிக் கேட்கும்படி / வாசிக்கும்படியாவது செய்துவிடுவார்கள்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

கூறவந்த விடயத்துக்கு ஏற்ற - மிகப் பொருத்தமான சொற்களைக் கையாள்வது, ஒழுங்குபட - தர்க்கரீதியாகச் சொல்வது, விடயத்துக்கு ஏற்ற உணர்ச்சியோடு - பாவத்தோடு சொல்வது, கேட்பவனுடைய நிலைக்கேற்ற, பேசும் விடயத்துக்கேற்ற தொனியைக் கையாள்வது, பொருத்தமான அணிகளை - உத்திகளைக் கையாள்வது என்று பல்வேறு விடயங்களில் அந்த மொழியாற்றல் தங்கியுள்ளது.

இத்தகைய விடயங்களிற் காட்டப்படும் நுட்பத்தை, பொதுவாக எடுத்துரைப்பு உத்தி என்று குறிப்பிடலாம். பேசுபவன் / எழுதுபவன் எந்த அளவுக்குத் தற்புதுமையான எடுத்துரைப்பு உத்திகளைக் கையாள்கிறானோ அந்த அளவுக்கு அவன் ஆற்றல் உடையவனாகக் கருதப்படுவான். எடுத்துரைப்பு உத்தியிலே காட்டும் நுட்பம்தான் ஒருவனைப் பேச்சாளன் / எழுத்தாளன் ஆக்குகின்றது. அப்படியல்லாது விடயத்தை நேரடியாக - சுவை எதுவும் அற்றவகையிலே கூறுபவன் மொழியாற்றல் உள்ளவனாகக் கணிப்பிடப்படமாட்டான். ஒருவன் எதைக் கூறுகிறான் என்பதைச் சுலபமாகக் கண்டுவிடலாம் ஆனால், எப்படிக் கூறுகிறான் என்பதைக் கண்டறிய, நுட்பமான கலையுணர்வு, இரசனையுணர்வு வேண்டும். நாம், பெரும்பாலும் படைப்பாளி எதைக் கூறுகிறான் என்ற அளவிலே நம் விமர்சனங்களை முடித்துவிடுகிறோம். இலக்கிய விமர்சனத்தைப் பொறுத்தவரையில் எப்படிக் கூறுகிறான் என்ற ஆராய்ச்சியும் இன்றியமையாதது. உண்மையில் படைப்பாளி எதை, எப்படிக் கூறுகிறான் என்று காணும்போதே படைப்பாளியின் ஆழ்ந்திருக்கும் கவிதையுளத்தைக் காண்பது பூரண சாத்தியமாகும்.

இலக்கியங்களிலே எண்ணற்ற எடுத்துரைப்பு உத்திகள் கையாளப்பட்டுள்ளன. ஒரே வகையானதாகக் கொள்ளப்படுகின்ற எடுத்துரைப்பு உத்திகளிலேகூட ஒவ்வொருவரும் தத்தம் தனித்துவங்களைக் காட்டுதல் சாத்தியமானதே. அத்தகையவர்கள் தற்புதுமைத்துவம்

உடைய படைப்பாளிகளாக மிளிர்கிறார்கள். அவ்வகையில், எடுத்துரைப்பு உத்தியொன்றை வெவ்வேறு நபர்கள் எவ்வெவ்வாறு தற்புதுமையோடு கையாண்டார்கள் என்பதைக் காட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம். முதலில் (எளிமை கருதி) அறிவுபூர்மான கட்டுரை ஒன்றிலே வருகின்ற ஒரு பகுதியை நோக்குவோம்.

> "மனிதன் இதுவரை எத்தனையோ அரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கிறான். நீர்வளம், நிலவளம் மிகுந்து நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்துவந்த அழகிய பெரிய நகரங்களையும் கணநேரத்தில் உயிரினமே வாழமுடியாத நாசபூமியாக அழிக்கக்கூடிய அணுக்குண்டை இயற்றியிருக்கின்றான். நாம் பிரயாணம் செய்வதற்குத் தக்க ரெயில், மோட்டார்கார் முதலிய தன்னியங்கி ஊர்திகளை அமைத்திருக்கின்றான். மணி ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரம் வானவழியாக நம்மைக் கொண்டு செல்லவல்ல ஆகாய விமானங்களைச் சிருஷ்டித்திருக்கிறான். எஞ்சினியரிங் துறையில் 'பெனாமா' கால்வாய் முதலிய பிரும்மாண்டமான வேலைகளை இயற்றி முற்றுவித்திருக்கிறான். சில மணிக் கூறுகளில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களை வெளியிட்டு அறிவை உலகெங்கும் பரப்பிவரும் அச்சியந்திரங்களை நிருமித்திருக்கிறான். இவையெல்லாம் அற்புதமான செயல்களேயாகும் ஆனால், இவற்றுக்கெல்லாம் மேலான அற்புதத்தையும் அவன் (மனிதன்) இயற்றியிருக்கிறான். அது யாது என்றால் அவன் பேசக் கற்றுக் கொண்டதும் எழுதக் கற்றுக் கொண்டதும்தான்."

இது 'மொழியின் அற்புத இயல்பு' என்ற தலைப்பிலே எழுதப்பட்ட கட்டுரையின் தொடக்கப் பகுதி. இக்கட்டுரையினை எழுதியவர், தமிழ் ஆய்வுலகின் தலைசிறந்த ஆளுமைகளுள் ஒன்றாகக் கருதப்படும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அறிவுபூர்வமான உண்மைகளைக் கல்வியாளர்கள் மாத்திரமன்றி, சாதாரண வாசகனும் உளங்கொள்ளத்தக்க வகையிலே எழுதுவது பெரும் ஆய்வாளரான வையாபுரிப்பிள்ளையின் தனிச்சிறப்பு.

இங்கு மேற்கோளாகத் தரப்பட்ட பகுதியிலே, மொழியின் அற்புத ஆற்றலும் அந்த அற்புத ஆற்றலை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை என்ற யதார்த்தமும் மிக அற்புதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மொழியின் ஆற்றலை உணர்த்த முற்படும் ஆசிரியர் முதலில், தான் எடுத்துக்கொண்ட விடயத்தோடு நேரடித் தொடர்பு இல்லாத சில விடயங்கள் பற்றிப் பேசுகிறார். அதாவது மனித குல வரலாற்றில் மனிதனால் நிகழ்த்தப்பெற்ற பெருஞ் சாதனைகள் சிலவற்றைப் பட்டியற்படுத்துகிறார். அணுகுண்டை இயற்றியமை, மின்சாரத்தையும் ரேடியோவையும் கண்டுபிடித்தமை, நவீன ஊர்திகளைக் கண்டுபிடித்தமை, ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தமை, வியத்தகு பொறியியல் நிர்மாணங்களை மேற்கொண்டமை அச்சியந்திரங்களை உருவாக்கியமை என்பவை அவை. இவை யாவும் ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் பெருங்கண்டுபிடிப்புக்களாக அறிமுகமானவை. மேற்படி, கட்டுரை இன்றைய காலகட்டத்தில் எழுதப்பட்டிருப்பின் இப்பட்டியல் இன்னும் நீண்டிருக்கக் கூடும்; அதேவேளை இப்பட்டியலில் உள்ளவற்றிற் சில விடுபட்டிருக்கவும் கூடும். ஏனெனில் இவற்றுட் சில இன்று எமக்குப் பெரிய விடயமாகப் புலனாகாமையே. அந்த அளவுக்கு விஞ்ஞானத்துறை விரைந்து முன்னேறி வருகிறது. அது வேறு விடயம். இங்கு எமக்கு வேண்டியது, மேற்கண்டவாறு சாதனைகளைப் பட்டியற்படுத்துவதன் மூலம் ஆசிரியர் எதனைச் சாதிக்க முற்படுகிறார் என்பதை அறிவதே.

வையாபுரிப்பிள்ளை மனித சாதனைகளை வெறுமனே பட்டியற்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. அச்சாதனைகளின் பெருமை புலப்படும்படியாக அவை ஒவ்வொன்றையும் நீண்ட நீண்ட அடைமொழிகளால் சிலாகித்துப் பேசுகிறார். எடுத்துக்காட்டாக அணுக்குண்டைக் கண்டுபிடித்தமை பற்றிக் கூறவந்த ஆசிரியர், அதனைச் சிலாகிக்குமாற்றினை நோக்குவோம்.

> "நீர் வளம் நில வளம் மிகுந்து நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்த அழகிய நகரங்களையும் கணநேரத்தில் உயிரினமே வாழமுடியாத நாசபூமியாக அழிக்கக் கூடிய அணுகுண்டை இயற்றினான்."

இந்த அடைமொழியின் தாற்பரியத்தை இனி நோக்குவோம்.

- நீர் வளம் நில வளம் மிகுந்தனவான....
- மனிதன் காட்டுமிராண்டியாய் இருந்து படிப்படியாக நாகரிக மனிதனாக எடுத்த கோடிக்கணக்கான கால ஓட்டத்தின் பின்னர் அந்த நீண்ட கால முயற்சியின் பெறுபேறான...
- மக்களின் இன்ப வாழ்வுக்கு ஆதாரமான...
- அழகு மிக்கனவான..
- பெரியனவான..
- இலட்சக் கணக்கான மக்களின் வாழ்விடமான

நகரங்களை,

- கணப்பொழுதிலே
- உயிரினமே வாழமுடியாத நாசபூமியாக ஆக்கவல்லது அணுக்குண்டு.

அத்தகைய ஆற்றல் வாய்ந்த அணுக்குண்டைக் கண்டுபிடித்த மனித ஆற்றல் அபாரமானது.

இவ்வாறாகப் பலவகையிலே, மனித ஆற்றலை உணர்த்துவனவான காரியங்களை அவ்வவற்றின் பெருமையை உணர்த்துவனவான அடைமொழிகளோடு தந்து, வியப்பினை ஏற்படுத்தவிட்டு,

> "இவையெல்லாம் அற்புதமான செயல்களேயாகும். ஆனால், இவற்றுக்கெல்லாம் மேலான அற்புதத்தையும் அவன் (மனிதன்) இயற்றியிருக்கிறான். அது யாது என்றால் அவன் பேசக் கற்றுக் கொண்டதும் எழுதக் கற்றுக் கொண்டதும்தான்."

என்று கூறும்போது மொழியைக் கண்டுபிடித்தமை என்ற மனித ஆற்றல் ஏனை யாவற்றையும் விட உச்சத்துக்கு உயர்ந்து விடுகிறது. மொழி என்பது மனித சமுதாயத்தின் உற்பத்தி என்ற அறிவுபூர்வமான உண்மையும் உணர்த்தப்படுகிறது. மனித சமுதாயத்தின் கண்டுபிடிப்பு யாவற்றுக்கும் அடிப்படையாக அமைவது அவனிடமுள்ள சிந்திக்கும் ஆற்றலே என்பதும் அச்சிந்தனையாற்றலுக்கு அத்திவாரமாய் அமைவது மொழியே என்பதுமான பேருண்மைகள் சொல்லாமலே புலனாகின்றன. இவ்வாறாக மொழியினது அற்புத ஆற்றல் நன்கு உணர்த்தப்பட்டுவிடுகிறது. ஆசிரியர் தன்னுடைய நோக்கை இலகுவில் எய்திவிடுகிறார்.

வையாபுரிப்பிள்ளை கையாண்ட அதே உத்தியை அவருக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பாரதியும் கையாண்டுள்ளான். வையாபுரிப்பிள்ளை மொழியின் அற்புத ஆற்றலை உணர்த்த முற்பட்டார். பாரதி, இசையின் அற்புத ஆற்றலை உணர்த்த முற்பட்டான். அவர் கட்டுரையிலே கையாண்ட உத்தியைப் பாரதி கவிதையிலே கையாள்கிறான். ஆதலால் கவிதைக்குரிய நளினங்கள் எல்லாம் அதிலே கலந்துள்ளன. குயிற்பாட்டு என்ற பெயரிலான குறுங்காவிய வடிவிலான - பாரதியின் கவிதைப் படைப்பிலே வரும் ஒரு பாத்திரம் குயில். அதன் இசையிலே கட்டுண்டுபோன ஒரு பாத்திரக் குரலாக, பாரதி பாடுகிறான். உலகப் படைப்புக்கள் அத்தனையும் நான்முகனாற் படைக்கப் பட்டன என்ற இந்திய புராண மரபின் அடிப்படையில் நான்முகனை நோக்கி அவனுடைய படைப்புகளின் பெருமையை எடுத்துரைக்கும் பாங்கில் இசையின் பெருமையை உணர்த்த முற்படும் அந்தக் கவிதைப் பகுதி வருமாறு:

"... நான்முகனே!
பண்டே உலகு படைத்தனைநீ என்கின்றார்.
நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்
நீரை, பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்
காற்றை முன்னே ஊதினாய் காணரிய வானவெளி
தோற்றுவித்தாய் நின்தன் தொழில் வலிமை யாரறிவார்?
உள்ளந்தான் கவ்வ ஒருசிறிதும் கூடாத
கொள்ளைப் பெரிய உருக்கொண்ட பல கோடி
வட்ட உருளைகள் போல் வானத்தில் அண்டங்கள்
எட்ட நிரப்பி, அவை எப்போதும் ஓட்டுகிறாய்!
எல்லாம் அசைவில் இருப்பதற்கே சக்திகளை
பொல்லாப் பிரமா, புகுத்திவிட்டாய் அம்மாவோ!
காலம் படைத்தாய் கடப்பதிலாத் திக்கு அமைத்தாய்
ஞாலம் பலவினிலும் நாள்தோறும் தாம் பிறந்து
தோன்றி மறையும் தொடர்பாப் பல அனந்தம்
சான்ற உயிர்கள் சமைத்துவிட்டாய், நான்முகனே!
சால மிகப் பெரிய சாதனைகாண் இவை எல்லாம்
தாலம் மிசை நின்றன் சமர்த்து உரைக்க வல்லார் யார்?
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவிலுமே
கானாமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!
காடு, நெடுவானம், கடல் எல்லாம் விந்தை எனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!
பூதங்கள் ஒத்து புதுமைதரல் விந்தை எனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசை தரும் இன்பம் உவமை இலா இன்பமன்றோ!"

பஞ்சபூதம் முதலானவற்றின் தன்மைகளைப் பொருத்தமான வகையிலே விபரிக்கிறான் பாரதி. (உ-ம்: 'காணரிய வானவெளி', 'கடப்பதிலாத் திக்கு' என்னுத் தொடர்களில் உள்ள நுட்பங்களைக் காண்க.)

பால்வெளியிலே உள்ள அண்டகோளங்களின் தன்மையையும் தொகையையும் எண்ணி அதிசயிக்கிறான். 'காணரிய வானவெளி'யாகிய அந்தரத்திலே அவற்றை ஓயாது

ஓடவும் ஒன்றில் ஒன்று மோதாது சுழலவும் சக்திகளைப் புகுத்தி, உயிர் வர்க்கங்களையும் படைத்துவிட்ட பிரமனின் ஆற்றல் நன்கு புலப்படும்படியான குறிப்பு மொழியிலே 'பொல்லாப் பிரமா!' என விளிக்கிறான். 'அம்மாவோ' என ஆச்சரியத் தொனி எழுப்புகிறான். இவ்வாறு பிரபஞ்சப் படைப்புப் பற்றிய விபரிப்பிலே பல்வேறு வழிகளிலே அதிசய பாவத்தைக் கொண்டுவர முனைகிறான் பாரதி. அதிசயம் யாவிலும் மேம்பட்ட அதிசயமாக இசையைக் காட்டுவதற்கே இந்த முயற்சியிலே பாரதி ஈடுபடுகிறான் அல்லாது, பிரபஞ்சப் படைப்பைப் பற்றி வியப்புறுத்துவது அல்ல பாரதியின் நோக்கம்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அருளாளரான மாணிக்கவாசகரும் இதே பாங்கிலே இந்த உத்தியைக் கையாண்டிருக்கிறார் - இறைவனின் பெருமையை உணர்த்துவதற்காகக் கையாண்டிருக்கிறார். 'திருவண்டப் பகுதி' என்ற நெடும்பாடலை மாணிக்கவாசகர் இந்த எடுத்துரைப்பு உத்தியோடுதான் ஆரம்பிக்கிறார்.

ஆராய்ந்து பார்க்குமிடத்து இந்தப் பேரண்டமானது உருண்டையான வடிவும் எல்லையற்ற ஆற்றலும் வளம் மிக்க தோற்றமும் கொண்ட பல்வேறு அண்டங்களைக் கொண்டது. அவை ஒவ்வொன்றையும் நின்று கணக்கிட்டுக் கூறுவோமானால் அவற்றின் எண்ணிக்கை நூற்றொரு கோடியையும் மிஞ்சிவிடும். அவை அளவில் விரிவுறும் பெருமையும் பருமையும் உடையன. ஆனால், அவை யாவற்றையும் இறைவனோடு ஒப்பிட்டு நோக்குவோமானால் அவை யாவும், வீட்டுத் துவாரத்தினூடாக நுழையும் சூரிய ஒளிக்கதிரில் புலனாகின்ற நுண்ணிய, நெருக்கமான தூசுகளுள் ஒன்று என்னும்படியாகச் சிறுத்துவிடும். அந்த அளவுக்கு இறைவன் எல்லை கடந்த பெரியவனாகத் திகழ்கின்றான் என்று இறைவனின் பெருமையை உணர்த்த முற்படுகிறார் மாணிக்கவாசகர். அண்டத்தின் இயல்பினை - அதன் பெருமையை அதிசயச் சுவைபடக் கூறி அவையெல்லாம் 'தூசு' என்னும்படிக்கு இறைவன் பெரியவன் என்று உரைக்கும் 'திருவண்டப் பகுதி'யின் தொடக்கப் பகுதி வருமாறு:

> "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
> அளப்பரும் தன்மை வளப்பெரும் காட்சி
> ஒன்றனுக்கு ஒன்று நின்று எழிப் பகரின்
> நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.
> இல் நுழை கதிரின் துன் அணுப் புரையச்
> சிறியவாகப் பெரியோன்..."

(உலகம் உட்பட்ட கோளங்கள் யாவும் உருண்டை வடிவானவை, எண்ணுக் கணக்கற்றவை என்ற உண்மைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உணரப்பட்டிருந்தன என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.)

மாணிக்கவாசகர் இறைவனின் பெருமையை உணர்த்துவதற்குக் கையாண்ட உத்தியை, இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையார், இறை அடியார் பெருமையை எடுத்துரைப்பதற்காகத் தற்புதுமையோடு கையாள்கிறார். இங்கு நாம் அவதானித்தவர்கள் யாவரிடமும், பெரிய விடயம் ஒன்றையோ பலவற்றையோ அடைமொழிகளாற் பெரிதுபடுத்திக் கூறிவிட்டு, பிறிதொன்றை இத்தகைய பெரியன யாவற்றையும் விடப் பெரியது எனக் காட்டி நிலைநிறுத்துவதன் மூலம் முன்னைய யாவற்றையும் சிறியனவாக்கி விடுகின்ற தன்மையைக் கண்டோம். ஔவையாரோவெனின் பெரியது என ஒன்றைக் கூறிவிட்டு, அதைவிட இன்னொன்று பெரியது, அந்த இன்னொன்றை விட மற்றொன்று

பெரியது என்று ஏறுவரிசையிலான ஒரு அடுக்கமைவு முறையிலே பெரியன யாவிலும் பெரியது என யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்ற தெய்வத்தை நிலைநிறுத்திவிட்டு யாரும் எதிர்பாராத வகையிலே, இறையடியாரை இறைவனைவிடப் பெரியவராக நிறுவும் முறை தற்புதுமையானது. ஔவையாரின் இந்த எடுத்துரைப்புக்கு இந்தியப் புராணகதை மரபுகள் அடிப்படையாக அமைந்தன. குறித்த ஔவை பாடல் வருமாறு:

“பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரியது பெரியது புவனம் பெரியது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியாமல் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அயலகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!”

கொடியது, இனியது, அரியது என்பன தொடர்பாக ஔவையார் பாடிய பாடல்களும் இதே உத்தியில் அமைந்தனவே.

பாரதிதாசனின்,

“கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்”

என்ற கவிதையிலும், இந்த உத்தியே பிறிதொரு வகையில் மிக எளிமையாகக் கையாளப்பட்டுள்ளது எனலாம். பல விடயங்களை வரிசைப்படுத்தி, அவை தனக்கு இன்பம் தருவன என்றவர், இறுதியில் தமிழை நிறுத்தி அதைத் தனது உயிர் என்கிறார். இன்பம் தருவன யாவும் சிறந்தனவே. ஆனால் உயிர், அவையெல்லாவற்றையும் விட எவ்வளவோ மேம்பட்டதல்லவோ?

இவ்வாறு இலக்கிய உத்தியொன்று, நெடுங்காலமாகப் பல்வேறுபட்டவர்களால், அவரவர் தனித்துவம் மிளிரக் கையாளப்பட்டுள்ளமையைக் கண்டோம். ஆயின், இத்தகைய உத்தியொன்று இலக்கியங்களிற் பயின்று வருவதாக, தமிழ் அணியிலக்கண நூல் எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. ஆதலால் இந்த உத்திக்குப் பொருத்தமான பெயரொன்று சூட்டப்பட வேண்டியுள்ளது.

# ஈழத்தில் நவீனகவிதையின் ஆரம்பகாலம் (1940 - 1950)

பேராசிரியர். செ. யோகராசா -
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் ஆரம்பகாலமாக இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகள் காலப்பகுதி (1940-1950) அமைகின்றது. இவ்வாறு இக்காலப்பகுதியில் நவீன கவிதை முகிழ்ப்பதற்கான காரணங்கள் யாவை என்பது பற்றி முதலில் நோக்குவது இவ்வேளை அவசியமாகின்றது. இதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை இனங்காணமுடிகின்றது.:

**(i)** நவீனமயவாக்கம் (Modernization) பரவலடைந்தமை:

தொடர்ந்து நிகழ்ந்து வந்த ஆங்கில ஆட்சியினாலேற்பட்ட நவீன மயவாக்கம் (சமூக, அரசியல், பொருளாதார முறைகளிலேற்பட்ட மாற்றங்களே நவீன மயவாக்கம் என்பது) இக்காலத்திலே மேலும் விரிவடைந்துள்ளது. உதாரணமாக, அரசியலைப் பொறுத்தவரை சோல்பரி ஆணைக்குழுவும் அதனாலேற்பட்ட மாற்றங்களும் கம்யூனிஸ்ற் கட்சி உருவானமை, தமிழரசுக்கட்சி உருவானமை. கல்வித்துறையைப் பொறுத்தவகையில் இலவசக் கல்வி முறை அமுலுக்குவந்தமை.

**(ii)** நவீனம் (Modern) பற்றிய பிரக்ஞை தோற்றம் பெற்றமை:

நவீன இலக்கியத்தின் அடிப்படை "நவீனம்" பற்றிய பிரக்ஞையேயாகும். இக்காலத்திலேயே இவை தொடர்பான கட்டுரைகளும் சர்ச்சைகளும் பரவலாக இடம்பெறுவதை அவதானிக்கின்றோம். மறுமலர்ச்சியில் இவ்வாறான கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

நவீன இலக்கியத்தின் அடிப்படைகளுள் தலையாயது, அனுபவத் திளைப்பு ஆகும். இத்தகைய அனுபவங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு இலவசக் கல்வியினால் இப்போது பெருமளவு ஏற்படுகின்றது. கிராம, நகரம் ஊடாகவும் நிகழ்கின்றது. எழுத்தாளரொருவர் இதுபற்றி இவ்வாறு நினைவு கூர்கின்றார்.:

"வாலிபத்தின் வைகறையிலே பள்ளி மாணவனாக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்துவிட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகைவண்டியில் செல்கையில் சிலசமயம் தன்னந்தனியாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்போது என் கண்கள் வயல் வெளியையும் தூரத்தொடுவானையும் உற்று நோக்கும்.... உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம்.... உலகையே என் சிந்தனையால் அளந்துவிட வேண்டுமென்று பேராசைகொண்ட காலம்"

**(iii)** புதிய தலைமுறை உருவாக்கம்:

மேற்கூறிய சூழலில் உருவான தலைமுறை முன்னைய தலைமுறையிலிருந்து வேறுபட்டிருந்தது. ஆங்கிலங் கற்றவராகவும் நகர வாழ்க்கையில் நாட்டமுள்ளவராகவும் (பண்டிதர்களாகவும் தமிழாசிரியராகவும் அல்லாமல்) இவர்களிருந்தமை நவீன இலக்கிய உருவாக்கத்திற்கு ஏற்புடையதாகக் காணப்படுகின்றது. நவீன கவிஞர்களது கவிதைப் போக்குகளைத் தமிழ்ப்பண்டிதர்கள் கிண்டல் செய்த சூழலில்

நவீன கவிஞர்கள் தம்மை 'மஹாகவி' (து.உருத்திரமூர்த்தி) என்றும் கவீந்திரன் (அ.ந.கந்தசாமி) என்றும் பிரகடனப் படுத்துகின்ற சுவையான சம்பவங்களும் நடைபெறுகின்றன.

**(iv) எழுத்தாளர் சங்கம் / இலக்கியச் சங்கம் முதலியன உருவானமை:**

முதன்முதலதாக எழுத்தாளர் சங்கம் இக்காலப்பகுதியிலேயே உருவாகியது.
உ-ம் :- மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கம் (1942)

**(v) இலக்கியச் சஞ்சிகைகளின் தோற்றம்:**

நவீன இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் இலக்கியச் சஞ்சிகைகளின் வரவிலேயே தங்கியுள்ளன. அது மட்டுமன்றி நவீன இலக்கிய - சிந்தனைகளை வெளிப்படுத்துவனவும் இவையே. இவ்விதத்தில் இக்காலப்பகுதியில் பாரதி (கொழும்பு), மறுமலர்ச்சி (யாழ்ப்பாணம்), பாரதி (மண்டூர்) எரிமலை (திருகோண மலை), உதயன் (மட்டக்களப்பு) முதலிய இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவந்தமை கவனத்திற்குரியது.

**(vi) தமிழகத் தொடர்பு:**

ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் நவீனமயவாக்கம் மட்டுமன்றி தமிழ்நாட்டுத் தொடர்பும் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில் இக்காலப்பகுதியில் தமிழ்நாட்டில் வெளிவந்தவற்றுள்ள "கிராம ஊழியன்" சஞ்சிகை இங்கு ஏற்படுத்திய செல்வாக்கு முக்கியமானது. முப்பதுகள் அளவிலே இங்கு ஏற்பட்ட பாரதியாரின் செல்வாக்கு இப்போதும் தொடர்கின்றது. சஞ்சிகையின் பெயரொன்று 'பாரதி'யாக (கொழும்பு) இருக்கின்றது. இன்னொரு சஞ்சிகையின் (பாரதி - மண்டூர்) மகுடவாசகம் பாரதியாரின் கவிதைக்குரியது (உ-ம் :- சாதிச்சண்டை போச்சோ - உங்கள் சமயச் சண்டை போச்சோ)

பாரதியார் சிறப்பு மலரும் வெளிவருகின்றது. அனைத்தையும் விட, நவீனத்தின் குறியீடாகவே பாரதியார் கருதப்பட்டமை இலக்கிய ஆர்வலறிந்த விடயமே. இத்தகையவரான பாரதியாரின் செல்வாக்கு ஈழத்தில் இடம்பெற்றமை விதந்துரைக்கத்தக்கதே.

மேற்கூறிய சூழலிலே இவ் ஆரம்ப காலப்பகுதியில் உருவான, பரவலாக அறியப்பட்ட புதிய தலைமுறைக் கவிஞர் களுள் மஹாகவி, நாவற்குழியூர் நடராசன், அ. ந. கந்தசாமி, சாரதா முதலானோர் முக்கியமானவர்கள். பரமஹம்சதாசன், அன்புதாசன், மூனாகானா, கவி.ஜி.எம். செல்வராஜ் முதலானோர் பரவலாக அறியப்படாதவர்கள்.

மேற்கூறிய கவிஞர்களது கவிதை களின் உள்ளடக்கமாக அமைந்தவற்றுள் முக்கியமானவை:

(i) கிராமம் / ஊர்பற்றிய அனுபவப்பதிவு.
உ-ம் :- கிராமம் - மஹாகவி

நாள் முழுதும் பாடு படுவார்கள் :-ஓயார்;
நன்று புரிவார்! இரங்கு வார்கள்
ஆள் புதியன் ஆனாலும்
ஆதரிப்பர்; போய் உதவுவார்கள் - ஊரார்கள்

மாரிகளில் ஆறு வழிந்தோடும்; - இம்
மக்களும் மகிழ்வடைதல் கூடும் !
ஏரை எடுப்பார் உழுவார்;
எங்கும் பயிர் காற்றில் அசைந்தாடும்; -
பசுமை நீடும்

நீண்ட வயலில் மழைநீர் தேங்கும்;
நெற்பயிர்கள் அங்கதனை வாங்கும்; -நகை
பூண்ட இளம் பாவையர்கள்
போன்று அவை பொற்கதிர்கள் தாங்கும் -
எப்பாங்கும்!

தோப்புகளில் மாமரம்ப ழுக்கும்; - கிளை
தொத்தும் அணில், சிறுவர்கள், கிளிக்கும்
சாப்பிட அளிக்கும் அது
சண்பகப்பூக் காற்றினில் மணக்கும் -
உயிர்களிக்கும்.

ஆட்டிடையன் பாட்டினிமை கூட்டும்!
அந்த இசை வந்து அயர்(வு) ஓட்டும் -
கால்
நீட்டி அதோ வேப்பமர
நிழலிற் படுத்துறங்கு; பாட்டும் - தா லாட்டும்!

பூமலியும் பொய்கை மகிழ் வாக்கும்; -
அங்கு
போ; அருகில் குயில் பாடல் கேட்கும்!
நீமடிந்த தென்றிருந்த
நின் கவிதை யுணர்வுதலை தூக்கும் -
பாஆக்கும்!

**(ii)இயற்கை அனுபவப்பகிர்வு:**

தாமரை மங்கை
- நாவற்குழியூர் நடராசன் -

ஆருக்கும் எட்டாத வாவியில் - நீர்
ஆடிக் குதிக்கிறாள் தாமரை;
பாருக்கு மேல் நின்று பார்க்கின்றான் -
அந்தப்
பருவ மங்கையின் காவலன்.

கண்ணைச் சிமிட்டிநட் பூட்டுறாள் - ஒற்றைக்
காலினில் நர்த்தனங் காட்டுகிறாள்;
மண்ணை மயக்குதக் காதலன் - அவள்
மாண்பினைக் கண்டு செய் புன்னகை.

தன்னை மறந்து நின்றாடுறாள் - அவன்
தன்திசை போகவும் ஊடுகிறாள்;
மின்னைப் பழித்திடும் மேனியாள் - இதழ்
மெல்லக் குவிப்பதும் கொஞ்சவோ?

யாரை நீ கொஞ்சமுன் சாய்கிறாய் - அட
யாருமில்லாத இவ்வேளையில்?

ஊரைநீ ஒண்நகை காட்டி ஏன் - வெறும்
உன்மத்த மாக்கினாய் ஊர்வசீ?

மானடி உன்னெடு நோக்குகள் - அதில்
மருண்டு போகுதென் வாக்குகள்;
ஏனடி இத்தனை நாட்டியம்? - இதில்
எத்தனை பேரை நீ வாட்டுறாய்?

**(iii) காதல் அனுபவங்கள்:**

:- உ-ம்

காதலுக்காய் மணக்க வேண்டாம்'
- மஹாகவி -

எண்ணமெல்லாம் நானாகி, இரவில் பாதி
இமை திறந்த படியேநீ இருப்பதெல்லாம்
பெண்ணரசி, அறிவேன்நான், நான்
உனக்காய்ப்
பிறந்திருப்ப தறிவாய் நீ எனிலும்கேள், இம்
மண்ணிலே வளர்கின்ற பயிர்தான் காதல்
மாறும், கூடும், குறையும், மடியக்கூடும்!
விண்ணிவர்ந்த பொருளல்ல, காமமென்ற
வேர் விட்ட தளிர்தானே காதல் கண்ணே!

ஆதலினால் சொல்கின்றேன் எனது கைக்குள்
அகப்பட்ட கிளைக் குயிலே சிந்தித்துப்பார்
காதலுக்காய் எனை மணக்க வேண்டாம்!
பொய்யாய்
கல்யாணம் நடுக்கடலை ஒக்கும்! அங்கே
மோதுகின்ற புயற்பட்டுக் காதல் தோணி
மூழ்கிவிடவும் கூடும் நாங்கள் எந்தப்
போதுமே தனித்தொன்றாய் இருக்கும் போது
'புளித்து'ப் போய் விடக்கூடும் காதல் கூட!

**(iv) குடும்ப உறவு:**

உ-ம்: தாமதம் ஏன்? - மஹாகவி

தைத்தேனா உங்களுக்கு? கால்நடையில்
கூடக்
கந்தோர் விட் டெப்பொழுதோ
வந்திருக்கக்கூடும்
பத்தான தேமணி அப்பாவருவார் என்று

பார்த்திருந்த கண்மணியாள் போய்த்துயின்று விட்டாள்

அத்தான், ஏன் வீடு வர இவ்வளவு நேரம்?
ஆவலுடன் உங்களுக்காய்க் காவலிருந்திங்கே
பித்தானேன் நான்; நீங்கள் போயிருந்த தெங்கே?
பேதை எனை யோமறந்தீர்? தாமதம் ஈதென்ன?

ஈழத்து நவீன கவிதைக்குரிய தனித்துவமான பண்பாகப் பேச்சோசை காணப்படுகின்றதென்பர். இத்தகைய பேச்-சோசைப் பண்பின் ஆரம்பமும் மேற்குறித்த கவிதையில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**(v) தமிழ்மொழிப் பற்று:**

**'சிலம்பொலி'**
- நாவற்குழியூர் நடராசன் -

கேட்கு துமணி ஓசை போலக்
கிண்கி ணீர் என - எனை
வாட்டும் அந்த வனிதை காலின்
வளை சிலம்பொலி.

அள்ளு தென்றன் நெஞ்சை அச்
சிலம்ப ரற்றலே - மனம்
கொள்ளு தந்த நூபுரத்திற்
கோடி ஆசை கள்

ஆடும் அந்த அமிழ்தி னல்ல
ஆரணங்க டிக் - கிசை
பாடும் அந்த மங்கை காலிற்
பாத சங்கிலி.

**(vi) சமூகப் பிரச்சினைகள் :**
இவை பற்றிப் பேசப்பட்டது ஒப்பீட்டளவிலே குறைவாகும். அ.ந. கந்தசாமியே இவ்வாறான கவிதைகளை ஓரளவு எழுதியுள்ளார். (இவர் முற்போக்கு அணிசார்ந்தவராக இருந்தமையே இதற்கான காரணமாகின்றது.) உ-ம்:

தேயிலைத் தோட்டத்திலே

"பானையிலே தண்ணீரில் இட்டிருந்த
பழையதனை எடுத்தே உண்டு மிஞ்ச
மானை நிகர் கண்ணாள் தன்மணவாளர்க்கு
மற்றதனை வைத்துவிட்டு விரைந்து சென்று
கானத்து மூங்கிலே வேய்ந்தகூடை
கழுத்தினிலே பின்புறமாகத் தொங்கிவிட்டு
தானெழுந்து விரைவாள் தன் வேலைக்காக
தன்கண்ணின் துயரத்தைத் துடைத்துக்
கொள்வாள்"

**(vii)மொழிப்பெயர்ப்புக் கவிதைகள்:**

இவையும் இக்காலப்பகுதியில் வெளி வந்துள்ளன. பின்வருவது வங்கக் கவிஞரான கௌதம சட்டோபாத்யாவின் கவிதை யொன்றின் மொழிபெயர்ப்புப் பகுதியாகும்:

"என் அருமைத் தோழனே
நான் வாழும் இடமறியாய்
நகரின் தெருக்களிலே
நாலுமரம் சேருமிடம்
நான் உறங்கி வாழ்வதுண்டு
என் வீடு சிதைந்த கூடு
என் உயிரோ ஓய்வின்றி
ஓங்காரம் செய்யத் துடிக்குது
லட்சக் கணக்கான பாட்டாளிகள்
பாடுபடுவோர்க் கிடையில்
நான் அலைந்து திரிவேன்

**(vii) பெண்களது மனஉணர்வுகள்:**

கூடுகண்ட பூனை
- சாரதா -

வண்ணாரக் குலத்துதித்தும் வடிவழகால் வாலிபரைப்
புண்ணாக்கி மனம் பறிக்கும் புதுமையளோர்

போக்கிரிப்பெண்
முன்னாள் அசுரகுல முடிவெடுத்த மோகினி போல்
தண்ணீர்த் துறையிருந்து தனிவழியே தான் நடந்தாள்.

போகும்போ தவளுடனோர் பொதிக்கழுதை போனததன்
வேகம் போல் யாழ்ப்பாணத் திரவிரவாய் நீரிறைத்தற்(கு)
ஆகப் போம் ஏழைகளின் அரைத்தூக்க நடை வருமோ?
நாகம் போல் நடப்பவளும் நடந்தாளப் பொழுதடங்கி!

ஊர்வம் பளப்பதிலும், உலகாயத வாதத்திலும்,
பேர் பெற்ற ஒரு முட்டாள், பெண்ணாசைப் பித்தனவன்
ஆர் சொல்ல வந்தானோ அறியோமவ் வழியெதிரில்
கார் கண்ட மயிலெனவக் கன்னிகையைக் கண்டு நின்றான்!

"பெண்ணே! ஒரு வார்த்தை பேசுகின்றேன் பிழை பொறுக்க
உன்னைக் கண்டதுமென் உள்ளமனல் பட்டுருகும்
வெண்ணெயெனவாச்சு; வேதனையை நான் சகியேன்
கண்ணே, உனையொருக்காற் கட்டி முத்தந் தந்திடுவேன்."

" உன்தாய் தகப்பனெக் குற்றநண்பர்; ஊழ்வினையால்,
பன்னாள் பிரிந்திருந்த பற்றிலிது செய்ததெனச்
சொன்னால் அவருணர்ந்து, தோத்தரிப்பர் உன்னை மெய்யாய்
வண்ணார் தவக் கொழுந்தே, வாடிகிட்டவாடி" யென்றான்.

பேசாமற் கேட்டு நின்ற பெண்ணகைத்துக் கனைத்துடனே
கூசாமற் சொன்னதிது; "கூர்மஅவ தாரமே, உன்
வாசா மகோசரமெல் லாமறிவேன்; வாயடக்குன்
ஆசாபா சந்தவிர்க்கும், அணைந்திடினிக் கழுதை" யென்றாள்.
"வீடு சென்றுனதன்பை வேண்டு மட்டுஞ் சொல்லுமிதோ
பாடுபட்டு வந்தகளைப் பாறமுத்தம் பரிந்திடென்றாள்
ஆடுகின்ற கள்வனைப்போல், அகல விழித் தங்கு நின்றோன்;
சூடு கண்ட பூனையெனச் சொல்லாமலே தொலைந்தான்!

பெண்ணென்றால் காமவெறி பிடித்தலையும் பேடிகளை
முன்னின்று சொல்லம்பால் முறியடிக்கும் மோகினிகள்,
இன்னுந்தான் உளரெங்கள் இன்தமிழ் நாட்டெல்லையுளே
என்னென்பேன்! பெண்ணினத்தின் எழுச்சியுகம் இதுவன்றோ.

**(ix) இதிகாசப்பாத்திரங்களை - சம்பவங்களை - மறுபார்வைக்குட்படுத்துதல்:**

உ-ம் பரதன் சீற்றம்

சாரதா

நரை விழுந்து தோலுலர்ந்து
நாடியுயிர் தளர்ந்து வரக்
கரை கடந்த தவக்கனலிற்
கருகியமா முனி வசிட்டன்,
உரை கடந்த பெண்குலத்தின்
உயர்வறியான்; பாவியவன்,
உரை முடித்த படி நடப்பின்
உருக்கிரும்போ உனக்கிதயம்

ஒட்டுயுலர்ந் துருக்குலையும்
உன்மத்தன், உளந்துணிந்து
சட்டமென்று சாத்திரங்கள்
சாட்டியுயிர்ச் சானகியாம்
கட்டியமு தைக் கொடிய
காடெனும் முட் புதர்நடுவே
கொட்டி விடக் கட்டளையும்
இட்டனனோ முட்டனவன்?

குருட்டுமனம் படைத்தவனோ
குலமகளின் கற்பறிவான்?
இருட்டு விழி அந்தகற்கோ
பகலருமை தெரியுமண்ணா?
மருட்டும் முனி வார்த்தையுனை
மயக்கியதோ? மங்கையினை
விரட்டுதற்குந் துணிந்தனையோ
வெவ்வனத்துக் கெம்மரசே!

உலகவசை யெனப்பயந்து
உத்தமியின் உயிர்மனமும்
உலைய, வனந் துரத்துவதுன்
உயிர் தருமம் ஆய்விடுமோ?
மலையிலங்கைப் போர் முடித்து
மாதரசை மீட்ட வந்நாள்
வளர் நெருப்பிற் கற்புநலங்
காட்டியதும் மறந்தனையோ?

சீதையினைக் காட்டகத்தே
சேர்ப்பதுதான் தீர்ப்பு எனில்,
கோதுறுமிவ் வரசியலின்
கொடுநியமம் ஏற்பதெனில்,
மாதர்களின் கற்பினுக்கும்
மங்கு திசை வந்தது காண்
சோதரனே! உன்புகழுந்
தொலையுதுயா னுந்தொலைந்தேன்!

மேற்குறித்தவாறான ஆரம்பகாலப் பொருள் மரபு அடுத்தகாலப்பகுதியில் மாற்றம் எய்துகின்றது. ஆரம்பகாலக் கவிஞருள் சிலர் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைகின்றனர். (உ-ம் : மஹாகவி) சிலர் தனர்ச்சி எய்துகின்றனர். (உ-ம் : சாரதா)

"நவீன காலம் என்று நாம் குறிப்பிடும் போது நமக்கு அண்மித்த நாம் வாழுகின்ற காலம் என்ற பொருள் மட்டுமன்றி அதற்கு முந்திய காலப்பகுதிகளிலிருந்து வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட காலப்பகுதி என்னும் பொருளும் பொருந்தியிருப்பது நினைந்து கொள்ளத்தக்கது. அண்மைக்காலம். சமகாலம், தற்காலம் என்ற பொருள்கள் மாத்திரமல்லாது, பண்பு வேறுபாடுகளும் நவீன காலம் என்ற சொற்றொடரில் அமைந்திருப்பதை இதற்குப் பரியாயப் பெயராக வழங்கும் தொடர்கள் சில குறிக்கின்றன. உதாரணமாக இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம். தற்காலத் தமிழ் இலக்கியம், புதுமைத் தமிழ் இலக்கியம், மறுமலர்ச்சித் தமிழ் இலக்கியம் என்பவற்றைக் காட்டலாம். இவற்றிலே நவீனம், புதுமை, மறுமலர்ச்சி முதலிய சொற்கள் பண்பு அடிப்படையில் அமைந்தவை என்பது தெளிவாகும். இவற்றிடையே சிற்சில நுண்ணிய கருத்துச் சாயை வேறுபாடுகள் இருப்பினும் "புதுமை" என்ற அம்சம் பொதுவானதாய் இருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது முற்பட்ட காலங்களிலிருந்து பெருமளவிற்கு வேறுபட்டுக் காணப்படுவது இக்காலப்பகுதியின் மிக முக்கியமான பண்பு எனலாம்."

பேராசிரியர் க.கைலாசபதி

# பாடசாலைக்கு வெளியில் உள்ள வளங்களைக் கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாகப் பயன்படுத்துதல்

**சந்துரு மரியதாஸ்**
உதவி விரிவுரையாளர்
கல்வி, பிள்ளை நலத்துறை,
கலை, கலாசாரப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

பாடசாலைக்கு அண்மையில் அல்லது பாடசாலைக்கு வெளியில் காணப்படும் எந்தவொரு பொருளும், நிறுவன அமைப்பும், தனியாளும் கல்வியில் வளமாக அமையக்கூடும். குறித்த ஒரு பாடத்திற்கான வளமாக அமையும் ஒரு பொருள் பிறிதொரு பாடத்திற்கான வளமாகவும் அமையலாம். எனவே பாடசாலைக்கு வெளியே காணப்படும் சகல வளங்களையும் இனங்கண்டு கொள்வதற்கான வழி வகைகளைப் பாடசாலை நிருவாகம் மேற்கொள்வது சிறப்பானது.

தேவைப்படும் வளம், ஒரு நூலகமாகவோ கோள்மண்டலமாகவோ அரும்பொருளாகவோ விலங்கினக் காட்சிச் சாலையாகவோ இருக்கலாம். அது ஒரு நிதிவளமாகக்கூட இருக்கலாம். இவ்வாறான பற்பல வளங்கள் பாடசாலை அயற் புறத்தில் காணப்படும். இவற்றினை இனங்கண்டறிந்து ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதன் மூலம் அவற்றைக் கற்றலுக்கு உறுதுணையாக்கிக் கொள்ளலாம். கற்பித்தல், கற்றல் செயன் முறையை மேம்படுத்துவதற்காகப் பயன் படுத்தக்கூடிய அனைத்தையும் கல்வி வளமாகக் கருதலாம். பாடசாலைக்கு வெளியேயான வளங்களையும் பௌதிக வளங்கள், மனித வளம், நிறுவன வளங்கள், நிதி வளங்கள் என்று வகைப்படுத்தலாம்.

கல்வி என்பது தனியே நூல்களில் காணப்படும் விடயங்களை அறிந்து கொள்வதோ ஆசிரியரால் எடுத்துக் கூறப்படுபவற்றை மனனஞ் செய்து கொள்வதோ அல்ல. தாம் வாழும் உலகம் பற்றிய விளக்கத்தைப் பெற்று, சிறப்பாக வாழ்வதற்கான வழியை அமைத்துக் கொடுப்பதே கல்வியின் மூலம் ஆற்றப்படும் கருமமாகும். இயற்கையில் காணப்படும் பொருள்களின் யதார்த்த நிலையை விளங்கிக் கொண்டு தமது அறிவைச் செவ்வையாக்கிக் கொள்வதே கல்வியைப் பெறும் இலகுவான வழியாகும்.

கற்றல்-கற்பித்தல் செயன்முறையின் போது தாம் பெறும் சொந்த அனுபவங்களே வலிமைமிக்க அனுபவங்களாகும் எனவும் இயற்கைப் பொருள்களே வலிமை மிக்க கட்புலச் செவிப்புலச் சாதனங்களாகும் எனவும் குறிப்பிடுவதற்கான காரணம் இதுவேயாகும். இயற்கைப் பொருள்களைச் சாதனங்களாகப் பயன்படுத்தும்போது மாணவன் பெறும் விளக்கம் திருத்தமானதாயும் உறுதியானதாயும் அமையும். ஏனெனில் கல்வி என்பது இயற்கையை மையமாகக் கொண்டமைய வேண்டும் என்பது இயற்கை வாதத்தின் கருப் பொருளாகும். பாடசாலை அமைந்துள்ள கிராமத்திலோ நகரத்திலோ அதன் அயற் புறத்திலோ காணப்படும் வளங்கள் பெறுமதி மிக்கனவாகும். ஏனெனில் அவ்வளங்களை மிகக் குறுகிய நேரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதே அதற்கான காரணமாகும். அவ்வாறே ஒவ்வொரு மாணவரும் இவ்வளங்கள் பற்றிய விளக்கத்தையும் உணர்வையும் பெற்றுக் கொள்ளவும் பாடசாலைகள் வழிகாட்ட வேண்டும். வயல்வெளி, கடற்கரை, மலைக் குன்று, காடு, ஆறு, கடல்நீரேரி, கற்பாறை போன்ற ஒவ்வொன்றும் கற்றலுக்கான வளங்களாகும். உதாரணமாக வயல்

வெளியானது புவியியல், சித்திரம், விவசாயம் போன்ற பல்வேறு பாடங்களைக் கற்பதற்கு உதவக்கூடிய ஒரு வளமாகும். சிந்தித்துத் திட்டமிட்டுச் செயலாற்றுவதன் மூலமே இவ்வளங்களை நாம் இனங்கண்டு பயன்படுத்த முடியும்.

சித்திரப் பாடத்தின் போது இயற்கை அழகைச் சித்திரமாக வரையும் மாணவன் வயல் வெளியினைப் பின்னணியாக அமைத்துக்கொண்டு தனது சித்திரத்தைச் சிறப்பாக வரையலாம். கட்டுரைகள், கவிதைகள் எழுதும் மாணவர்களுக்குக் கடற்கரை, மலைக்குன்று, காடு, பறவைகளின் கீச்சொலி போன்றவை பொருளாக அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்வொவ்வொரு வளத்தையும் குறிப்பாக இனங்கண்டு பயன்பெற வேண்டியது அவசியமாகும். வானிலை பற்றிக் கற்பிக்கும் பாடத்தின் போது வகுப்பறையில் இருந்து வெளியே வந்து வெப்பநிலை, காற்று வீசும் திசை, முகில்களின் தன்மை அவற்றின் வடிவம் போன்றவற்றைக் கவனிக்கலாம். இவற்றின் மூலம் பிள்ளை தனது அறிவை உறுதிப்படுத்திக்கொள்ளும். அவன் கற்ற வற்றைச் சரியாக மனத்தில் இருத்திக் கொள்ளலாம். எனவே, பாடசாலையின் அயற் சூழலில் காணப்படும் வளங்களை இனங் கண்டுகொள்ள முயற்சி செய்தல் மிக முக்கியமானத்தாகும்.

ரஷ்ய நாட்டு ஆரம்பப் பள்ளிகளில் கற்பித்தற் கருமங்களின் போது, குழந்தை களின் பல்வேறு திறன்களை விருத்தி செய்வதற்காகக் கோழிக் குஞ்சுகள், தாராக் குஞ்சுகள், கிளிகள், அணில்கள், முயல்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் அக்குழந்தைகளின் சுற்றாடல் தொடர்பான ஆர்வம் அதிகரிப்பதோடு சூழல் வளங்களை ஆராய்வதற்கான விருப்பமும் ஏற்படுகின்றது. கல்விச் செயன்முறையின் போது பாடசாலைக்கு வெளியே உள்ள மனித வளத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு. கல்வி தொடர்பாக அதன் மூலம் பெறக்கூடிய பயன்கள் பலவாகும்.

அயற்பாடசாலைகளிலும் பிற கல்வி நிறுவனங்களிலும் கற்பிக்கும் பல்வேறு திறமைகளைக் கொண்ட ஆசிரியர்கள், பாடகர்கள், நாடகத் தயாரிப்பாளர்கள், நடிகர்கள், சித்திரக்கலைஞர்கள் போன் றோரும் அத்தகைய திறமைகளைக் கொண்ட ஏனையோரும் பாடசாலைக்கு வெளியேயான மனித வளம் எனும் பிரிவிலே அடங்குவர். நமது அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு பட்ட, சமயத் தலைவர்கள். வைத்தியர்கள், காவல் துறையினர், கிராம சேவை அதிகாரிகள், அஞ்சல் துறை ஊழியர்கள் போன்றோரும் கல்வி சார்ந்த அனுபவங்களை வழங்கு வதற்குத் துணையாகக் கொள்ளக்கூடிய மனித வளங்களேயாவர்.

இவ்வாறாகப் பல்வேறு திறன்களைக் கொண்ட தொழில்நுட்பவியலாளர்கள், விவசாயிகள், தச்சுத் தொழிலாளர்கள் போன்ற ஒவ்வொருவரும் கற்பித்தல், கற்றல் செயன் முறையின் போது வளவாள்களாகவே அமைவர். இவ்வளவாளர்களைப் பாடசாலையுடனும் வகுப்பறையுடனும் பாட அலகுடனும் எவ்வாறு தொடர்புபடுத்திக் கொள்ளலாம் என்பது பற்றியும் அவ்வாறாகத் தொடர்பு படுத்திக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் எவை என்பன பற்றியும் ஆய்ந்தறிந்து பட்டியற்படுத்தி வைத்திருப்பது பயனுடை யதாகும்.

இவ்வாறான வளங்களை இனங் காண்பதற்கும், அவ்வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெறுவதற்குமாக, ஆசிரியரும் மாணவரும் அவ்வப்போது கூட்டாக முயற்சி மேற்கொள்ளல் வேண்டும். சாரணர் முயற்சிகள், இலக்கியக் களஞ்சிய

நடவடிக்கைகள், இசைநிகழ்ச்சிகள், பிரதேசத்தில் பரவும் கொள்ளை நோய் பற்றி மாணவர்களுக்கு அறிவித்தல் போன்றவற்றிற்காக ஆசிரியர், பாடசாலைக்கு வெளியிலான மேற்படி வளங்களைத் துணையாகக் கொள்ளலாம். வளங்களை இனங்கண்டு கொள்வதும் அவ்வளங்களின் மூலம் உச்சப்பயனைப் பெற்றுக்கொள்வது பற்றிச் சிந்தித்துப் பார்த்தலுமே முக்கியமானதாக அமைகின்றது.

கல்விக் கருமத்துடன் தொடர்பு படுத்திக்கொள்ளக்கூடிய, பாடசாலைக்கு வெளியேயான நிறுவனங்கள் பல உள்ளன. பொது நூல்நிலையம், அரும்பொருளகம், நாடக அரங்கம், சினிமாக் கொட்டகை, காவல் நிலையங்கள், சமயத் தாபனங்கள், தொடர் பாடல் நிலையம், வானிலை ஆராய்ச்சி நிலையம், விலங்கினக் காட்சிச்சாலை, அஞ்சல் நிலையம், வர்த்தக நிலையங்கள் அச்சகம் போன்ற யாவும் பாடசாலைக்கு வெளியேயான நிறுவன ரீதியான வளங்களாகும். கல்வி முன்னேற்றம் தொடர்பாக உதவி, ஒத்தாசை, நன்கொடை என்பவற்றை வழங்குதல், விருப்பங் கொண்டுள்ள நிறுவனங்கள், சமூக சேவைத் தாபனங்கள், தனவந்தர்கள் போன்றோர் சமூகத்தில் உள்ளனர். அவ்வாறான நிறுவனங்களுடன், ஆள்கள் போன்றோரைக் கண்டறிந்து அவர்களுடன் கலந்துரையாடுதல் மிக அவசியமாகும். கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் மாணவரின் திறமையை மேலும் மேம்படுத்துவதற்கும், அவர்களின் திறனை வெளிக்காட்டுவதற்கும் தேவையான சக்தியினை இவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்படைகள், தொழிற்பாடுகள் போன்ற வெளி வேலைகளை மாணவர்களிடம் பொறுப்பளித்து மேற்படி வெளி நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய விளக்கத்தை அளிக்கலாம். குறிப்பாகத் தனது நகரத்திலும் தனது கிராமத்திலும் கற்றலுக்கான பல நிலையங்கள் காணப்படுகின்றன என்பதைப் பிள்ளைக்கு உணர்த்துதல் வேண்டும். எந்தவகையான சுற்றாடலாக இருப்பினும் அது கல்விக்குரிய வளங்களைக் குறைவின்றிப் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. பெரோரா, பீ.ஏ. (1997) **"கற்பிப்பதற்கான சுதந்திரமும் கற்பதற்கான சுதந்திரமும்"** தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

2. தேசிய கல்வி நிறுவகம். (1999) **"புதுவழி"**, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.


## கல்வியின் நான்கு தூண்கள்

21ஆம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றி ஆராய்ந்த சர்வதேச ஆணைக்குழு தனது அறிக்கையில் நான்கு தூண்களின் அடிப்படையில் கல்வி பற்றிய தொலை நோக்கொன்றை முன்மொழிந்துள்ளது.

1. **அறிவைப்பெறும் வகையில் கற்றல்.**
2. **செய்வதற்குக் கற்றல்.**
3. **வாழக்கற்றல்.**
4. **இணைந்து வாழக்கற்றல்.**

• நன்றி : சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள்.

# கல்வி

திருமதி சகுந்தா தர்மபாலன்
முகாமைத்துவ உதவியாளர்.
வலயக் கல்வி அலுவலகம்.
மட்டக்களப்பு.

செல்வத்துள் தலையான சிறந்த செல்வம்
கல்வியைப் போல் வேறொன்று காசினியில் இல்லை
செல்லுமிடம் எங்கிலுமே மதிப்பைத் தந்து,
சொல்ல வொணாப் பேரின்பம் உளத்தில் பூக்க,
நல்லமுதாய் விளங்கி, மக்கட் சமுதாயத்தில்
எல்லோரும் நம்மைப்போற்றிப் புகழச் செய்யும்,
சொல்லரிய செல்வமாம் கல்விச் செல்வம்
இல்லாத போதும் நம்மை இவ்வுலகில் வாழவைக்கும்.

"கண்ணுடையோர் என்போர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்", என்று திரு
வள்ளுவப் பெருந்தகையே குறள் வெண்பாவில்
சொல்லியதை நாம் மறந்தால் சுவர்க்கம் இல்லை
எல்லோர்க்கும் கல்வி பொது உடைமையாகும்.
நல்லவராய். வல்லவராய் நாட்டில் வாழ்ந்தால்
இல்லாதோர், இருப்பவரும் நம்மைச் சேர்வார்
இல்லையொரு தொல்லை, வாழ்வில் எல்லாம் சேரும்.

"தொட்டனைத்தூறுமாம் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறுமாம் கல்வி" யென்றும்
சொல்கின்றார் வள்ளுவனார், சும்மா வாழ்வை
தொல்லை, பகை நிறைந்ததாக மாற்றிடாமல் எல்லோரும்
கல்வியை மதித்து இளம் பருவம் தொட்டே
கல்வி கற்றால் கடவுள்கூடக் காலடிக்கே வந்திடுவார்.
எல்லோரும் சேர்ந்து கற்று, எங்கள் துயர வாழ்வை
எல்லோரும் மாற்றிடுவோம் இது நம்மால் இயலுமென்பேன்.

# வறுமையும் புலமையும்

பலகதிர்ச் செல்வன் பங்கயம் காணப் பாரகம் விரைந்தனன்
காரிருள் கழிந்தது
கடவுளர் அரண்தனில் மங்கலம் முழங்கின கணீரொலி கேட்டது
புள்ளினம் விழித்தன, புஷ்பங்கள் மலர்ந்தன
அளியினம் களித்தது களிநடம் புரிந்தது
கள்ளுண்டு மகிழ்ந்தது மகிழ்ச்சியில் திளைத்தது
இவ்வெழில் கொஞ்சும் வேளையில் கிராமத்து அகத்தினில்
மெல்லியல் சேலையில் கோதிலா நல்லாள்
பரிவொடு எழுப்பிய குரலொடு எழுந்தே
கால்முகம் கழுவி கடவுளைத் தொழுது
இரவு விடியினும் விடியா திரவெனும்
பருவர லுழந்த பண்புடை ஆசான்
புன்பதம் ஊறிய மென்புனல் மாந்தி
ஊசி நுன்னிய வெண்ணுடை பூண்டு
பல யுகம் கண்ட பழங்குடை நிழல்தர
மனநிறைவோடு மாண்புற ஏகினன்



இறைத்த கேணியாய் ஊறிய அறிவினை
அள்ளித் தெளித்தனன் பயிரது மிளர்ந்தது
நெஞ்சு நிறைந்தது நினைவு மலர்ந்தது
ஏழைச் சிறார்கள் விடியலை நோக்கி
வெற்றி நடையிடப் பாலம் அமைத்தனன்

மெழுகுதிரியாய் உருகி மகிழ்ந்தனன்
தன்நிலை நோக்கி மனம் நொந்திலன்

**திருமதி S.ஜெயக்குமார்**
உயிரியல் ஆசிரியர்
மட்/புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.

# The Dream of a child

**Mrs.Sandrabawanie Saravanamuthu,**
BA, English Trained, PGDE-TESL(UOC)
In Service Advisor - English,
Zonal Education Office, Batticaloa.

I love to be in a class like my home,
Where the teacher should be like my mother,
Caring me with kindness and a special attention,
Never to scold and punish me for my naughtiness.

I love to be in a class like my toy room,
Where I would find lots of things to play with.
I would learn joyfully with all my friends,
Sharing everything we have in our minds.

I love to be in a class like my study room,
Where I would have lots of books to read.
I know, reading makes a man perfect,
And I love to become a perfect man.

I love to be in a class like my garden,
Where the teacher would play with me friendly,
And to teach us through lots of games.
If I had a class like this, I would never never leave my school.

# பரிகாரக் கற்பித்தல் எண்ணக்கரு

**ப.சர்வேஸ்வரன்**
ஆசிரியர் கல்வியில் கலை முதுமாணி
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்)
வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.

தற்போதைய கல்விமுறைமையை எடுத்து நோக்கும் போது பின்வரும் நிலைமைகளை இனங்காண முடியும்.

♦ பாடசாலைகளில் எதிர்பார்த்த தேர்ச்சிகளை அடைய முடியாத பல மாணவர்கள் காணப்படுகின்றமை.

♦ ஆசிரியர்களின் சாதாரண கற்பித்தல் முறையில் பல மாணவர்கள் தோல்விகள் கண்டுள்ளமை.

♦ கல்வி ஆய்வுகளின் அடிப்படையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் மாணவர் அடைவு பின்தங்கியிருப்பதையும் குறித்த விடயப் பரப்புகளில் மாணவர்கள் மிகத் தாழ்ந்த மட்டத் தேர்ச்சியைக் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை

♦ ஆசிரியரது கற்பித்தல் முறையும் மாணவரது தாழ்ந்த அடைவிற்குக் காரணமாக உள்ளது என எடுத்துக்காட்டப் பட்டுள்ளமை.

மேற்படி நிலைமைகளைச் சீர்செய்து, மாணவர் எதிர்பார்த்த தேர்ச்சிகளைப் பெறுவதை உறுதி செய்வதுடன் மாணவர் உரிய தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதற் கேற்ற கற்றல் சந்தர்ப்பங்களை வடிவமைத்துச் செயற்படுத்தும் திறன் கொண்ட ஆசிரிய வளத்தை உருவாக்க வேண்டிய தேவை இன்றைய கல்வித் துறைக்கு அவசியமாகவுள்ளது. இதற்காகப் பரிகாரக் கல்விச் செயன்முறையை செயற்படுத்தத்தக்கதான தேர்ச்சிகளை ஆசிரியர் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டியுள்ளது.

சாதாரண கற்றற் செயற்பாட்டின் போது மாணவர் பாண்டித்தியம் பெறத் தவறிய விடயப் பரப்புக்களை (தேர்ச்சிகளை) அவர்கள் கற்றுத் தெளிவு பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் விசேட கற்றற் செயன் முறை பரிகாரக் கற்பித்தல் எனப்படும்.

பரிகாரக் கற்பித்தலைத் திட்டமிடும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

1. ஆய்ந்தறி பரீட்சை (Diagnostic Test) ஒன்றின் மூலம் அல்லது வேறுமுறை யொன்றின் மூலம் மாணவர் கொண்டுள்ள தேர்ச்சியின்மைகள், இடர்ப்பாடுகள் இனங் காணப்படல். ஆய்ந்தறி பரீட்சையானது ஆசிரியர்கள் மாணவர்களது குறைகளை நுட்பமாக அவதானித்து அவற்றை நீக்கும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வழிவகுக்கும்.

2. பரிகாரக் கற்பித்தலின் போது பல்வேறு கற்பித்தல் முறைகளையும் மதிப்பீட்டு நுட்பங்களையும் பயன்படுத்த வேண்டும். பல் தரக்கற்பித்தல் செயன்முறை மூலம் கற்பித்தல், கண்டறிமுறைக் கற்பித்தல், அவதானித்தல் அல்லது உற்றுநோக்கல், குழுமுறைக் கற்பித்தல், நுண்அலகுக் கற்பித்தல், வினா-விடை முறை, நேர்காணல், கலந்துரையாடல் முறைக் கற்பித்தல் போன்ற பல்வேறு முறைக் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த முடியும்.

3. தனியாள் வேறுபாடுக்கமைய அவரவர் கற்றலில் முன்னேற்றம் காணத்தக்கவாறு சிறப்பாக வழிநடத்தக் கூடியதாக

அறிவுறுத்தல்கள் அமைதல் வேண்டும். தேவையேற்படின் தனித்தனி அறிவுறுத் தல்கள் வழங்கப்படல் வேண்டும்.


4. பரிகாரக் கற்பித்தலானது மாணவர்கள் ஏற்கனவே அறிந்தவற்றை மீளக்கற்பிப்ப தாகவும் அவர்களது அடைவுமட்டத்தை விட குறைவானதாகவும் காணப்படாமல் அமைவதுடன் அவர்களது அடைவுமட்டத் துடன் காணப்படுதல் அவசியமானதாகும். அத்துடன் மாணவர்களது அறிவுமட்டத்தை விட அதிகமாக அல்லது உயர்வாக அமைந்துவிடினும் அது மாணவர்களது மத்தியில் ஊக்கமின்மையை உண்டுபண் ணும். எனவே மாணவர்களது அறிவுமட்டத் துடன் அமைதல் அத்தியாவசியமானதாகும்.

5. பரிகாரக் கற்பித்தலின் போது எளிமையா னதும் பாடசாலைச் சூழலில் பெறக்கூடிய துமான துணைக்கருவிகளைப் பயன்படுத்தி கற்றல்-கற்பித்தற் செயன்முறையை வழி நடத்திச் செல்லல் மிகச் சிறந்த பயனைப் பெற்றுத்தரும். இங்கு பயன்படுத்தப்படும் கற்பித்தற் துணைச்சாதனங்கள் மிக அவதானமாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

6. ஆசிரியர்-மாணவர் தொடர்பு மகிழ்ச்சி கரமாக அமைவதுடன் பரிகாரக் கற்பித்தற் செயன்முறையானது எதைக் கற்பிக்க வேண்டும், எவ்வாறு அதை மாணவர் பெற உதவுவது என்ற இருவிடயங்களுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். அத்துடன் மாணவர்களது தனிப்பட்ட திறன்கள், தனியாள் வேறுபாடுகள், பலவீனங்கள் என்பன கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

7. மாணவர்கள் ஊக்கமுடன் ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சிகரமாகவும் செயற்படக்கூடிய கற்பித்தல் முறைகள் கூடிய விளைதிறன் உடையதாக அமையும்.


<u>பரிகாரக் கற்பித்தற் படிமுறைகள்</u>




♦ விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் பரிகாரக் கற்பித்தலைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல் கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு வித்திடும் என்பதில் ஐயமில்லை.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒரு நோக்கு.

திருமதி சு. பூபாலசிங்கம்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.



எமது நாட்டின் பாடசாலைக் கல்விக் கட்டமைப்பிலே மாணவர்கள் மூன்று முக்கியமான பரீட்சைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. ஆரம்ப, இடைநிலை, உயர்தரம் என்ற மூன்று பிரிவுகளில் இப்பரீட்சைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு மட்டத்திலும் மாணவர்கள் அடைவினை அளவீடு செய்யும் நோக்கில் நாடளாவிய ரீதியில் பரீட்சைத் திணைக் களத்தினால் பொதுப் பரீட்சைகளாக இவை நடாத்தப்பட்டாலும்கூட, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும் க.பொ.த உயர் தரப்பரீட்சையும் இன்று போட்டிப் பரீட்சைகளாகவே மாற்றம் பெற்றுள்ளன. அந்த வகையில் அனைவராலும் கருத் தூன்றிக் கவனிக்கப்படுவதும் பெற்றோர் தங்களை அதிகம் ஈடுபடுத்திக்கொள்வதும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்தான் என்றால் அது மிகையாகாது.

இப்பரீட்சையானது நடாத்தப்ப டுவதன் நோக்கமதை எடுத்து நோக்கினால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங் களைச் சேர்ந்த மாணவர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவு தொகையைப் பெற்றுக் கொள்வதோடு தமக்குப் பொருத்தமான பாடசாலையைத் தேர்ந்தெடுத்து உயர் கல்வியைத் தொடர்வதற்குமாகும். ஆனால் இந்நோக்கத் திற்காகப் பயன்பெறும் மாணவர் எண்ணிக் கையைப் பொறுத்தமட்டில் வருமானம் குறைந்த குடும்பத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கை மிகச் சொற்பமே. கடந்தகாலச் சித்தி வீதங்களை ஒப்பீட்டளவில் நோக்கும் போது சித்தியடைந் தவர்களில் பெரும்பான்மையினர் அதிக வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களேயாவர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராயும் போது அடிப்படையாக விளங் குபவை குறித்த பிள்ளையின் நுண்ணறிவு வீதம், அத்தரத்திற்குக் கற்பிக்கும் ஆசிரியரின் துறைசார் நிபுணத்துவம், பெற்றோரின் அக்கறையும் கண்காணிப்பும் போன்ற அம்சங்களாகும். இம்மூன்று விடயங்களில் ஒன்று பலவீனம் அடையும் போது அம்மாணவன் குறிப்பிட்ட இலக்கை அடைவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர் களின் பெற்றோர்கள் பிரபல்யம் பெற்ற தனியார் வகுப்பு ஆசிரியர்களை நாடி பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக ரியூசன் என்ற பெயரில் அதிக பணத்தைச் செலவுசெய்து தமது பிள்ளைகளைச் சித்திபெற வைக்க ஆலாய்ப் பறக்கின்றனர். அதே வேளையில் சிலரோ தமது பிள்ளையின் தகைமைக்கேற்ற ஆசிரியரைத்

தேடியறிவதை விடுத்துப் பொருத்தமற்ற ஆசிரியரிடம் இரவு பகலாகப் பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்பி இறுதியில் அம்மாணவனோ மாணவியோ சித்திய டையாமல் அவதிப்படுவதும் வருடாந்தம் நாம் காணும் நிகழ்வுகளில் ஒன்று. பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளில் அந்தந்த வகுப்பாசிரியர்களே தம்மால் முடிந்தளவு மேலதிக வகுப்புக்களை ஒழுங்கு செய்து நடாத்தி ஓரிரு மாணவர்களையாவது வெட்டுப்புள்ளியை அண்மித்துச் சித்தியடைய வைக்க அரும்பாடு படுகின்றனர். மொத்தத்தில் தரம் 5 வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருமே புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் அடைவை உயர்த்த அரும்பாடுபடுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.


மறுபுறத்தில் ஆசிரியத் தொழிலில் வாண்மைத்துவம் என்பது இந்நாளில் அவசியமான தொன்றாகக் கருதப்படுகின்றது. வாண்மையாளர்கள் " நீண்ட காலப் பயிற்சி பெற்றுச் சேவையாற்றுவதோடு ஆய்வு அடிப்படையிலான அறிவுத் தொகுதிகளை விளங்கிக் கற்பதற்கான வாய்ப்பும் கற்றுக் கொண்ட அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும் திறமையும் பெற்றிருக்க வேண்டும்" என எதிர்பார்க்கப் படுகின்றது. மாற்றமுறும் உலகிற்கேற்பத் தங்களின் தொழில் வாண்மையை ஒவ்வொரு ஆசிரியரும் விருத்திசெய்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அண்மையில் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் சில பிரதேசங்களில் தரம் 5 கற்பிக்கும் ஆசிரியர்களின் பாடத்துறை சார்ந்த தேர்ச்சிகளில் கொண்ட நிபுணத்துவத்தினைப் பரிசீலிக்கும் நோக்கில் பரீட்சை நடாத்தப்பட்டது. அப்பரீட்சை முடிவுகள் வாண்மைத்துவத்தின் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன. அடுத்ததாக எவ்வளவு நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்பித்தலை வினைத்திறனுடன் ஆசிரியர் ஒருவர் நிகழ்த்தும் போதும் குறிப்பிட்ட ஒருசில மாணவர்களாலேயே கூடிய புள்ளிகளைப் பெற முடிகிறது. ஏனையோர் அவ்விலக்கை எட்டுவதில்லை. இங்கே குறித்த மாணவனின் நுண்ணறிவு வீதமானது செல்வாக்குச் செலுத்துகின்றமை அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

வருடந்தோறும் வெளிவரும் புலமைப் பரிசில் வினாத்தாள் இல I, 14 திறன்களை உள்ளடக்கியதாகவும் வினாத்தாள் II, பாடம் சார்ந்த தேர்ச்சிகளை உள்ளடக்கிய தாகவும் அமைகின்றது. குறித்த தரத்திற்குக் கற்பிக்கும் ஆசிரியரானவர் பதினான்கு பிரதான திறன்கள் அடங்கிய பயிற்சி வினாக்களையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடநூல்கள் போன்றவற்றில் உள்ளடங்கும் அம்சங்கள் அனைத்தையும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு செயற்பாட்டுடன்கூடிய கற்றல் கற்பித்தலைத் திட்டமிட்டு நடாத்தும் போது ஒருவகுப்பில் சராசரி 50% ஆன மாணவர் சித்தியடைவது மாத்திரமன்றி அனைவரையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெறவைக்கலாமென்பது அனுபவ ரீதியாகக் கண்டறியப்பட்ட உண்மையாகும். ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் ஒவ்வொரு முதன்மை நிலை இறுதியிலும் விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் மாணவர்களை பாண்டித்திய நிலையை எய்த வைப்பதானது அனைத்துப் பிள்ளைகளும் 70 புள்ளிக்கு மேல் பெறுவதை உறுதிப்படுத்தும். இவ்வாறான விடயங்களில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவரும் தெளிவாக இருப்பார்களாயின் புலமைப் பரீட்சை என்பது எம்மாணவர்களுக்கும் எட்டாக்கனியாக அமையாது.

எது எப்படியிருப்பினும் தமது சுய கௌரவத்தையும் சமூக அந்தஸ்தையும் கருத்தில்கொண்டும் தம் பிள்ளையைச்

சித்திபெற வைக்கவேண்டுமென்ற எதிர் பார்ப்பில் பணம் படைத்தவர்களும் அரச உத்தியோகத்தர்களும் முண்டியடித்துக் கொண்டு இதுவரை காலமும் பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தனர். சிலர் வாளாவிருந்தனர். ஆனால் அண்மையில் வெளியிடப்பட்ட வரவு செலவுத்திட்ட முன் மொழிவின்படி அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவு தொகை கிடைக்க விருக்கின்றது. கௌரவத்திற்கான சித்தி என்ற நிலைமாறி காசும் கிடைக்கின்றதே என்கிற அங்கலாய்ப்பில் அடுத்த வருடத்தில் அனைத்துப் பெற்றோர்களும் கூடிய முயற்சி எடுப்பார்களென்பது எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும். வறிய மாணவர்கள் இவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு சவால்களைச் சமாளித்து முன்னேற வேண்டிய தேவைப்பாடு அதிகரித்துக் காணப் படுகின்றது.

புலமைப்பரிசில் பரீட்சை என்பது மாணவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கும் ஒரு விஷப் பரீட்சை எனப் பலதரப்பினரும் கூறிவரும் இவ்வேளையில், எதிர்வரும் காலங்களில் பரீட்சை வினாத்தாளில் அரசாங்கம் மாற்றங்களைக் கொண்டுவர இருப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது. பிள்ளைகள் உளரீதியாகப் பாதிப்புறுகின்றனர் என்பது ஒருபுறமிருக்க, அவர்களின் அறிவு பன்மடங்கு வளர்ச்சி பெறுகின்றதென்பதுவும் மறுக்கமுடியாத தொன்று. எவ்வாறாயினும் கல்விச் சமூகம் இதனைக் கருத்தில்கொண்டு செயற்படு மாயின் "தரமான கல்வி" எனும் இலக்கை விரைவில் அடையலாமென்பதில் ஐயமில்லை.



"காரியம் செய்பவர்கள் காரணம் சொல்வதில்லை
காரணம் சொல்பவர்கள் காரியம் செய்வதில்லை"

# வரலாற்றுப் பாடம் கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுச் செயன்முறை ஆலோசனைகள்

**ந. கணேசலிங்கம்** B.COM. PGDE
PE (CO-or) ISA/ S.Sc
வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.

**பாட நோக்கங்கள்:**

வரலாற்றுப் போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கிக்கொள்ளல் மூலம் உலகெங்கும் நிகழ்ந்த மாற்றங்கள் பற்றி அறிந்து கொள்ளல்.

கடந்த காலம் தொடர்பாகப் பெறும் விளக்கத்தின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ளலும் எதிர்கால நிலைமைகளைப் பற்றி விளங்கிக்கொள்ளலும்.

முக்கிய வரலாற்று நபர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொண்டு தனிநபர் வாழ்க்கையைக் கட்டி எழுப்புதல்.

வரலாற்று ரீதியாக உலகில் ஏற்பட்ட முக்கியமான வளர்ச்சிப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் புதிய போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறுதல்.

வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்துகொள்ளல்.

**அறிமுகம்:**

நமது நாட்டின் தனித்துவத்தை அறிந்து, அதனைப் பாதுகாத்து, உலக மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆற்றல் நிறைந்த, நாட்டுப் பற்றுள்ள இலங்கையரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படுதல்.

அதனை அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்த தேசிய பொதுக் குறிக்கோள்கள் மற்றும் தேசிய பொதுத் தேர்ச்சிகளைக் கொண்டு வரலாற்றுப் பாடத்துக்கு இனங்காணப்பட்ட தேர்ச்சிகள் 20 ஐ அடிப்படையாகக் கொண்டு தரம் 6 முதல் 11 வரை வரலாற்றுப் பாடக் கலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**கற்றல்:**

பாடத்திட்டத்தை உள்ளடக்கும் விதத்தில் சுருக்கம் தயாரித்தல், மீண்டும் மீண்டும் நினைவூட்டுதல்களை மேற்கொள்ளல்.

முக்கியமான விடயங்களை சாராம்சமாக்குதல் என்பனவற்றில் ஈடுபட மாணவர்களுக்கு ஊக்கமளித்தல்.

பாடநூல்களை நன்றாகப் பயன்படுத்துவதற்கு மாணவர்களைத் தூண்டுதல்.

தரம் 6 முதல் 11 வரையான பாடத் தொகுதிகள் தொடர்பான விடயங்களை ஒரே தலைப்பின் கீழ் தொடுக்கச் செய்து பிரயோகித்தல்.

உலக விவகாரம் தொடர்பான விடயங்களில் அதிக கவனம் செலுத்த வழிப்படுத்தல்.

தனியாள், குழுச் செயற்பாடுகளின் போது பாத்திரமேற்று நடித்தல், ஒழுங்கமைப் புக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல். உதாரணமாக அரசர்கள் தொடர்பாகக் கற்கும் போது இவ்வுத்தியை அதிகம் பயன்படுத்தல் பொருத்தமானது.

வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபட்ட நதிகள், இடங்கள், நகரங்கள் போன்றவற்றை தேசப்படங்கள் பலவற்றில் திரும்பத் திரும்பக் குறித்துப் பெயரிட்டுப் பயில்தல்.

முக்கியமான வரலாற்றுக் காலம், இடம், நபர்கள் பற்றிய குறிப்பான தகவல்களைக் கிரகிப்புசெய்து கற்றல்.

**கற்பித்தல்:**

வரிப்படங்களைப் பயன்படுத்துதல், நாடுகளின் புவியியல் அமைவிடம் தொடர்பாக வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட வரலாற்றுத் தகவல்களை உறுதி செய்யும் விதத்தில் இது அமைந் திருத்தல்.

அட்டவணைகள், காட்சிப்படுத்தல் பலகைகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கற்பித்தலில் ஈடுபடப் பழக்கப்படுத்தல்.

விடயங்களைச் சரியாக இனங்காண்பதற்கான செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்.

வரலாற்று மூலாதாரங்களை வகைப்படுத்தி, பட்டியலிடச் செய்தலோடு, ஒவ்வொன் றிலிருந்தும் பெறப்படும் தகவல்களைக் கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தல்.

வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களுக் கான கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து அவதானிப்புக்கள், நேரடி அனுபவங்கள், ஆய்வுமுறை, சிந்தனைக் கிளறல் என்பனவற்றின் மூலம் கற்பித்தல்.

யாப்புகள் தொடர்பாக சிறுவர் பாராளுமன்ற அமர்வுகளைப் பாடசாலை மட்டத்தில் நடாத்துதல். கோட்டம், வலயம், மாகாணம், தேசிய மட்டங்களில் பங்குபற்றும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.

தேசிய மறுமலர்ச்சி இயக்கம், அரசியல் யாப்பு விருத்தி தொடர்பாக "விமர்சன அரங்கு"களை நடாத்துதல்.

சித்திரங்கள், நிழற்படங்கள், விவரணத் திரைப் படங்கள் (குறுந்திரைப்படம்) போன்றவற்றைக் கற்றல் சாதனங்களாகப் பயன்படுத்துதல்.

வரலாற்று நிகழ்வுகளை உதாரணங்களுடனும் எடுத்துக் காட்டல்கள் வரலாற்றுச் சான்றுகள் மூலமும் விளக்குதல்.

**தேசப்படங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

வரலாற்று இடங்களைக் குறித்து அவ்விடங் களில் இடமிருந்து வலமாக அவற்றினை எழுதுதல்.

நகரங்களைக் குறிக்கும் போது சரியான இடத்தில் புள்ளியிட்டுப் பெயரிடல்.

இராச்சியங்கள், குளங்கள் என்பனவற்றின் உரிய பிரதேசங்களை நிழற்றிக் காட்டுதல்.

ஆறுகளை அவற்றினை இனங்காணும் விதத்தில் அவற்றின் வழியே எழுதிப் பெயரிடல், நீலநிறம் பிரயோகித்து நிழற்றுதல்.

- "வரலாறு ஒரு தனிப் பாடமன்று எல்லாப் பாடங்களும் அடங்கும் ஒரு கூட்டாகும்" - ஜீ.எம்.ரெவெலியன்.
- வரலாற்றைக் கற்பதன் மூலம் பெறும் அறிவு - இறந்த காலத்தினூடாக நிகழ்காலத்தை விளங்கிக்கொண்டு எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதற்கு உதவும்.

# பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச்சேவை-ஒருபார்வை

கு.கிருஷ்ணமூர்த்தி
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (வழிகாட்டல் ஆலோசனை)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

வழிகாட்டல் ஆலோசனைச் சேவை 2005 ஆம் ஆண்டு முதல் பாடசாலை ஒழுங்கமைப்பில் முறைமையாக்கப்பட்டுள்ளமை நாம் அறிந்ததே. இச்சேவையினை முறைமைக்குள் கொண்டு வருவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தி யிருந்தமையினை நாம் குறிப்பிடலாம். எவ்வா றாயினும் பாடசாலைக் கட்டமைப்பினுள் உள்வாங்குதல் என்பது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

இந்தவகையில், இச்சேவையினைப் பாடசாலையில் உள்வாங்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் முக்கியமானவற்றை அறிந்துகொள்வது பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

## நேர அவகாசம்

முன்னைய காலங்களில் மாணவர்களுக்குக் கல்வியை வழங்குவதோடு சமூகத்திற்குப் பொருத்தமாகப் பிள்ளையை ஆக்கும் செயற்பாடுகளையும் பாடசாலை வழங்கி வந்தது. எனினும் காலப்போக்கில் இந் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டதெனலாம். தற்போது ஆசிரியர்களுக்கு கற்றல், கற்பித்தல் தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்கு மட்டுமே அவகாசம் கிடைக்கிறது எனலாம். மாணவர்களிடையே பலவகைத் தன்மை கூடுதலாகக் காணப்படுவதால், ஆசிரியர்களுக்குப் பிள்ளைகளை வளப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது மேலும் சிக்கலாகி உள்ளது. எனவே இச் சேவையினைத் தனித்து வழங்க வேண்டிய தேவையுள்ளது.

## சடுதியான மாற்றங்கள்

உலகமயமாக்கலின் விளைவாக சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ரீதியான மாற்றங்கள் நாளுக்கு நாள் தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணம் உள்ளன. இந்நிலையில், இம்மாற்றங்களை உள் வாங்குவதில் அல்லது ஏற்றுக்கொள்வதில் பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வேறுபாடின்றி சிரமத்தினை எதிர்கொள்கின்றனர். இம் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள் நெருக்கீட்டிற்கு உட்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். நெருக்கீட்டிற்கு உட்படுபவர்களைச் சரியான முறையில் கவனிக்கத் தவறும் பட்சத்தில், சமூகத்தில் மோசமான நிலைமைகளைத் தோற்றுவிக்கும். எனவே இம்மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் மாணவர்களை வலுவூட்ட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

## குடும்பச் சூழல்

இன்றைய காலகட்டத்தில் மாணவர்களிடையே மிகவும் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு விடயமாகக் காணப்படுவது குடும்பச் சூழலாகும். குடும்பக் கட்டமைப்பினை நோக்கும் போது அது மிகவும் நலிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. குடும்ப அங்கத்தவர்களிடையே ஆளிடைத் தொடர்புகள் குறைவடைந்து காணப்படுகிறது. பணம் சம்பாதிப்பதிலேயே கவனம் செலுத்துவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக வெளிநாட்டிற்குச் செல்வதனை அல்லது கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் பிள்ளை குடும்பப் பொறுப்புக்களை ஏற்க

வேண்டிய நிலை, இடைவிலக வேண்டிய நிலை அல்லது துஷ்பிரயோகத்திற்கு ஆளாக வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதேவேளை பிள்ளையினுடைய உளத் தேவைகளான அன்போ கணிப்போ பாதுகாப்போ கிடைக்காமல் போகின்றது. மேலும் குடும்ப வன்முறைகள் அநேக குடும்பங்களில் அதிகரித்துக் காணப்படு கின்றன. பிள்ளைகள் நேரடியாக வன் முறைக்கு ஆளாகின்றனர் அல்லது காண்கின் றனர். இச்சூழலிலிருந்து வரும் பிள்ளைக்கு ஆதரவு வழங்க வேண்டிய தேவை உள்ளது.

### நவீன தொழிநுட்ப வளர்ச்சி

நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாகக் கணணி மற்றும் கைபேசிப் பாவனை மாணவர் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் பிள்ளைகள் பொருத்தமற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. நவீன தொழிநுட்பம் சார்ந்த குற்றச் செயல் கள், மற்றும் தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளமையினை நாம் அறிவோம். நவீன தொழிநுட்பத்தினை மாணவர்கள் தம்முடைய வளர்ச்சிக்கு இவற்றைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேவேளை பெற்றோர்களுக்கு எவ்வாறு இது தொடர்பாகக் கண்காணிப்பினை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்க வேண்டிய தேவையுள்ளது.

### போதைவஸ்துப் பாவனை

மாணவர்களிடையே மது பாவனை, புகை பிடித்தல் போன்ற பழக்கத்திற்கு அடிமையாகும் நிலைமை காணப்படுகின்றது. இவற்றின் பின்னணியில் காணப்படும் காரணிகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளைக் காண்பதற்கு மாணவர்களுக்கு உதவ வேண்டிய தேவையுள்ளது.

மேலே கூறப்பட்ட காரணிகளை நாம் அலட்சியமாக விடும் பட்சத்தில் மாணவர் களின் சந்தோசமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அவை அமைந்துவிடும். மேலும் இவை அவர்களைப் பாதிப்பது மட்டுமன்றி அவர்களைச் சார்ந்தவர்களையும் பாதிக்கின்றது. எனவே, இத்தகைய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதே பாடசாலைகளின் முக்கிய நோக்கமாக மாற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் உளவளத்துணைச் சேவை அவசியமாகத் தேவை என்பது உணரப்பட்ட போதிலும், 9 வருடங்களைக் கடந்த நிலையிலும், தற்போதும் இச்சேவை ஆரம்ப நிலையில் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறான பின்னடைவு காணப்படுவதற்குப் பல்வேறு காரணங்களை முன்வைக்கலாம். அவற்றில் பிரதானமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### எதிர்மறையான பார்வை

எமது சமூகத்தில் அநேகமானோர் உளவளத்துணை என்பதனை ஒரு சொல்லாகவே விளங்கி வைத்துள்ளனர். அதில் அடங்கியுள்ள பிரதான விடயங்க ளையோ அது தொடர்பான போதிய விளக் கத்தையோ அறியாதுள்ளனர். எனவே உளவளத்துணை தேவையான சந்தர்ப்பங் களைக்கூட இனங்காண முடியாத நிலையி லுள்ளனர். எனவே, ஆரம்ப நிலையில் கவனிக்கப்படாது விடப்பட்டு, நிலைமை மிகவும் மோசமான நிலைக்குப் போன பின்னர் கவனிக்கும் நிலை பரவலாகக் காணப்படு கின்றது. இதற்குப் பிரதான காரணம் உளவளத்துணை என்பதனை வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்கின்றமையேயாகும்.

### அணுகுமுறை

உளவளத்துணை என்பது மிகவும் கவனமாகவும் உணர்வு பூர்வமாகவும் அர்ப்பணிப்புடனும் மேற்கொள்ள வேண்டிய

தொன்றாகக் காணப்படுகின்றது. இச் சேவையின் வெற்றி இவற்றிலேயே தங்கியுள்ளது. இப்பண்புகளை வளர்க்க வேண்டுமெனில் உளவளத்துணையாளர் தன்னகத்தே பொறுமை, விடய அறிவு, உளவளத்துணைத் திறன்களைச் சேவைநாடி தொடர்பில் அக்கறை போன்றவற்றைக் கொண்டிருக்க வேண்டும். இச்சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களில் அநேகமானோர் இவ்விடயம் தொடர்பான எவ்விதமான பயிற்சிகளையும் பெறாத நிலையிலுள்ளனர். இவ்வாறான நிலையில், உளவளத்துணை வழங்குகையில் அது சேவைநாடிக்குப் பாதகமாக அமையும் என்பதில் சந்தேக மில்லை. எனவே ஆசிரியர்கள் குறைந்த பட்சம் அடிப்படைத் திறன்களையாவது வளர்த்துக்கொள்ள வேண்டும். மேற் கூறியவற்றின் காரணமாக இச்சேவை வலுவிழந்து காணப்படுகின்றது.

## நம்பிக்கையற்ற நிலைமை

உளவளத்துணை என்பது முழுமையாக நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கையினை வெறும் வார்த்தைகள் மூலம் ஏற்படுத்த முடியாது. ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்படுவதன் மூலம் நம்பிக்கையினை ஏற்படுத்த முடியும். ஆசிரியர்கள் தமது சொல்லிற்கும் செயலிற்கும் இடையே இடைவெளி இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் செய்ய முடியாத விடயங்கள் தொடர்பில் வாக்குறுதிகளை வழங்கக்கூடாது. ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் கூடிய தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் இதன் மூலம் இரு தரப்பின ரிடையேயும் புரிந்துணர்வு ஏற்படும். நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செயற்படாத வரையும் உளவளத்துணை நல்ல விளைவு களைப் பெற்றுத்தராது.

## உடனடித் தீர்வினை எதிர்பார்த்தல்

பாடசாலைகளில் ஒரு பிள்ளை உளவளத்துணை ஆசிரியரைச் சந்தித்து வந்தவுடன் எதிர்பார்த்த மாற்றத்தைக் காண வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இது முற்றிலும் தவறான எண்ணக்கருவாகும். சில பிரச்சினைகளின் அடிப்படைக் காரணத்தை அறிவதற்கே பல மாதங்களோ வருடமோகூட ஆகலாம். மேலும் பிள்ளையினுடைய பிரச்சினையினை கையாளக்கூடிய கொள்ளளவு ஆசிரியரிடம் இல்லாமல்கூட இருக்கலாம். இவ்வேளையில் காலம் தாழ்த்தாது பரிந்துரை செய்ய வேண்டும். **உடனடித் தீர்வை எதிர்பார்ப்பதனாலும் உளவளத்துணை தோல்வி அடைகிறது எனலாம்.**

## மாற்றத்தை அளவிட முடியாத தன்மை

உளவளத்துணை, பண்பு சார்ந்த விடயமாக இருப்பதனால் அதனை அளவிடுவது என்பது சிரமமானது. மாற்றத்தை அளவிட வேண்டுமெனின், ஒருவரை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

உளவளத்துணையின் அவசியத் திற்கும் பின்னடைவிற்கான காரணங்களுக் குமிடையில் பெரிய இடைவெளி காணப்படுகின்றது. இந்த இடைவெளியின் அளவைக் குறைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே உளவளத்துணையின் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆசிரியர்கள் பிள்ளையின் எதிர்காலம், உளச்சமூக நன்னிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு மாணவர்களை அக்கறையுடனும் கரிசனை யுடனும் மனிதாபிமான முறையில் ஆதரவு வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கான முயற்சி களை மேற்கொள்வது காலத்தின் தேவை யாகும்.

"நோக்கங்களுக்கு (Aims) அடுத்ததாகக் குறிக்கோள்களும் (Goals) அவற்றைத் தொடர்ந்து இலக்குகளும் (Objectives) கலைத்திட்ட ஆய்வுகளிற் சிறப்பிடம் பெறுகின்றன"

கலாநிதி சபா. ஜெயராசா

# விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகளுக்கான விசேட கல்வியின் முக்கியத்துவம்

**S.தரணிஸ்வராநந்தா** (Trd, BA, BEd)
பிரதி அதிபர்
மட்/சிவானந்தா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)
மட்டக்களப்பு

விசேட கல்வி என்பது, சாதரண பாடசாலைகளில் வழங்கப்படும் ஒழுங்கமைக் கப்பட்ட பாடவிதானம், கலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் கல்வி முறைமைக்கு அமைவாக சிரமப்படும் பிள்ளைகளுக்கு அவர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு விசேடமாக வழங்கப்படும், விசேட கல்வியினது துலங்கலின் வெளிப் பாடாகும் எனக் கூறலாம்.

நிருணயிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து வரும் பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளாவார். வகுப்பறைச் சூழலில் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் வகுப்பறைச் சூழலில் துலங்கலை வெளிப்ப டுத்துவதில் சிரமப்படும் மாணவர்களை வகுப்பறை முகாமைத்துவ மதிப்பீட்டின் மூலம் விசேட தேவையுடைய மாணவர்களாக இனங்காண முடியும்.

எல்லாப் பிள்ளைகளும் பாடசாலை யைச் சூழ உள்ள சமூகத்தில் இருந்தே பாடசாலைக்கு வருகின்றனர். கல்வியின் நோக்கம் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பிரஜைகளைக் கொண்ட எதிர்காலச் சமூகத்தை உருவாக்குவதாகும். அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்பது, யுனிசெப்பின் கொள்கையாகும். (''Education for all") அதுமட்டுமன்றி மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கி உதவி செய்து வருகின்றது.

பிரித்தானியாவில் 1944ஆம் ஆண்டில் கல்விச்சட்டத்தில் கல்வியில் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் 10 வகையினராகவும் விசேட தேவையுள்ள பிள்ளைகள் 12 வகையினராகவும் வகைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தேசிய கல்வி நிறுவகத்தின் தொழில்சார் அபிவிருத்தி மையம், விசேட தேவையுள்ள பிள்ளைகளை பின்வரும் 7 வகைக்குள் உள்ளடக்கியுள்ளது.

- மிகத்திறனும் விசேட நிபுணத்துவமும்
- பார்வைக் குறைபாடு
- கேட்டற் குறைபாடு
- குருட்டுத்தன்மையும் செவிட்டுத்தன்மையும்
- உடல் ஊனங்களும் மற்றும் ஆரோக்கியக் குறைபாடுகளும்
- மந்தமான உளவளர்ச்சி
- கற்றல் குறைபாடுகள்

இவ்வாறான விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் விசேடமாகக் கல்விச் சேவை ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவது போல் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது முன்னணியில் நிற்கிறது. இலங்கையின் எழுத்தறிவு வீதம் 95% ஆக இருந்த போதிலும் விசேட கல்வி தேவைப் படும் பிள்ளைகள் சுமார் 10% ஆகும்.

உடல் உள அல்லது அங்கக் குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு மனவெழுச்சி நடத்தைக் கோலங்களில் மாற்றம் ஏற்படுத் துதல், பிள்ளைகளின் அடிப்படைத் தேவை களான, அன்பு, காப்பு, கணிப்புத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கும் மெல்லக்கற்போர் விசேட கற்றல் பிரச்சினை

உள்ளவர்களுக்கும், கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைச் சேவை வழங்குதல் விசேட கல்வி எனலாம்.

பிள்ளைகளின் அறிவு ஆற்றல் திறன் திறமைகள் குறைபாடுகள் தேவைகள் போன்ற பல்வேறு காரணிகளை இனங் கண்டு பொருத்தமான கற்பித்தல் தொழில் நுட்ப முறைமூலம் பிள்ளைகளுக்கு ஏற்ற வகையில் விசேட கல்விச்செயற்பாடு மேற் கொள்ளப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் உறுப்பு நிறுவனங்களும் வலது குறைந்தவர் களுக்கான மனித உரிமைகள் சாசனம், சிறுவர் உரிமைகள் சாசனம் என்பவற்றில் விசேட கல்வியை உள்ளடக்கியுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் உறுப்புரை 23; 28 ஆகிய இரண்டும் கல்வி சார்ந்த விடயங்கள் பற்றி தனித்தனியாக விபரிக்கின்றன.

1ஆவது அத்தியாயத்தில் பிள்ளையின் உட உள கௌரவத்தை உறுதிப்படுத்தல்

2ஆவது அத்தியாயத்தில் ஊனமுற்ற பிள்ளையின் விசேட பராமரிப்பை உறுதிப் படுத்தல்

3ஆவது அத்தியாயத்தில் விசேட தேவைகளில் ஆன்மிக மேம்பாடுகள், கலாசார ஒற்றுமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

4ஆவது அத்தியாயத்தில் ஊனமுற்ற பிள்ளைகளின் நோய்த்தடுப்பு, பராமரிப்பு வைத்திய உளவியல், சிகிச்சைகள் செய்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**சிறுவர் உரிமை சமவாயத்தில் 28ஆவது உறுப்புரை:**

கல்வி கற்கும் உரிமை சகல பிள்ளைகளுக்கும் உள்ளது. மானிட உரிமை கல்வி உரிமை எல்லாம் சகலருக்கும் பாகுபாடின்றி வழங்கப்பட வேண்டும்.

உட்படுத்தல் கல்வி **(Inclusive education)** என்பது, தான் வாழும் சூழலில் இயலுமை இல்லாத பிள்ளையை இயலுமையுள்ள பிள்ளையுடன் சேர்த்து விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் ஒரே வகுப்பில் வைத்து ஒரே ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைக் குறிக்கின்றது.

**விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள்:**

மீத்திறன் கூடியவர்கள் மீத்திறன் குறைந்தவர்கள், மத்திமமான பிள்ளைகள் (மெல்லக் கற்கும் பிள்ளைகள்) உடற்குறைபாடுள்ள பிள்ளைகள், மந்த புத்தியுள்ள பிள்ளைகள், பிழையான சீராக்கம் பெற்ற பிள்ளைகள், நெறிபிறழ்ந்த பிள்ளைகள் ஆகியோருக்கு விசேட கல்வி வழங்கப்பட வேண்டும்.

**1. மீத்திறன் கூடிய பிள்ளைகள்**

மீத்திறன் கூடிய பிள்ளைகள் விரைவாகக் கற்றலில் துலங்கலைக் காட்டுவதுண்டு. அதாவது சாதாரண பிள்ளைகளை விட இவர்களின் சிந்திக்கும் ஆற்றல், நுண்மதிஈவு குறிப்பிட்ட வயதை விட அதிகமாக இருக்கும். இவர்களுக்கு வகுப்பேற்றல், புலமைப்பரிசில் வழங்குதல் போன்ற விசேட செயற்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்

**2. மீத்திறன் குறைந்த பிள்ளைகள்**

மீத்திறன் குறைந்த பிள்ளைகள் விரைவாகக் கற்றலில் துலங்கலைக் காட்டார். இவர்கள் சாதாரண பிள்ளைகளைவிட சிந்திக்கும் ஆற்றல், நுண்மதிஈவு, ஆக்கத்திறன் ஊக்கத்திறன் எதிர்கால விருப்பங்கள் என்பன குறைவாக இருக்கும். இவர்களை இனங்கண்டு விசேட செயற்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். மெல்லக்கற்கும் மாணவர்கள், சாதாரண மாணவர்கள்

நியமங்களுக்கேற்ப கற்றலில் துலங்கலைக் காட்டுவர். தரம் 5இல் கற்க வேண்டிய பிள்ளை தரம் 4இல் கல்வி கற்பது பிள்ளையின் நுண்மதி ஈவும் சிந்தனை ஆற்றலும் குறைவாக இருக்கும்.

இவ்வாறு மாணவர் பின்தங்கிக் காணப் படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

பாடசாலைக்கு அடிக்கடி சமுகமளிக்காத மாணவர்கள் பாடசாலை வேளைகளில் விருப்பு இல்லாத வீட்டுச்சூழல் உடற் குறைபாடு, சமூகமயமாக்கல் பெற்றுக் கொள்ளாத நிலை / மனவெழுச்சி, இடம் பெயர்வு, யுத்த சூழலில் அகதி வாழ்க்கை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவர்களுக்கு ஆசிரியரின் அன்பும் அரவணைப்பும், பெற்றோர் ஆலோசனை வழங்குதல், ஆலோசனை வழிகாட்டல் பயிற்சியையும் சிகிச்சையையும் வழங்குதல் மூலம் மாற்றியமைக்கலாம்.

### 3. உடற்குறைபாடுடைய பிள்ளைகள்

ஒரு பிள்ளை உடற்குறைபாடுடையதாக இருந்தால் கற்றல் துலங்கலில் ஆர்வம் காட்டமாட்டார். பார்வை, கேள்விக் குறைபாடுடைய பிள்ளைகள் வாசிப்பதில் சிரமத்தை எதிர் நோக்கக்கூடும். பேச்சுக் குறைபாடு, வாசிப்பதில் மந்தபுத்தி, சமூகமயமாக்கல், பிள்ளையின் மனவெழுச்சி முதலியன இடர்ப்பாடுள்ள பிள்ளைகளாக மாற்றிவிடும்.

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார தாபனத்தின் (யுனெஸ்கோ) வெளியீடு பிள்ளை பற்றிப் பின்வருமாறு கூறுகிறது. "குறைபாடுள்ள சகல பிள்ளைகளுக்கும் கல்வியைப் பெற்றுக் கொள்ள உரிமை இருக்கின்றது. இவர்களைப் பூரணத்துவம் அடைந்த நற்பிரஜையாக உருவாக்க, சீராக்கப்படல் வேண்டும். வைத்திய பரிசோதனை வழங்குதல், கட்புல செவிப்புலச் சாதனங்கள் பெற்றுக்கொடுத்தல், விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல் அவசியம்."

### 4. பேச்சுக் குறைபாடுடைய மாணவர்கள்

சில மாணவர்கள் கதைப்பதற்கு விருப்பமில்லாதிருப்பர், கதைப்பதற்கு சிரமப் படுதல். மொழியை உச்சரித்துத் தெளிவாகப் பேசுவதற்கு இடர்ப்படுவர். ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரித்தல் பேச்சுத்திறன் தெளிவின்மை, கண் இமைகள் மூடுதல், முகபாவனை இடர்பாடுகள். இவர்கள் தேவையை இயன்றளவு நிறைவேற்ற வேண்டும்.

### 5. உடற்குறைபாடுடைய மாணவர்கள்

உடற்குறைபாடுடைய மாணவர்கள் விபத்து மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் உடல் பலவீனமும் அடிக்கடி மனவெழுச்சிகளால் பாதிக்கப்படுவதாகவும் இருப்பர். உடல் சமநிலை அற்றவர்கள் இவர்களுக்கு விசேட உதவி தேவைப்படுகிறது.

இவர்களுக்கு விசேட ஆசனம் வழங்குதல், உடல் சமநிலை அற்ற மாணவர்கள் நடமாடுதலின் போது கவனம் செலுத்துதல், மற்றும் மாணவர்களைப் பாராட்டுதல் விசேட உபகரணங்கள் வழங்குதல் மூலம் நடவடிக்கை எடுத்தல்.

### 6. நோய் ஏற்படும் பிள்ளைகள்

வகுப்பறையில் வலிப்பு, மயக்கம், தலையிடி போன்ற நோய்கள் அடிக்கடி ஏற்படுபவர்களைக் கண்காணிக்க வேண்டும். இவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு விசேட தேவையும் விசேட கல்வியும் வழங்கப்பட வேண்டும்.

7. பிழையான சீராக்கம் உள்ள பிள்ளைகள்

விசேட உதவி தேவைப்படும் மற்றொரு வகையான பிள்ளைகள் இவர்களாவர். இவர்கள் சமுதாயத்துடன் பொருத்தப்பாடு இல்லாவிட்டால் இவர்களது நடத்தைகள் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும். பரம்பரைக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்பச் சூழலில் தண்டனை வழங்கப்படும் போதும் கட்டுப்பாடு விதிக்கப்படும் போதும் பிள்ளைகள் புறக்கணிக்கப்படும் போதும் பிள்ளைகள் பிறழ்வான நடத்தைக்கு உள்ளாகுவர். இவ்வாறான பிள்ளைகளுக்கு அறநெறிப் பண்புகளைப் புகட்ட வேண்டும். அவர்களின் தேவைகள் இனங்கண்டு வழங்கப்பட வேண்டும். எபிரஹாம் மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டின்படி அன்பு, காப்பு, கணிப்பு, உணவு, உடலியக்கத் தேவைகள் சரியான முறையில் வழங்கப்படுமானால் ஒரு சீரான பிள்ளையாக மாறும் வாய்ப்பு ஏற்படும். இதுமட்டுமன்றி முரட்டுச் சுபாவம், தாழ்வுச் சிக்கல், தனிமையில் இருத்தல் பொருட்களைச் சேதப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் பிழையான சீராக்கத்தை ஏற்படுத்தும். இவர்களுக்கு ஆசிரியர் வழிகாட்டலுடன் பெற்றோரிடம் கலந்துரையாடி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

8. நெறிபிறழந்த பிள்ளைகள்

நெறிபிறழ்வு என்பது நடத்தை பற்றிய ஒரு பிரச்சினையாகும். நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும். நெறி பிறழ்விற்குச் சமூகக் காரணிகள் பொருளாதாரக் காரணிகள், சூழல் உளவியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. கற்றலில் பிரச்சினை ஏற்படுத்துவதற்கு உடல், உள நடத்தைக் குறைபாடுகள் காரணமாக அமைகின்றன. இவ்வாறான பிள்ளைகளை வழிப்படுத்துவது ஆசிரியரது உன்னத பொறுப்பாகும்.

ஒட்டு மொத்தத்தில் இயற்கை அனர்த்தங்கள் சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்றவையும் மற்றும் 30 வருட கால யுத்தத்தின் தாக்கமும் மேலைத்தேய கலாசார மோகங்களும் இன்றைய மாணவர் சமூகத்தைப் பாதித்துள்ளன. இவ்வாறான பிள்ளைகளுக்கு விசேடமாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கப்பட்டு வருகின்றது. இது மட்டுமன்றி இனங் காணப்பட்ட மாணவர்களுக்கு உடற்பயிற்சி, தியானம் குழுவிளையாட்டு, ஒத்துணர்வு போன்ற செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் மாணவர்களின் மன முரண்பாட்டைச் சீராக்க முடியும்.

GIZ நிறுவனத்தினால் நடாத்தப்படும் சகோதர சந்தோஷம் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக, கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களிடையே அனைத்து இன மாணவர்களின் பயிற்சிப் பட்டறை மூலம் ஒற்றுமையை வளர்க்கக் கூடியதாகவும் மன மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தது.

எனவே விசேட தேவையுடைய பிள்ளைகளை வழிபடுத்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக நிறுவனங்களும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

1. விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள்
2. மகிழ்ச்சிகரமான கற்றல் GTZ
3. வாண்மைவிருத்தி GTZ
4. சிறுவர் உளநலம் GTZ

"பலா மரம் இசைக்காது. ஆனால் அது வீணையானால் இசைக்கும். அது அதுவாக இருக்கும் போதும் அது வேறொன்றாக மாறும் போதும் அதனின் சிறப்புக்கள் மாறுகின்றன." - யுவன்

# க.பொ.த உயர்தர வகுப்புக்களில் "வாழ்க்கை மேம்பாட்டிற்கான தேர்ச்சி விருத்திச் செயற்றிட்ட நடைமுறை"

**திருமதி சி. கங்கேஸ்வரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளார்
(கல்வி அபிவிருத்தி)
வலயக் கல்வி அலுவலகம். மட்டக்களப்பு.

இலங்கைப் பாடசாலைக் கல்வி முறைமையில் எதிர்காலச் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கும் விஞ்ஞான, தொழிநுட்பத் துரித வளர்ச்சிக் கேற்ப அறிவை விருத்தியடையச் செய்யவும் ஒவ்வொருவரும் தமது ஆளுமைக்கேற்ப, பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கௌரவமாக வாழ்ந்திடவும் போதியளவு ஒழுங்கமைப்பும் வழிகாட்டலும் இல்லை என்பது பலராலும் சுட்டிக்காட்டப்படும் ஒரு விடயமாகும். முறைசார் கலைத்திட்டத்தைப் பயிலும் மாணவர்கள் தமது அறிவைக் காலத்திற்கேற்பப் புதுப்பித்துக்கொள்வதற்கு முடியாமலுள்ளது.

இருப்பினும் இலங்கையின் கல்வி முறைமையிலும் பல புதிய விடயங்கள், மாற்றங்கள், சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத் தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டேவருகின்றது இதனூடாக மாணவர்களை பரீட்சை மையக் கற்றலில் இருந்து விடுவித்து இன்றைய காலகட்டத்தின் நடைமுறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் சுயமாகத் தேடிக் கற்பதற்கும் ஆராய்ந்து கற்பதற்கும் வழிப்படுத்துவது இன்றியமையாததாகும், இதனை அடிப்ப டையாக வைத்தே பாடசாலைக் கலைத் திட்டத்தில் செயற்றிட்ட மையக் கற்பித்தல் பொதுவாக இடைநிலை வகுப்புக்களிலும், உயர்தர வகுப்புக்களிலும் அறிமுகப்படுத்தப் பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பாடசாலை தொடக்கம் பல்கலைக் கழகம் வரை செயற்றிட்ட நடைமுறை காணப் படுகின்றது. இடைநிலை வகுப்புக்களில் (6-11) பொதுவாக இச்செயற்றிட்டம் பாடங்களுடன் தொடர்புடையதாக, சிறிய தலைப்புக்களை மாணவருக்கு வழங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளை, உயர்தர வகுப்புக்களில் மாணவர்கள் தாம் விரும்பும் எந்தத் துறையிலும் எத்தலைப்பையும் தெரிவுசெய்து அது சார்ந்த விடயங்களை ஆய்வு செய்ய வழிகாட்டப்படுகின்றது. சிறப்பாகக் கூறப் போனால் உயர்தர வகுப்பு மாணவர்களது வயதும் அவர்களது பருவமும் சிந்தனையைத் தூண்டும் அறிவைப் புதுப்பிக்கும் தேடலும் ஆர்வமுடைய ஒரு புத்துணர்ச்சியான நிலையாகும். இவர்களது இத்தகைய அறிவுப் பசிக்கு எமது கல்விமுறைமையும் ஆசிரியர்களும் தேடித் தேடி புதுப்புது வழிகளில் ஆகாரமளித்தல் வேண்டும். அன்றேல் மாணவர்களது ஆற்றலும் திறன்களும் வலுகுன்றிப் போகலாம் என்பது திண்ணம். எனவே, இவர்களது அறிவுசார்ந்த திறன்களை விருத்தியடையச் செய்வதற்காகக் கலைத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விடயங்களில் ஒன்றே " வாழ்க்கை மேம்பாட்டிற்கான தேர்ச்சிசார் விருத்திச் செயற்றிட்டம்" ஆகும்.

**செயற்றிட்டம்:-** செயற்றிட்டம் என்னும் எண்ணக்கருவை எடுத்துக்கொண்டால் எம்மால் அடையக்கூடியதும் விளைதிறன் கொண்டதுமான ஒரு குறிக்கோளை / குறிக்கோள்களை அடைவதற்காகச் சிறந்தமுறையில் திட்டமிடப்பட்டதும் செயற் பாட்டொழுங்கைக் கொண்டதும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் அடையக்கூடியது மான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்து வதன் மூலம் மாணவரது ஆற்றலையும் தேர்ச்சிகளையும் விருத்தி செய்வதற்கு வழிகோலும் ஒரு செயன்முறையாகும்.

**உயர்தர வகுப்பில் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் நோக்கங்கள்:**

உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் பாடசாலைக் கல்வியின் இறுதிக் கட்டத்தில் இருப்பவர்கள். தொடர்ந்து பல்கலைக்கழக அனுமதியையோ வேலை வாய்ப்புக்களையோ வேறு உயர் பாடநெறி களைத் தொடர்வதனையோ நோக்கமாகக் கொண்டிருப்பர்.

பாடசாலைக்கல்வி முடிந்து, பல்க லைக்கழக அனுமதி கிடைத்து அங்கு தமது கற்கைநெறிகளைத் தொடங்கும் போது அவர்கள் கட்டாயமாகக் கற்றலின் ஒரு பகுதியாக ஏதாவதொரு ஆய்வினை மேற் கொள்ளல் அவசியமாகும். அந்த வகையில் செயற்றிட்டம் ஆய்வை இலகுவாக மேற் கொள்வதற்கு அடித்தளமாக அமைந்து கற்றலை இலகுபடுத்துகின்றது.

தமது வாழ்க்கைப் பயணத்தில் எதிர்கொள்ளும் பலவாறான தடைகள், சிக்கல்கள், பிரச்சினைகளை மன உறுதியுடன் எதிர்கொண்டு வாழ்க்கையில் வெற்றிய டைந்து மகிழ்வுடன் வாழ வழிவகுக்கின்றது.

குடும்பம், பாடசாலை, சமூகம் தொடர் பான அறிவினையும் விளக்கத்தினையும் பெற்றுக்கொள்வதுடன் குழுவாக இணைந்து நட்புடன் கருமமாற்றவும் ஏற்ற மனப்பாங்கைப் பெறுவர்.

சிறப்பாக மாணவன் ஒருவன் செயற்றிட்டமொன்றைத் திட்டமிட்டு அமுல் படுத்தும் போது அவனது தன்னம்பிக்கையும் ஆளுமையும் விருத்தியடைகின்றன.

தனியார்துறை, அரசதுறைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெறும்போது அவர்களது வாண்மை விருத்தி திருப்திகரமாக அமையும்.

திட்டமிடல், நேரமுகாமைத்துவம் ஓய்வுநேரத்தைப் பயனுள்ளதாகக் கழித்தல், தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய மனப்பாங்கு போன்ற திறன்கள் விருத்தியடையும்.

இவ்வாறான பல சிறந்த நோக்கங் களுடன் இச்செயற்றிட்ட நடைமுறை உயர்தர வகுப்புக்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**செயற்றிட்ட நடைமுறை:**

மாணவர்கள் செயற்றிட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில், அவர்களுடன் இணைந்ததாகப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கும் பெரும் பங்கும் பொறுப்புக்களும் உண்டு.

**மாணவர்:**

உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக அவர்களது கற்கை ஆண்டுகளுக்குள் தனிச் செயற்திட்டம், குழுச்செயற்றிட்டம் என இரு செயற்றிட் டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து ஆசிரியரது வழிகாட்டலுடன் குறிப்பிட்ட காலத்தினுள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

தனிச்செயற்றிட்டத்தைக் கற்கை ஆண்டின் முதல் 03 மாதங்களிலும் குழுச் செயற்றிட்டத்தை முதல் 06 மாதங்களினுள்ளும் நடைமுறைப் படுத்தி முடித்தலில் கவனமெடுத்தல் வேண்டும்.

**ஆசிரியரது பொறுப்புக்கள்:**

1. தமக்குப் பொறுப்பளிக்கப்பட்ட மாணவர் களுக்குச் செயற்றிட்டங்களை அறிமுகஞ் செய்தல்
2. மாணவர்கள் தலைப்பைத் தெரிவு செய்வதற்காக வழிகாட்டல்
3. திட்டமிடலும் அமுலாக்கலும்
4. சம்பந்தப்பட்ட துறைகளை முழுமையாக ஆய்வு செய்தல்

5. செயற்றிட்ட அறிக்கை தயாரித்தலுக்குப் பங்களிப்பு செய்தல்
6. கணிப்பீடும் மதிப்பீடும்
7. நெறிப்படுத்தல்
8. மேற்பார்வை மற்றும் செழுமையாக்கம்
9. கண்காணிப்பு
10. ஆலோசனைகளையும் வசதிகளையும் வழங்குதல்

இவ்வாறாக ஆசிரியர்களுக்குப் பல பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் ஆணிவேராக விளங்கும் ஆசிரியர்களது பங்களிப்பிலும் வழிகாட்டலிலும் கண்காணிப்பிலுமே உயர்தர வகுப்புச் செயற்றிட்டத்தின் விளைதிறன் தங்கியுள்ளது. ஆசிரியரது இப்பணி ஒரு தொடர்ச்சியான செயன்முறையாக அமைதல் இன்றியமையாததாகும்.

ஆசிரியர்களே மாணவர்களுக்குச் "செயற்றிட்டம் என்றால் என்ன?" என்பதனை விளக்கி, அவர்களுக்குப் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்துகொள்ள வழிகாட்ட வேண்டும். மாணவனுக்கு தலைப்புப் பொருந்துமா? ஆய்வுகளை மேற்கொள்ள வசதிகள் உண்டா? தடைகள் ஏற்படுமா? அதில் எவ்வாறு வெற்றி காண்பது என்பன போன்ற சகல விடயங்களிலும் ஆசிரியருக்குப் பொறுப்புண்டு.

ஒவ்வொரு மாணவனதும் செயற்றிட்ட முன் மொழிவினைத் தனித்தனியே ஆய்வு செய்யவும் அதில் தவறுகள் இருக்கும் பட்சத்தில் அதனைத் திருத்துவதற்கு மாணவருக்கு உதவிசெய்து சரியான வழிகாட்டலை மேற்கொள்ளவும் வேண்டியது ஆசிரியரே.

செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தும் போது ஒவ்வொரு நிலையிலும் அவர்களுடன் கூட இருந்து உன்னிப்பாகக் கவனித்து அதற்கான சரியான பாதையில் செல்ல ஆசிரியர்களே வழிகாட்டல் வேண்டும்.

மாணவரால் பேணப்பட்டு வரும் எந்தவொரு ஆவணத்தையும் அடிக்கடி பார்வையிட்டு பரீட்சித்து, அதனைத் திறம்பட விருத்தி செய்ய வழிகாட்ட வேண்டியது ஆசிரியரது கடமையாகும்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாணவருடன் ஒன்றாக இருந்து நெறிப்படுத்தல், மேற்பார்வை செய்தல், கண்காணிப்புச் செய்தல், வழிகாட்டல், தேவையான ஆலோசனைகளை வழங்குதல், வசதிகளைச் செய்துகொடுத்தல் என்பன ஆசிரியரால் தொடர்ச்சியாக வினைத்திறனுடன் செய்யப்பட வேண்டிய கடமைகளாகும்.

இவ்வாறாக ஆசிரியர்களுக்குச் செயற்றிட்ட நடைமுறை தொடர்பாகப் பல பொறுப்புக்களும் கடமைகளும் வழங்கப் பட்டுள்ள போதிலும், இவை இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்களால் சரிவரச் செய்யப்படுகின்றனவா? என்றால் அது கேள்விக்குறியாகவேயுள்ளது.

பொதுவாக, தற்போதைய நிலையில் ஆசிரியர்களுக்கு இந்நடைமுறை தொடர்பான போதிய விளக்கமின்மை காணப்படுகின்றது. இன்னும் கூறப்போனால் இச் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து ஆசிரியர்கள் இதனைக் கற்று விளங்கியிருந்தாலும் புதிதாக ஆசிரிய துறைக்குள் நுழைந்தவர்களுக்குப் போதிய விளக்கமின்மை காணப்படுகின்றது.

மற்றும் ஆசிரியர்களில் அநேகமானோரிடையே புதிய விடயங்கள் பற்றிய, புதிய சுற்றறிக்கைகள் பற்றிய இற்றைப்படுத்தல் இருப்பதில் பாரியதொரு குறைபாடு காணப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்பு திருப்திகரமாக இன்மையும் செயற்றிட்ட நடைமுறையின் வினைத்திறனைப் பாதிக்கின்றது. மாணவர்களிடையே செயற்றிட்டத்தை நடைமுறைப்

படுத்த முன்வராமை, அலட்சியப் போக்கு, ஆர்வமின்மை காணப்படுகின்றன. எனினும் நல்லாசிரியர் என்பவர் தம்மிடம் கற்கும் மாணவர்களது கல்வி மற்றும் ஆக்கத் திறன்களை மேம்படுத்துவதுடன் அவர்களது உளவியல் சார்ந்த தேவைகளையும் விளங்கி தமது நட்புடன் கூடிய அன்பான அணுகு முறைகளினூடே மாணவர்களது சில மீறல் களைக் கட்டுக்குள் கொண்டுவரும் ஆற்ற லையும் பண்பையும் கொண்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் எத்தனை வீதமான ஆசிரியர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர் என்பது அறியப்பட வேண்டியதொன்றாகும்.

ஏற்கனவே வேறு மாணவர்களால் செய்யப்பட்ட செயற்றிட்டத்தைப் பிரதி (Copy) பண்ணுதல், ஆசிரியர்களும் இதனை கவனிக்காது விடல், உரிய காலத்தில் மாணவரது முன்மொழிவைத் திருத்தி ஒப்படைத்து வழிகாட்டாது விடல் போன்ற நிலைகளுமே பல பாடசாலைகளில் காணப்படுகின்றன.

" மாணவர்களுக்குள் அடங்கியுள்ள புத்தாக்கத் திறனை விருத்திசெய்து அவர்களை எதிர்காலத்தில் சகல ஆளுமைப் பண்புகளுடன்கூடிய பூரண மனிதனாக வளர்த்தெடுப்பதில் செயற்றிட்டம் பெரும் பங்கெடுக்கிறது. மாணவர்களின் தேடலும் ஈடுபாடும் ஆய்வுத்திறனும் இதனால் மேம்படுத்தப்படுகிறது. இருந்த போதிலும் செயற்றிட்ட நடைமுறையின் முக்கியத்து வத்தை மாணவர்களுக்கு உணர்த்தும் நிலை எமது பாடசாலைகளில் காணப்படுகின்றதா என்பது தெளிவு பெறப்படவேண்டியதே.

## அதிபரது பொறுப்புக்கள்

செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நெறிப்படுத்துவதில் பாடசாலையின் அதிபருக்குப் பெரும் பங்குண்டு. உயர்தர வகுப்பு மாணவர்களது இச்செயற்றிட்டம் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைதிறனின் அடைவானது அதிபரின் மனப்பாங்கு, வாண்மைத் திறன், தலைமைத்துவத் திறன், ஆளுமை எனும் இயல்புகளில் தங்கியுள்ளது.

1. சுற்றுநிருபங்களுக்கேற்பக் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு உயர்தர வகுப்புக்குரிய 04 நூலகப் பாடங்களிலிருந்து 02 பாட வேளையை செயற்றிட்டத்திற்காக ஒதுக்கி அதனை அந்த ஆசிரியரது பாடவே ளையாகக் கணிப்பிட்டு அறிவுறுத்தல் வழங்கல்.

2. செயற்றிட்டத்திற்கேற்பப் பொறுப்பான ஆசிரியர்களைத் தெரிவுசெய்தல்.

3. செயற்றிட்டப் பணிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் ஆலோசனை களையும் உதவிகளையும் வழங்கி நடைமுறைப்படுத்துவதற்காகச் செயற்றிட்டக் குழுவைத் தாபித்தல்.

4. மாணவர்கள், ஆசிரியர்கள், குறிப்பிட்ட பெற்றோர்களை அழைத்து, செயற்றிட்டம் அமுல்படுத்தல் தொடர்பாக அறிவூட்டி வழிகாட்டல்.

5. தேவையான வசதிகளையும் வளங் களையும் மாணவர்களுக்கு வழங்கி, அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துத் தடைகளை அகற்ற உதவுதல்.

6. ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற் சிகளை வழங்கி, வளவாளர்களது பங்களிப்பையும் பெற்றுக் கொடுத்தல்.

7. செயற்றிட்ட நடைமுறைகள், செயற்றிட்டக் குழுவின் நடைமுறைகளைக் கண்கா ணித்து வழிப்படுத்தல்.

8. செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்தல்.

என்றவாறு பல பொறுப்புக்களும் பணிகளும் அதிபருக்குண்டு. இவ்வாறான

பாரிய பொறுப்புக்களை நிறைவேற்றும் பணியில் அதிபர்களது பங்களிப்பு எந்தளவில் உள்ளதென்பதும், அவர்கள் இச்செயற் றிட்டத்திற்கு அளிக்கும் முக்கியத்துவம் எந்தளவுள்ளது என்பதும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையிலுள்ளது.

பாடசாலைகளில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தல் தொடர்பான விளக்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோரை அறிவூட்டி வழிப்படுத்தல், வளங்களைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றால் அதிபர் களது பங்களிப்பு மேலும் அதிகரிக்கப்பட வேண்டிய நிலையிலேயேயுள்ளது. மாணவர் களும் செயற்றிட்டம் என்ற வகையில் ஏதாவதொன்றை செய்தால் சரி என்பது போன்ற மனநிலையிலுள்ளனர்.

அதிபர்கள் குறிப்பிட்ட ஆசிரியர்கள், மாணவர்களை அடிக்கடி அழைத்துக் கலந்துரையாடி அமுல்படுத்துவதிலுள்ள சிக்கல்கள், தடைகளை பற்றி உசாவுதல் கட்டாயமானது. மாணவரது தனிப்பட்ட விடயமே செயற்றிட்டம் எனும் நிலைமாறி அவர்களது சுதந்திரமானதும் ஆக்கபூர்வமா னதுமான சிந்தனைக்கும் தற்கால நடைமுறைகள் தொடர்பான ஆய்வுகளின் பால் அவர்களை ஈடுபடுத்துவதற்கும் தர்க்க ரீதியான சிந்தனைகளை வளர்ப்பதற்கும் செயற்றிட்ட நடைமுறை அவசியம் என்ப தனால் அதிபரும் ஆசிரியர்களும் ஒன்றுபட்டுச் செயற்பட்டு அவர்களுக்கு வழி காட்டுதல் அவசியமானதாகும்.

தற்காலக் கல்விமுறைமையின்கீழ் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேலைப் பளு அதிகம் என்பதும் உண்மையே. ஆசிரியர்களுக்குக் கற்றல் - கற்பித்தல் செயற் பாட்டைவிட்டு அதனுடன் இணைந்ததான பல்வேறு செயற்பாடுகளும் பொறுப்புகளும் வழங்கப்படுகின்றன. அவற்றையும் நிறைவு செய்ய வேண்டிய பாரிய பொறுப்பும் அவர்களுக்குண்டு. இதனால் தமது தனித்துவமான கற்றல் கற்பித்தற் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபடமுடியா மலுள்ளது என்பது ஆசிரியர்களிடையே பொதுவாகக் காணப்படும் ஒரு கருத்தாகும். இதனை மறுப்பதற்குமில்லை. இருந்தாலும் **"மாணவர்கள் எமது சொத்துக்கள் வளங்கள், எதிர்காலம் அவர்களே"** என்ற வகையில் அவர்களுடன் நட்புறவுடன் இணைந்து செயற்பட்டு அவர்களைப் பூரணத் துவமுடைய ஒரு மனிதனாக வாழவைக்கும் பணியை நாம் செய்தே ஆக வேண்டும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

*"வெற்றிகரமான பாடசாலைத் தலைவர், முகாமைத்துவத்தினையும் தலைமைத்துவத்தினையும் இணைத்து நோக்குவதோடு அதனை மேம்படுத்தும் வகையில்,*

- *தரமான கற்பித்தலுக்கான நேரத்தினை அதிகரித்தல்*
- *பாடசாலையிற் சேகரிக்கும் தரவுகளைப் பயன்படுத்துதல்*
- *சிறந்த முறையிலான நேரப் பயன்பாடு*
- *தொழில்சார் முன்னேற்றத்தில் ஈடுபாடு காட்டுதல்*
- *பாடசாலைகளில் நடைபெறும் விடயங்களையிட்டுப் பிரதிபலித்தல்*

*போன்ற உபாயங்களைப் பயன்படுத்துவார்."*

– முனைவர் மா. கருணாநிதி



# ஆரம்பக்கல்வி மாணவர்களும் உடல் விருத்திச் செயற்பாடுகளும்

கு.சிவராசா (வளவாளர்)
பாடசாலை விளையாட்டு விருத்தி.
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

மனித சமூகத்தை முழுமை பெறச் செய்வது கல்வியாகும். கல்வி என்பது தொடருறு செயற்பாடுகள் கொண்டது. இதன் அச்சாணியாகத் திகழ்பவர்கள் மாணவர் களாவர். இதற்கு மாணவர்களின் உடல் உள விருத்தி மிகவும் அவசியமாகும். அந்த வகையில் மாணவர்களை எதிர்கால உலக நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்து வாழக் கூடிய பிரஜைகளாக ஒழுங்கமைக்கும் பாரிய அர்ப்பணிப்பு மிகுந்த சேவை கல்விப் புலத்திலுள்ள அனைத்துப் பணியாளர் களையும் சார்ந்தது. இதனைக் கருத்திற் கொண்டு தேசிய கல்வி அமைச்சு "ஆரோக்கியமான மாணவர் சமூகம் - தரமான கல்வி" என்னும் தொனிப்பொருளின் கீழ் சுகாதார அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு ஆகியவற்றை இணைத்துக் கொண்டு நாடளாவிய ரீதியில் உள்ள ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குப் பயிற்சி களை வழங்கும் உயிர்ப்புமிகு நடவடிக்கை களை மேற்கொண் டுள்ளது. இதனை நாம் பல படிமுறைகளில் நோக்குதல் சாலவும் பொருந்தும்.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களின் பயனுறுதி மிக்க தன்மை மக்களின் பால் ஈர்ப்பது போல் மாணவர்களுக்கு உடல் உளப் பயிற்சிகள் இன்றியமையாததாகின்றன. அந்த வகையில் உடற்பயிற்சி விளையாட்டுக் களாகவும் உளப்பயிற்சி கற்றலாகவும் மாணவர்கள் மத்தியில் பரிணமிக்கின்றது. இவ்விரு செயற்பாடுகளும் சமாந்தரமாகப் பயணித்தல் கற்றலின் பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்திற்கு இட்டுச் செல்லும்.

### ◆ சான்றுகள்

முதலில் நவீன கல்வியியலாளர்கள், கற்றல் விருத்தியை உயர் மட்டத்தில் பேணுவதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றி நோக்குதல் சிறப்பானதாகும். "பிள்ளைகளின் உடலும் உள்ளமும் ஒத்த வளர்ச்சியை அடைதல் வேண்டும். உடலும், உள்ளமும் விருத்தி செய்யப்பட்டால் மட்டுமே பூரணமான மனிதனை உருவாக்கலாம்" என நவீன கல்விச் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ் கூறியுள்ளார். "பிள்ளைகளுக்கு உடற்பயிற்சி, உளப்பயிற்சி, ஆன்மிகப் பயிற்சி என்பவற்றை வழங்குவதன் மூலம் விருத்தி செய்யப்படுவது கல்வியாகும்" என நவீன கல்வியியலாளரான பிரெட்ரிக் புரோபல் குறிப்பிட்டுள்ளார். "பிள்ளைகளுக்கு உடல், உள புலனியக்கப் பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். வெறுமனே ஏட்டுப் பயிற்சிகள் மட்டும் போதாது" என நவீன கல்வியியலாளரான ரூசோ கூறியுள்ளார்.

சிறுவர்களின் கல்விச் செயற்பாடு பற்றிக் கூற வந்த பாரதியார்

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா

என்று உடற்பயிற்சி பற்றிக் குறிப்பிட்டதோடு மட்டும் நின்று விடாது

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு என்றும்
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா

எனப் பாடியுள்ளதன் மூலம் உடற்பயிற்சிச் செயற்பாட்டினைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும் என்பது "வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா" என்பதன் மூலம் வலியுறுத்தப்பட்டு இருப்பதைக் காணலாம்.

"தளர்விலாத மனம் வேண்டும்" என்கிறார் அபிராமிப்பட்டர். "மனமது செம்மையாகில் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என்பது சான்றோர் வாக்கு. அதாவது மன அமைப்பு, சிறப்பாக இருப்பின் மந்திரம் கூறிப் பிரார்த்திக்க வேண்டியதில்லை. காரியங்களைச் சிறப்பாக ஆற்றக் கூடியதாக இருக்கும். மேலும் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்கிறது பழமொழி. இது உடலுக்கும் மனத்திற்கும் நேரடித் தொடர்பு உண்டு என்பதைச் சுட்டிநிற்கிறது. எனவே இவை இரண்டையும் மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை கல்வியை வழங்கும் ஆசிரியர்களுக்கு உண்டு என்பது புலனாகும்.

◆ **இலக்குகள்**

மாணவர்களுக்கு உடற்பயிற்சிகளையும் விளையாட்டுப் பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துவதன் ஊடாகப் பாடசாலையிலும் வீட்டிலும் பின்வரும் இலக்குகளை அடைந்துகொள்ள முடியும்.

1. மாணவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை வளர்த்தெடுத்தல்.

2. மாணவர்கள் எதிர்காலத்தில் ஈடுபடும் விளையாட்டுக்களின் அடிப்படைத் திறன்களை விருத்திசெய்து கொள்ளல். (Sports basic attitude)

3. மாணவர்களின் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை இலகுவாக்குதல். (learning + Teaching)

4. மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றற் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் (Joyful learning)

5. மாணவர்களின் கல்வியைத் தரமுள்ளதாகவும் நீடித்து நிலைக்கக்கூடியதாகவும் மாற்றுதல்.

6. மாணவர்களின் இடைவிலகலை (Drop Out) இழிவளவாக்குவதும் வரவை அதிகரிப்பதும்.

7. மாணவர்களை, ஆளுமை விருத்தியும் தலைமைத்துவப் பண்பும் (Personality + leadership) உடையவர்களாக மாற்றுதல்.

8. மாணவர்கள் தேசிய, சர்வதேச ரீதியாக விளையாட்டில் சாதனைகள் நிகழ்த்தும் வாய்ப்பினை வழங்குதல்.

9. மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்தை உயர் நிலைக்கு இட்டுச் செல்லல்.

10. மாணவர்களிடம் சிறந்த வளர்ச்சியையும் விருத்தியையும் ஏற்படுத்தல். (Growth + Development)

11. மாணவர்களின் என்புகள், தசைகளை வலிமைபெறச் செய்வதுடன் மூட்டுக்களின் சீரான இயக்கத்தைப் பேணுதல்.

12. மாணவர்களுக்குச் சிறந்த உடற்கட்டமைப்பைப் பேணுவதுடன் வளையும்

தன்மையையும் நெகிழும் தன்மையையும் வழங்குதல்.

13. மாணவர்களுக்குப் புதிய நண்பர்கள் உறவுகளை உருவாக்குவதும் அவர்களு டனான இடைவினைத்திறனையும் ஏற்படுத்தல்.

14. சக்தி உள்ளீடு, வெளியீடு சமநிலை தூண்டப்படுதல், அளவான உணவு உண்ண வும் சிறந்த தூக்கத்திற்கும் வழியேற்படுத்தல்.

15. மாணவர்களின், அளவிற்கு அதிகமான உடல் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல்.

16. மாணவர்கள் வெற்றி தோல்வி என்ற நெருக்கீடுகளுக்கு முகம்கொடுக்கப் பழகு வதால் பாடசாலையில் ஏற்படும் மனக்குழப் பங்களைத் தாங்கிக்கொள்ளும் மனப்பக் குவத்தை உருவாக்குதல்.

17. மாணவர்களின் சிறந்த ஆரோக்கிய பழக்க வழக்கங்களை வாழ்க்கை பூராகவும் பின்பற்ற வழிசெய்தல்.

18. மாணவர்களிடையே ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பளித்தல்.

19. உடலியல் ஆன்மிகவியல் நலம் ஏற்படுவதால் வாழ்க்கையைச் சீரான பாதை யில் இட்டுச் செல்ல நெறிப்படுத்தல்.

20. நாட்டில் சிறந்த உடல் உள ஆரோக் கியம் உள்ள சமூகத்தைத் தோற்றுவித்தல்.

♦ **சவால்கள்**

பாடசாலைகளில் உடற்பயிற்சி, விளையாட்டுப் பயிற்சிகளை வழங்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் பலவகைப்பட்ட சவால்களுக்கும் முகம் கொடுக்கும் துரதிஷ்ட நிலை காணப்படு கின்றது. அவையாவன பின்வருமாறு.

1. அதிபர் ஆசிரியர்களிடையே குறித்த செயற்பாடுகள் மீதான மனப்பாங்கில் மாற்றத்தினை ஏற்படுத்தல்.

2. குறித்த செயற்பாடுகளுக்குரிய இடவசதி அல்லது விளையாட்டு மைதானம் இல்லாமை.

3. கற்றல் செயற்பாடுகள் மீதுள்ள போட்டித் தன்மை காரணமாகப் பயிற்சிகள் வழங்கும் நேரத்தைப் புறந்தள்ளுதல்.

4. தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதும் கணினிச் செயற்பாடுகளில் அதிக நேரத்தைச் செலவிடுவதும்.

5. பாடசாலை மற்றும் தனியார் வகுப்பு (Tution Class) கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடல் அல்லது அதற்காக நீண்டநேரம் விழித்திருத்தல்.

6. பெற்றோர் இருவரும் அரசாங்கத் தொழில் புரிவோராக பொருளாதாரம் தேடுவதில் நாட்டங்கொள்ளல் அல்லது முயற்சியின்றி அதன் பெறுமதியை அறியாதிருத்தல்.

7. பாடசாலைகளில் பயிற்சிகளைப் பெற வசதி வாய்ப்புக்கள் குறைவாக இருத்தல். குறிப்பாக விளையாட்டு உபகரணங்கள் இன்மையும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவுவதும் காணப்படுகின்றன.

8. உடலைக் கஷ்டப்படுத்துகிறோம் என்ற உணர்வும் உடற்பயிற்சி மீதான ஆர்வமின்மையும்.

9. தனியார் வகுப்புக்களின் முக்கியத்துவத் தன்மை நிலை.

10. கல்விச் சமூகத்தின் பராமுகத்தன்மை அல்லது அது பற்றி விளங்கிக் கொள்ளத் தவறுதல்.

## ♦ வளங்கள்

மாணவர்களுக்குக் குறித்த பயிற்சிகளைத் தொடர்ச்சியாகப் பெற வழிவகுத்தல் இன்றியமையாததாகும். அந்த வகையில் அதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இதன் மீதான கரிசனை, அக்கறை கல்விச் சமூகத்திற்குரிய பொறுப்பாகும். குறிப்பாக அதிபர்கள் ஆசிரியர்கள் அதனை தேடிப்பெற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாடுடையவர்களாவோம். அவற்றில் பல வருமாறு:

1.ஆளுமை மிக்க அதிபர்கள் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்திக்கொள்ளல்.

2.பாடசாலையில் இருக்கும் இடங்களை உபயோகமுள்ளதாக மாற்றியமைத்தல் அல்லது மைதான வசதியை ஏற்படுத்திக் கொள்ளல்.

3. திட்டமிட்ட வகையில் நேரத்தைக் கற்றலுக்கு ஒதுக்குதல்.

4. தொலைக்காட்சியைச் சிறுவர் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் பார்ப்பதற்கு மட்டும் அனுமதித்தல்.

5. கணிணியைக் குறிப்பிட்ட நேரத்தில் கற்பதற்கு மட்டும் பயன்படுத்தல்.

6. பாடசாலைக்கு ஒழுங்காகவும் தனியார் வகுப்புகளுக்கு அத்தியாவசியமான பாடங்களுக்கு மட்டும் சென்று கற்றல்.

7. பெற்றோர்கள் இருவரும் அரசாங்க உத்தியோகம் செய்பவர்களாயின் உறவினர், நண்பர்கள், மூத்த சகோதரிகளின் கண்காணிப்பில் பிள்ளைகளைப் பொறுப்பளித்தலும் வழிப்படுத்தலும்.

8. உடலைக் கஷ்டப்படுத்துகிறோம் என்ற உணர்வைக் களைதலும் குறித்த பயிற்சியில் நாட்டங்கொள்ளச் செய்தலும் பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களின் பணியாகும்.

9. பாடசாலைக் கல்விக் கட்டமைப்பினை வலுவுள்ளதாக மாற்றுதல்.

10. பாடசாலைகளில் பயிற்சிகள் வழங்குதல், உபகரணம் பெற்றுக்கொள்ளுதல், மைதான வசதியைப் பெறுதல் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல் போன்ற நிகழ்வுகளுக்கு சமூகத்திலுள்ள நன்கொடையாளர்கள், அரசு சார்ந்த, அரசு சாராத நிறுவனங்கள் மாகாண தேசிய அரசியல் வாதிகள் போன்றோரின் உதவியை பெற்றுக்கொள்ளுதல்

## ♦ ஆற்றுகைகள்:

வீட்டுச் சூழலையும் உடற்பயிற்சி அல்லது விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட வசதி வாய்ப்புக்களை வழங்கி, பிள்ளைகளை ஈடுபடுத்தல் ஒவ்வொரு பெற்றோரினதும் முக்கிய கடமையாகும். அவற்றுக்கான படிமுறைகள் வருமாறு:

1. காலை மாலை வேளைகளில் தனியாக அல்லது நண்பர்களுடன் மரபு சார்ந்த, நவீன விளையாட்டுக்களில் ஈடுபடல்.

2. விடுமுறை நாள்களில் கடற்கரை, நீச்சல் தடாகங்கள், நடன வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லல்.

3. உணவு உண்டபின் நடத்தல்.

4. துவிச்சக்கர வண்டியில் பாதுகாப்பாகப் பயணம்செய்ய வழிப்படுத்தல்.

5. வீட்டிற்குப் பொருள்கள் வாங்கச் செல்லும் போது பிள்ளைகளை அழைத்துச் செல்லலும் பொதியைத் தூக்கிவரச் செய்தலும்.

6. மாடிப் படிகளில் நடக்க வழிப்படுத்தல். இயந்திர உயர்த்தியைத் தவிர்த்தல்.

7. பாடசாலைக்கு சிறிது தூரமாயின் நடந்து செல்லல்.

8. சிறு தூரங்களுக்கு மோட்டார் ஊர்திகளை பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

9. நகருக்குச் செல்லும் போது பொருள்களை வாங்குவதற்கு நடந்து செல்லல்.

10. பிரத்தியேக வகுப்புக்களுக்குப் போன்று விளையாட்டு நிகழ்வுகளுக்கு நேரம் ஒதுக்குதல்.

11. எதிர்காலத்திற்குத் தேவையான உடற் பயிற்சி விளையாட்டுப் பயிற்றுநர்களை இன்றிலிருந்தே பயிற்றுவித்தலும், பாட சாலைகளுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுத்தலும்.

12. ஓய்வு நேரங்களில் வீட்டு வேலைகள், வீட்டுத் தோட்டம் பராமரித்தல், மலர்ச்செடி, புற்தரை என்பவற்றின் பராமரிப்பிற்குச் சிறார்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்.

13. போட்டி நிகழும் விளையாட்டுக்களிலும் மற்றும் தத்தம் சமயத்தலங்களுக்குச் சென்று பிரார்த்தனைகளிலும் ஈடுபடல்.

14. சிறுவர்கள் வன்மையான விளையாட்டுக் களின் போது உடல் உறுப்புக் கவசங்களை அணிந்து விளையாடுதல்.

15. சிறுவர்களுக்குச் சிறந்த நீர்ச்சம நிலை யைப் பேணுவதற்கு இடை வேளைகளில் போதியளவு நீர் அருந்த வழிவகுத்தல்.

எனவே, மாணவர்களுக்கு முழுமை யான பயிற்சிகளை வழங்கி ஒரு சீரிய சமூகத்தைத் தோற்றுவிக்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும். மேலும், புதிய உத்வேகத்துடன் இருக்கின்ற வளங்களுடன் இல்லாதவற்றைத் தேடிப் பெற்றுக்கொண்டு சகல பிள்ளைகளும் கற்றலில் சாதனை படைக்க வளம் ஊட்டவும் வழிகாட்டவும் முயல்வோமாக.

"விளையாட்டு உளவியல் மிகவும் இளைய ஓர் உளவியல் துறையாகும். இத்துறையில் நோர்மன் ரிப்லெட் (1897) முதன்முதல் ஆய்வை மேற்கொண்ட உளவியலாளராகக் கருதப்படுகின்றார். போட்டியாளர் முன்னிலையில் ஒருவர் ஆற்றுகையை மேற்கொள்ளும் போது ஆற்றுகைத்திறன் மேம்பட்டுச் செல்வதை அவதானிப்புக்கள் வழியாக அவர் கண்டறிந்தார். அதனைத் தொடர்ந்து 1925ஆம் ஆண்டில் இலினோயிஸ் பல்கலைக்கழகத்தில் உலகின் முதலாவது விளையாட்டு உளவியல் ஆய்வு கூடத்தைக் கோல்மன் ரொபேர்ட் கிறிபித் என்பவர் நிறுவினார். வரன்முறையான விளையாட்டு உளவியலுக்கு அவரே முதன் முதலில் வழிவகுத்த முன்னோடியாகக் கருதப்படுகின்றார்"

நன்றி: "உளவியல் முகங்கள்"

# ஆசிரியர்களின் வாண்மை விருத்தித் தேவைகளும் அதற்கான வாய்ப்புக்களும்

**ந.சந்திரகுமார்** B.Ed.in Sc (Hons), PGDLL & AL,
M.A.in Phil (Hons), M.A in Edu, M.Ed (R) OUSL
பிரதி அதிபர், மட்/புனித மிக்கேல் கல்லூரி

**அறிமுகம்:**

21ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுவரும் தகவல் புரட்சியின் விளைவாக பூகோள மயமாக்கலும் இதனால் அறிவுசார் சமூகமும் உருவாகியுள்ளது. அறிவுசார் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கி, எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய சமூகமொன்றை உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்களின் வாண்மைத் திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும் எனச் சந்திரசேகரன், சோ.(2012) குறிப்பிட்டுள்ளார். எனவே, ஒவ்வொரு ஆசிரியரும் தங்களது வாண்மைத் திறனை விருத்திசெய்வதற்கு நேரத்தை ஒதுக்குவதோடு, அர்ப்பணிப்பையும் வழங்க வேண்டும்.

**வாண்மை விருத்திக்கான தேவைகள் :**

இலங்கையில் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தரமான கல்விக்கு, தரமான ஆசிரியர்களின் தேவை உணரப்பட்டுள்ள அதேவேளை, தரமான சமூகமொன்றை உருவாக்கத் தரமான கல்வியை அச்சமூகத்திற்கு வழங்க வேண்டும். தரமான கல்வி எனும் போது வாடிக்கையாளர்களான மாணவர்களின் தேவைகளையும் பெற்றோர்களின் தேவைகளையும் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் ஆற்றல்களையும் தேவைகளையும் கொண்டிருக்க வேண்டும் என வீரக்கோன் மற்றும் ஏனையோர் (2013) ஆய்வுகள் விதந்துரைத்துள்ளன. எனவே, தரமான கல்வியை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு ஆசிரியர்களின் வாண்மைத்துவத் திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

சமகாலக் கல்விச் சீர்திருத்தங்கள் கல்வி முறையின் வினைத்திறனைக் கல்விசார் ஆளணியினரின் வாண்மைத்திறன் மூலமே மேம்படுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேவேளை தேசிய கல்வி ஆணைக்குழு (2003) அறிக்கையானது "சகல ஆசிரியர்களும் பட்டதாரிகளாகப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்" எனவும் இதற்காகப் பின்வரும் மொழிவுகளையும் விதந்துரை செய்துள்ளது.

- சேவையிலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் கல்விமாணி நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்ந்து கல்விமாணிப் பட்டத்தைப் பெறுதல்.
- கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பெற்ற ஆசிரியர்கள் ஏழுவருட காலத்தினுள் கல்விமாணிப் பட்டத்தைப் பெற வேண்டும்.
- பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் பெற்று 5 வருடத்தினுள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவைப் பெற வேண்டும்.

உத்தேசக் கல்விச் சட்டத்தின் அடிப்படையில், ஆசிரியர்கள் சேவையின் உறுப்பினர்கள் அனைவரும் பட்டதாரியாக இருக்க வேண்டும் எனவும், இதுவரை பட்டம் பெறாத

அனைவரும் பட்டமொன்றைப் பெற ஊக்குவிக்க வேண்டுமெனவும், தொழிற் தகைமை பெறாத எவரும் ஆசிரியர் பதவியைப் பெறக்கூடாது எனவும் ஆசிரியர் அனுமதிப்பத்திர முறைமை நடைமுறைப்படுத்தபட வேண்டும் எனவும் முன்மொழிவுகளை முன் வைத்துள்ளது.

தற்போது ஆசிரியர் சேவையில் கடமையாற்றும் ஆசிரியர்களில் 12-13% ஆசிரியர்கள் எந்தவித தொழிற் தகைமையுமின்றி வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமையைக் கல்வி அமைச்சின் அறிக்கை (2013) குறிப்பிட்டுள்ள அதேவேளை வன்னி மாவட்டத்தில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களில் ஏறத்தாழ 50% ஆசிரியர்கள் எந்தவித தொழிற் தகைமையும் பெற்றிருக்கவில்லை என்பதைக் குகமூர்த்தி.ச. மற்றும் ஏனையோர் (2012) ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஆசிரியர் தொழிலானது வாண்மைத்துவத் தொழிலாக அங்கீகாரம் பெறுவதற்குப் பின்வரும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

- ஆசிரியர் தொழிலில் பிரவேசிக்கும் அனைவரும் பூரணமான தொழில்சார் நிபுணத்துவத்தையும் பயிற்சியையும் பெற்றிருக்க வேண்டும்.
- வாண்மை அமைப்பில் *(Professional body)* உறுப்பினராக இருப்பதோடு, இவ்வமைப்பு உறுப்பினர்களுக்குத் தொழில்சார் அனுமதிப் பத்திரத்தை வழங்க வேண்டும்.
- ஆசிரியர்களுக்கான ஒழுக்கக்கோவையை *(Code of Ethics)* வழங்கி, உறுப்பினர்கள் அனைவரும் பின்பற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- வாடிக்கையாளர்களுக்கு (பெற்றோர், மாணவர்கள்) திறமைமிக்க சேவையை / ஆலோசனையை வழங்க வேண்டும்.

இதன் அடிப்படையில், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிக்கும் போதே, ஆசிரியர் தொழிலானது, மருத்துவம், சட்டம், பொறியியல் போன்ற வாண்மைத் தொழிலுக்கு நிகரான தொழிலாக வளர்ச்சியடையும்.

இலங்கையிலுள்ள ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் முறைகள் மாணவர்களிடத்தே உயர் அறிக்கைசார் திறன்களை விருத்திசெய்யத் தவறியுள்ளதாக லேகம்கே மற்றும் ஏனையோர் (2007) மேற்கொண்ட ஆய்விலே கண்டறிந்துள்ளனர். எனவே, மாணவர்களிடத்தில் உயர் அறிக்கைசார் திறன்களை *(Higher Order Cognitive skills)* விருத்திசெய்வதற்கு ஆசிரியர்களின் வாண்மைசார் விருத்தி மிகவும் தேவை என முன்மொழிந்துள்ளனர்.

எதிர்கால ஆசிரியர்கள், கற்பதற்கு கற்றல் திறன்களையும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான ஊக்கலையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனப் பீற்றர் றக்கர் *(Peter Drucker)* குறிப்பிடுகின்றார். இதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆசிரியரும் வாழ்நாள் மாணவனாக இருப்பதால், வாழ்நாள் முழுவதும் வாண்மை விருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, அறிவை இற்றைப்படுத்த *(Update)* வேண்டும்.

**ஆசிரியர் வாண்மை விருத்திக்கான வாய்ப்புக்கள்**

இலங்கையில் ஆசிரியர் வாண்மை விருத்திக்கான வாய்ப்புக்கள் போதியளவு கிடைக்கின்றன. அவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சேவையிலுள்ள சகல ஆசிரியர்களும் வாழ்நாள் முழுவதும் கற்று, தமது அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## இலங்கையில் கிடைக்கும் ஆசிரியர் வாண்மை விருத்திக்கான வாய்ப்புக்கள்,

1) தேசிய கல்வி நிறுவகம் (**National Institute of Education**)

சேவையிலுள்ள ஆசிரியர்களுக்குப் பின்வரும் வாண்மைசார் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான தேசிய டிப்ளோமா | பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிக்க உதவும் |
| 2) கணனிக் கற்கைகள் அபிவிருத்திக்கான கற்கைகள் | சேவையிலுள்ள சகல ஆசிரியர்களும் தகவல் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்த உதவும் |
| 3) கல்விமாணி (**B.Ed**) | பட்டதாரியல்லாத சகல ஆசிரியர்களும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பட்டச் சான்றிதழைப் பெறலாம் |
| 4) பட்டப்பின் கல்வி டிப்ளோமா | பட்டதாரி ஆசிரியர்கள் இக்கற்கை நெறியைப் பின்பற்றலாம் |
| 5) விசேட கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா | பட்டதாரி ஆசிரியர்கள் இக்கற்கை நெறியைப் பின்பற்றலாம். |
| 6) முதுகல்விமாணி (**M.Ed**) | பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் கல்விமாணிப் பட்டதாரிகளும் இக்கற்கை நெறியைத் தொடரலாம் |
| 7) சான்றிதழ் கற்கை நெறிகள் - **ICT** | தகவல் தொடர்பாடல் தொடர்பான குறுகியகால பயிற்சியைப் பெறலாம். |

**2] பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விப் பீடங்கள்.**

1) திறந்த பல்கலைக்கழகம் (**Open University of Sri Lanka**)

- திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடங்களினால் நடாத்தப்படும் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்வதன் மூலம் ஆசிரியர் வாண்மை விருத்தியை அதிகரிக்கலாம்.

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) கல்வியில் கலாநிதிப் பட்டம் (Ph.D) | கல்வியில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள். |
| 2) கல்வியில் முதுதத்துவமாணி (M.Phil) | முதுகல்விமாணிப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் |
| 3) ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி (MATE) | பட்டப்பின் கல்வி டிப்ளோமா / கல்விமாணி பட்டம் பெற்ற ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் |
| 4) கல்வியில் முதுமாணி (M.Ed) | பட்டப்பின் கல்வி டிப்ளோமா / கல்விமாணியில் திறமைச்சித்தி பெற்ற ஆசிரியர்கள் |
| 5) பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) | பட்டம் பெற்ற ஆசிரியர்கள் |
| 6) தொலைக்கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (PGDE) | ஏதாவது பட்டமொன்றைப் பெற்ற ஆசிரியர்கள் |
| 7) கல்விமாணி (இயற்கை விஞ்ஞானம்) B.Ed(Ns) | க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவில் சித்தி அடைந்த, பட்டம் பெறாத / பட்டம் பெற்ற ஆசிரியர்கள் / மாணவர்கள் |
| 8) தனிக் கற்கைநெறி Teacher Educator as an Educational Technologist (online) | IT அறிவுடைய ஆசிரியர்கள் Online மூலம் கற்கலாம் |
| 9) ஆய்வுமுறையியல் குறுங்காலக் கற்கைநெறி | பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பட்டப்பின் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தொடரலாம். |

2) விசேட தேவைகள் கல்வித்துறை

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) விசேட தேவைக்கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா | ஏதாவதொரு பட்டம் பெற்ற ஆசிரியர்கள் |
| 2) கற்றல் குறைபாடுடைய பிள்ளைகளுக்குக் கற்பித்தல் குறுங்கால கற்கைநெறி | சேவையிலுள்ள சகல ஆசிரியர்களும் தொடரலாம் |
| 3) உள்வாங்கற் கல்வியில் குறுங்காலக் கற்கைநெறி | சேவையிலுள்ள சகல ஆசிரியர்களும் தொடரலாம் |

எதிர்காலத்தில் பின்வரும் கற்கைநெறிகள் நடைபெறவுள்ளன.

1) விசேட தேவைக்கல்வியில் கல்விமாணி
2) நாடகமும் அரங்கியலில் கல்விமாணி
3) உள்வாங்கல் கல்வியில் டிப்ளோமா

## 2] கொழும்புப் பல்கலைக்கழகம்

- பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்துகின்றன.

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) கல்வியில் கலாநிதிப் பட்டம் (Ph.D) | கல்வியில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றவர்கள் |
| 2) கல்வியில் முதுதத்துவமாணி (M.Phil) | முதுகல்விமாணிப் பட்டம் பெற்றவர்கள் |
| 3) முதுகல்விமாணி (M.Ed) | பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் திறமைச் சித்தி / கல்விமாணிப் பட்டநெறியில் இரண்டாம் வகுப்புக்குச் சித்திபெற்ற ஆசிரியர்கள் |
| 4) பட்டப்பின் கல்வி டிப்ளோமா | ஏதாவதொரு பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தெரிவுப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர். (முழுநேரக் கற்கைநெறி) |
| 5) தகவல் தொழில்நுட்பத்தில் இளமாணி (BIT) | க.பொ.த.(உ/த) தகைமையுடைய ஆசிரியர்களும் ஏனையோரும் |
| 6) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா | க.பொ.த.(உ/த) தகைமையுடைய ஆசிரியர்களும் ஏனையோரும் |

## 3] யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) கல்வியில் கலாநிதிப் பட்டம் (Ph.D) | கல்வியில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றவர்கள் |
| 2) கல்வியில் முதுதத்துவமாணி (M.Phil) | முதுகல்விமாணிப் பட்டம் பெற்றவர்கள் |
| 3) முதுகல்விமாணி (M.Ed) | பட்டப்பின் கல்வி டிப்ளோமா / கல்விமாணி பட்டம் பெற்ற ஆசிரியர்கள் (முழுநேரக் கற்கை) |
| 4) பட்டப்பின் கல்வி டிப்ளோமா | ஏதாவதொரு பட்டம் பெற்ற ஆசிரியர்கள் |

## 4] கிழக்குப் பல்கலைக்கழகம்

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) முதுகல்விமாணி | பட்டப்பின் கல்வி டிப்ளோமா / கல்விமாணிப் பட்டம் ஆசிரியர்கள் (முழுநேரக் கற்கை) |
| 2) விஞ்ஞானக் கல்வியில் முதுவிஞ்ஞானமாணி | இள விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் |
| 3) ஆங்கிலத்தில் டிப்ளோமா கற்கை | சகல ஆசிரியர்களும் |
| 4) தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா | சகல ஆசிரியர்களும் |

## 5] பேராதனைப் பல்கலைக்கழகம்

| நிகழ்ச்சித் திட்டம் | அடிப்படைத் தகைமை |
|---|---|
| 1) விஞ்ஞானக் கல்வியில் முதுவிஞ்ஞானமாணி | இள விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் |

## 6] தொலைதூரக் கல்வி

இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகாரம் பெற்ற கடல்கடந்த பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டத்தைப் பெறலாம்.

1) **காமராசர் பல்கலைக்கழகம்**

- பட்டதாரியல்லாத ஆசிரியர்கள் பின்வரும் இளமாணிப் பட்டங்களைப் பெறலாம்.
  B.A  B.Sc  B.Com  B.B A
- பட்டதாரி ஆசிரியர்கள் பின்வரும் முதுமாணிப் பட்டங்களில் ஒன்றைப் பெறலாம்.
  M.A  M.Sc  M.Com

2) **அழகப்பா பல்கலைக்கழகம்**

- பட்டதாரியல்லாத ஆசிரியர்கள் பின்வரும் இளமாணிப் பட்டங்களில் ஒன்றைப் பெற்றுப் பட்டதாரியாகலாம்
  - கலைமாணி (B.A)  - விஞ்ஞான மாணி (B.Sc)
- பட்டதாரி ஆசிரியர்கள் கல்வியில் முதுகலைமாணி (MA Edu) பட்டத்தைப் பெறலாம்

3) இதேபோல் பாரதிதாசன் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவற்றிலிருந்தும் பட்டங்களைப் பெறலாம்.

4) **இணையப் பல்கலைக்கழகம்**

Online மூலம் இணையப் பல்கலைக்கழகங்களிலிருந்து வீட்டில் இருந்தவாறு பட்டமொன்றைப் பெறலாம்.

5) **உயர் தொழில்நுட்பக் கல்லூரி**

மூன்றாம் நிலைக் கல்வித்துறையின் கீழுள்ள ஏதாவதொரு உயர் தொழில் நுட்பக் கல்லூரிகளிலிருந்து பல்வேறு சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைப் பகுதிநேரமாகக் கற்றுத் தேறலாம்.

- ஆங்கிலக் கல்வியில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி
- கணனிக் கல்வியில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி

} SLIATE இல் பெறலாம்

6) **ஆசிரியர் மத்திய நிலையங்கள்**

ஒவ்வொரு வலயத்திலும் உள்ள ஆசிரியர் மத்திய நிலையங்களில் நடாத்தப்படும் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்வதன் மூலம் வாண்மை விருத்தியை மேம்படுத்தலாம்.

## 7] பாடசாலைகள்

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் பாடசாலைகளில் நடைபெறும் ஆசிரியர் வாண்மைச் செயலமர்வுகளில் கலந்து கொண்டு வாண்மை விருத்தியை உயர்த்தலாம்.

- கருத்தரங்குகள்  - பண்புத்தர விடயங்கள்  - அறிவுரைகள்
- தொழில் வழிப்படுத்தல்  - சகபாடி மதிப்பீடு  - செயல்வழி ஆய்வு
- செயலமர்வுகள்  - களப்பயணம்

**8] முடிவுகள்**

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் அனைத்திற்கும் பொறுப்பாகவும் வழிகாட்டுபவராகவும் திகழ்பவர்கள் ஆசிரியர்களே. நாட்டின் கல்வித்தரம் உயர்த்தப் படுவதற்கும், பேணப்படுவதற்கும் தரமான கல்வியை வழங்க தரமான ஆசிரியர்கள் தேவை என்பது முதன்மைபெறும் விடயமாகும். எனவே, தரமான கல்வியை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் வாண்மை விருத்திக்கான வாய்ப்புக்களை உச்சளவில் பயன்படுத்தி, தங்களது வாண்மைத் திறனை விருத்தி செய்ய முன்வர வேண்டும்.

**உசாத்துணைகள்**


- இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச்சட்ட அறிக்கை, (2009) கொழும்பு.
- கல்வி அமைச்சு, (2008) "பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல் கையேடு" இசுறுபாய, பத்தரமுல்ல.
- சந்திரசேகரன், சோ.(2012) "அறிவுசார் பொருளாதாரம்" சேமமடு பதிப்பகம், கொழும்பு -11
- தனராஜ், தை.(2011) "உத்தேச புதிய கல்விச்சட்டம் ஒரு மீளாய்வுப் பார்வை" திறந்த பல்கலைக்கழகம், நாவல.
- தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, (2003), தேசிய கல்வி ஆணைக்குழு, கொழும்பு.
- ஜெயராசா, சபா.(2011) "கல்வியில் எழுவினாக்கள்", சேமமடு பதிப்பகம், கொழும்பு - 11
- Lekamge, D.R. and Others, (2007) A Study on Instructional Strategies used by Teacher for Development of Higher Order Cognitive Skills, Deepani Printers and Publisher.
- National Education Commission, (2009) National Policy frame work on Higher Education and Technical & Vocational Education, Sri Lanka.


"விளைதிறனுடைய ஆசிரியர்கள் என்பவர் தாம் தமக்கென வகுத்த அல்லது அவர்களுக்கென மற்றையோரால் பாடசாலை நிர்வாகம், வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியோரால் வகுக்கப்பட்ட இலக்குகளை (aim) அடைவோர் ஆவார்." (அண்டேசன்.W.1999)

"ஆசிரியர் தேர்ச்சியென்பது, ஒரு பாடசாலையில் போதனைக்குத் தேவைப்படும் திறன்கள், எண்ணக்கரு, மனப்பாங்கு என்பவற்றை உள்ளடக்கியிருக்கும் செயன்முறை" Good (1954)

"ஆசிரியர் தேர்ச்சியானது, ஆசிரியர் தனது உடைமையாகக் கொண்டிருக்கும் அறிவு, திறன், பாங்கு, ஆளுமை, ஒழுங்குபடுத்தும் முறைமைகளின் பகுப்பு ஆகியவற்றைக் கொண்ட செயன்முறை" Haskew (1956)

"ஆசிரியர்களின் உயர்தொழில்சார் தேர்ச்சியின் மூலம் மாணவர்களோ முறைசார் மற்றும் முறையில் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகளில் பங்குதாரராகத் தொழிற்படுதல், பெற்றோர், சமூகம் ஆகியோருடன் சிறந்த தொடர்பாடலைப் பேணுதல் மூலம் கல்வியில் உயர் பண்புத் தரத்தைப் பேணலாம்." - பீற்றர் றக்கர் (1994)

# கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்குக் கணித பாடம் கற்பித்தல் தொடர்பான ஓர் இலக்கிய மீளாய்வு.

**(Teaching mathematics to Students with Learning Disabilities: A Review of Litrature)**

**ச.கிருபாகரன்** M.Sc, M.Ed (R),
ஆசிரியர்,
மட் / புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு

## ஆய்வுச் சுருக்கம்

இந்த சார் இலக்கிய மீளாய்வின் நோக்கமானது, கிடைக்கப்பெற்ற ஆய்வறிக்கைகளை வைத்து கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்குக் கணிதம் கற்பதில் ஏற்படும் பிரச்சினைகளை உருவாக்கும் காரணிகள் என்ன? மற்றும் இப்பிரச்சினைகளை எவ்வாறு குறைக்கலாம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இவ் ஆய்வுக்குத் தேவையான சார் இலக்கியங்கள் **ERIC, SAGA** போன்ற இணையத்தளத்திலும் **Journal of Education, South African Journal of Eduction** போன்ற சஞ்சிகைகளில் இருந்தும் பெறப்பட்டன. இந்த சார் இலக்கிய மீளாய்வில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்கு, கணிதம் கற்பிக்கையில் பிரச்சினையை உருவாக்கும் பிரதான காரணிகளாக ஆசிரியர் பெற்றுள்ள பயிற்சி, ஆசிரியர் மனப்பாங்கு, வினைத்திறனுள்ள கற்பித்தல் நுட்பமுறைகளின் பிரயோகம், கலைத்திட்ட அமைப்பு என்பனவாகும். மேற்கூறிய காரணிகளைக் கருத்தில்கொண்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் பொருத்தமான முறையில் ஆசிரியர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதிலும் கற்றல் குறைபாடு உடையவர்களுக்கு ஏற்ற வகையில் கலைத்திட்ட மறுசீரமைப்பும் கற்றல் குறைபாடு உடையவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கல்வியை வழங்க உதவியாக இருக்கும்.

## 1. ஆய்வு அறிக்கை தொடர்பான அறிமுகம்

அனைத்துப் பிள்ளைகளுக்கும் எந்த வித பாகுபாடுமின்றி கல்வி வழங்கப்பட வேண்டும். **(UNESCO Report, *1994*)** **Obulo** *(2014)*இல், தான் மேற்கொண்ட ஆய்வில் 5% தொடக்கம் 8% வரையிலான மாணவர்கள் கணித பாடம் கற்பதில் குறைபாடு உடையவர்களாகக் காணப்படுகின்றனர் எனவும் மேலும் கணித பாடத்தில் இடர்ப்பாடு உடைய இம்மாணவர்கள் ஏனைய பாடங்களிலும் இடர்ப்பாடு உடையவர்களாக காணப்படுகின்றனர் எனவும் தனது ஆய்வில் கூறுகின்றார்.

**Rivera - Batiz** (Paulsen, *2005* இன் ஆய்வில்) தனது ஆய்வில் கணித பாடத் தேர்ச்சியானது ஒருவருக்குச் சிறந்த தொழிலைப் பெறுவதற்கும் நல்ல வருமானத்தைப் பெறுவதற்கும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது எனக் கருதுகின்றார். இவர்களின் ஆய்வுப் பின்னணியைக் கருத்தில் கொண்டே கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்குக் கணிதம் கற்பிப்பதிலும் ஏற்படும் இடர்ப்பாடுகள் தொடர்பாக, சார் இலக்கிய மீளாய்வு செய்யப்படுகின்றது.

## 2. சார் இலக்கிய மீளாய்வு

இலங்கையானது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் தொடக்கம் விசேட தேவை உடைய மாணவர்களைப் பாதுகாப்பது, கல்வி வழங்குவது தொடர்பில் நீண்ட வரலாற்றை கொண்ட ஒரு நாடாகும், இச் செயற்பாட்டை ஆரம்பகாலத்தில் திருச்சபைகளும் தேவாலயங்களும் மேற்கொண்ட போதிலும் விசேட தேவை உடையோருக்கான தனியான பாடசாலை 1912 இல் இரத்தமலானையில் ஆரம்பிக்கப்பட்டது. **(Roberts *2003*)**. ஆரம்பகாலத்தில் விசேட தேவை உடைய பிள்ளைகள் தனியான பாடசாலைகளில் வைத்து கற்பிக்கபட்ட போதும் தற்போது அவர்கள் உள்ளடங்கல் முறையில் சாதாரண

பிள்ளைகளுடன் ஒன்றிணைந்தே கல்வி கற்கின்றனர். **(Piyasena, 2002).**

2002 இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட 4,184,957 மாணவர்களில் 99,024 மாணவர்கள் (2.37%) விசேடதேவை உடையவர்களாகவும் **(Ministry of Human Resources Education and Cultural Affairs, 2002), 2007** இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட 3,942,327 மாணவர்களில் 33,821 மாணவர்கள் விசேட தேவை உடையவர்களாகவும் **(Ministry of Education, 2007)** காணப்படுகின்றனர். எனவே, இவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக விசேடமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

தற்போது ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் ஆசிரியர்களில் அநேகமானோர் பட்டதாரிகளாகக் காணப்படுவதாகவும் இவர்கள் ஒரு குறுகிய கால சேவைப்பயிற்சியின் பின் தொடருறு வாண்மைப் பயிற்சி இன்றி காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. **(Jayasuria, 1996)**

**De Simone** மற்றும் **Parmar (2006)** தனது ஆய்வில் சேவைக்காலப் பயிற்சியை வழங்கும் ஆசிரியர்கள் கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களைக் கற்பிப்பது தொடர்பாகக் குறைந்தளவான விளக்கத்தையே கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வாண்மை விருத்திப் பயிற்சி போன்றவை கணிதத்தில் குறைபாடு உடைய மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்குப் போதுமான திட்டங்களை அல்லது பயிற்சிகளைக் கொண்டிருக்கவில்லை என்கிறார்.

**Cochran Parmar and De Simone (2006)** இல் தனது ஆய்வில் ஆசிரியர்களின் மனப்பாங்குகூட கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களின் கற்றலைப் பாதிக்கும் ஒரு காரணியாக உள்ளதாகக் கூறுகின்றார். சாதாரண மாணவர்கள் உள்ள வகுப்பறையை உள்ளடங்க வகுப்பறையாக மாற்றும் போது அங்கு உள்வாங்கப்படும், கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்கள் தொடர்பாக சாதாரண ஆசிரியர்கள் எதிர்மனப்பாங்கைக் கொண்டவர்களாகவும் இதற்கு விசேட பயிற்சி பெற்றவர்கள்தான் பொருத்தமானவர்கள் என்றும் கருதுகின்றனர். எனவே, ஆசிரியர்கள் கற்றல் குறைபாடு உடைய மாணவர்கள் தொடர்பாக, தங்களது எதிர் மனப்பாங்கை மாற்ற வேண்டியது அவசியமாகும். அத்துடன் விசேடதேவை உடைய பிள்ளைகளும் கல்வியைப் பெறுவதற்கு சமஉரிமை உடையவர்கள் என்று கருதிக் கற்பிக்கவேண்டும்.

**Fuchs and Owen, (2002)** தான், மேற்கொண்ட ஆய்வின் முடிவாக கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்கு, பிரதான பிரச்சினையாக இருப்பது சொற்பிரச்சினை என்றும் இதை ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடல், மாணவர்- மாணவர் கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலம் நிவிர்த்தி செய்யலாம் என்றும் கூறுகின்றார். அத்துடன் விளையாட்டு, மீண்டும் மீண்டும் பயிற்சி வழங்கல் மூலமும் கணிதத்தில் குறைபாட்டை நிவிர்த்திசெய்ய முடியும் என்று கூறுகின்றார்.

இவரது ஆய்வு முடிவை நோக்கும் போது மாணவர்களைச் செயற்பாடுகளின் ஊடாகக் கணிதம் கற்பிப்பது, கணிதத்தில் குறைபாடு உடைய மாணவர்களுக்குச் சிறந்த பயனுள்ளதாக அமையும்.

ஞாபகம், சாரம் உருவாக்கல் போன்ற கணிதம்சார் அறிவு விருத்தியானது கணிதம் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. **(Jreman and Swanson, 2006)** ஞாபகம், கவனித்தல் மற்றும் சுயகட்டுப்பாடு போன்ற காரணிகள், கணிதம் கற்றலில் முக்கிய பங்காற்றுகின்றது. இத்திறன்கள் மிகவும் கீழ் மட்டத்தில் உள்ள கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய பிள்ளைகளைக் கற்றலின்பால் ஊக்கமடையச் செய்வது

மிகவும் கடினமாகும் **Swanson and Saef (as cited montague, 2007).**

Fuchs மற்றும் Owen 2002, Swanson மற்றும் Saef ஆகியோரின் ஆய்வை நோக்கும் போது சாதாரண நிலையில் கணிதத்தில் கற்றல் குறைபாடுடைய மாணவர் களையே கற்றல் - கற்பித்தல் முறைகள் ஊடாக முன்னேற்ற முடியும். ஆனால் தீவிரமாகப் பாதிப்படைந்த மாணவர்களைச் சீர்படுத்துவது கடினமான செயலாகும்.

**Wagner et al (Basseet et at as cited in, 1997)** கணித பாடக் கலைத்திட்டத்தின் பிரயோகம் தொடர்பாகத் தாம் மேற்கொண்ட ஆய்வில் பாடசாலைகளில் கணித பாடத்தில் கற்றல் குறைபாட்டைக் கொண்டிருந்த மாணவர்கள் பிற்காலத்தில் வங்கிக் கணக்கைப் பேணுதல், மேற்பார்வை செய்தல், கடனட்டைப் பயன்பாடு மற்றும் ஒழுங்கான பணைப் பரிமாற்றம் போன்ற கணிதத் தேர்ச்சியை பயன்படுத்தும் செயற்பாடுகளில் சிறப்பாக இருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையானது கணித பாடக் கலைத் திட்டமானது அன்றாட கணிதம் தேர்ச்சிக ளுடன் தொடர்பற்றதாகவும் மாணவர் கள் கணிதபாடத்தில் குறைபாடு உடையவர் களாக ஆவதற்குக் காரணமாகவும் அமையக் கூடியதாகக் காணப்படுகின்றது.

**Okolo (Babbit மற்றும் Miller, 1996 ஆய்வில்)** தனது ஆய்வில் விளையாட்டின் ஊடாகக் கணிதம் கற்பித்தல், கணணிமயப்படுத்தப்பட்ட Software Programme பயன்படுத்தல், Computer Game என்பவற்றைக் கணிதக் குறைபாடு உடைய மாணவர்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம் கணிதபாட அறிவை மேம்படுத்த முடியும் எனக் கூறுகின்றார்.

கணிதத்தில் இடர்ப்படும் இம் மாண வர்களுக்கு இவ்வாறான உதவி நுட்பங் களைப் பயன்படுத்திக் கற்பிக்கும் போது சாதாரண கணிதக் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களின் கணிதத் தேர்ச்சியை மேம்படுத்த உதவும்.

3. *முடிவுகள்:*

ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் மனப்பாங்கு, பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களின் பயன்பாடு, உதவி நுட்பங்களின் பயன்பாடு, பொருத்தமான கலைத்திட்டம் ஆகிய காரணிகள் கணிதத்தில் குறைபாடு உடைய மாணவர்களின் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன.

கணிதபாடம் கற்பித்தல் தொடர்பான வாண்மைத்துவமானது கணிதபாடத்தில் குறைபாடு உடைய மாணவர்களின் கற்றல் திறனைப் பாதிக்கும் முக்கியமான காரணியாக உள்ளது.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு **Cawly** மற்றும் **Parmar** (1997) தனது ஆய்வில் கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் கீழ்வரும் ஐந்து விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார்.

1. பல்வேறு கற்பித்தல் முறைகளைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தல்.
2. கணித பாடம் தொடர்பாகப் பரந்த அறிவைக் கொண்டிருத்தல்.
3. கணிதத்தில் மாணவர்களின் சிந்தனை மட்டத்தை அறிதல்
4. கணிதம் கற்பிக்கும் முறையில் தேர்ச்சியை விருத்திசெய்தல்.
5. கணிதத்தில் தனது வாண்மையை விருத்தி செய்தல்.

இதனுடன் இணைந்து கற்பித்தல் பயிற்சி, சிறந்த கணிப்பீட்டு முறைகள் என்பனவும் சிறப்பான கற்றல் கற்பித்தல் சூழ்நிலையை மாணவர்களுக்கு உருவாக்கக் கூடியதாக இருக்கும்.

கணித பாடத்தில் குறைபாடு உடைய மாணவர்கள் மற்றும் அவர்களுக்குக் கற்பிக்கும் முறைகள் தொடர்பாகப் போதிய விளக்கம், ஆசிரியர்களுக்குச் சேவை முன் பயிற்சி, சேவைக்காலப் பயிற்சி என்பன வற்றின் ஊடாகக் குறைந்தளவே

வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக, கணித பாடக் கற்றல் குறைபாடு உடைய மாணவர்கள் தொடர்பாக ஆசிரியர் எதிர் மனப்பாங்கைக் கொண்டிருக்கக் காரணமாக அமைகின்றது. எனவே, ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியானது கற்றல் குறைபாடு உடைய மாணவர்கள், தொடர்ந்து தேர்ச்சி மற்றும் விளக்கத்தைப் போதியளவில் வழங்கக்கூடியதாக அமைதல் வேண்டும்.

கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களிடம் சுய ஒழுங்கு, சுயகட்டுப்பாடு மற்றும் சுய கணிப்பீடு என்பவற்றை விருத்திசெய்தல் மற்றும் விளையாட்டு, செயற்பாடு மூலம் கற்பித்தல் போன்றவை கணிதத்தில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களிடம் கற்றலை விருத்தி அடையச் செய்ய அதிகம் உதவி செய்யக் கூடியதாக காணப்படுகின்றது. மாணவர்களின் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்த வகையில் கணிதபாடக் கலைத்திட்டமானது மாற்றியமைக்கப்பட வேண்டும். இது கணித பாட கலைத்திட்டத்தின் சுமை காரணமாகக் கணிதத்தில் கற்றல் குறைபாட்டை எதிர் கொள்ளும் பிள்ளைகளின் பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

## 4. உசாத்துணை:


Basset, D.D Cronin, M.E.Koppel, A.E&Patton, J.R.(1997) A life Skills Approach to Mathematics Instruction : Preparing Students with Learning Disabilities for Real - Life Math Demands Journal of Learning Disabilities, 30(2), 178-187

Cawly,J.F&Parmar R,S (1997) Preparing Teachers to teach Mathematics to Students with Learning Disabilities Journal of Learning Disabilities, 30(2), 188-197

De Simone, J,R & Parmar, R,S (2006) Middle School Mathematics Teachers' Beliefs About Inclusion of student with Learning Disabilities. Learning Disabilities Research & Pratice, 21(2), 98-110

Jayasuriya, J (1969) Education in Ceylon Before and After Independence. Colombo Associated Education Publishes

Ministry of education, (2003) School census statistical branch Srilanka

Ministry of education, (2007) census of special education unit

Ministry of Finance, (2004) national planof action for the children of srilanka Colombo UNICEF

Ministry of Human Resource, Education and Affairs. (2002). Non - Formal continuing and special Education unit.

Obudo, F (2008) Teaching Mathematics to student with Learning Disabilities : A Review of Litrature, Retrieval July 15, 2014, From ERIC database.

Paulsen, K.J (2005) Infising Evidencw - Based Practices inti the Special Education Preparation Curriculum. Teacher education and special Education, 28 (1) 000 - 000

Piyasena, K (2002) Towards Inclusive In developing Countries: The three Phaseprogramme of Special Education - A Unique Contribution from srilanka. sena publisher

Roberts, L (2003) A situation Analysis of the education Opporunities available to blind and visually impaired Children in srilanka mount Lavinia: Sight savers Srilanka.


"ஆய்வினைச் சிறப்பான முறையில் நடாத்திச்செல்ல எண்ணக்கருவாக்க சட்டகமொன்றை உருவாக்க இலக்கிய மீளாய்வு மிகவும் அவசியமானது."

- செ. அருள்மொழி

# The Art of Verse Speaking

**Mrs.V.Makeshwaran**
MA in Linguistics, English Sp.Trained,
Master Trainer (English)
Zonal Education Office, Batticaloa.

Since, the importance of English has been realized nowadays, it is considered as one of the International Languages in the world. English language is taught in schools through the four major skills as Listening, Speaking, Reading and Writing. Listening, and Speaking evoke the enthusiasm of the children towards the language at the initial stage. Then they gradually assert the language themselves through reading and writing. According to the government school syllabi an equal priority has been given to each of the above skills.

Poems, which are included in the school text books give intense pleasure and break the monotony of the regular teaching and learning process. In order to maintain equality, poetry established the intimacy between the teacher and the children and makes the classroom a lively pleasant place to live in. Verse Speaking is an atr. Through the verse speaking the students are encouraged to listen properly and speak the language with coreect pronuciation. Recitation is the main part in the English language day competitions which is being held annually in the school system.

Poetry gives intense pleasure to many people by bringing alive their sympathies. Poetry evokes the same feeling of the poet in the readers mind. Poetry is written in measures which may be simple or complex, in language chosen for beauty or power. Its theme may be anything in life or thought. Speaking Verse demands much thought and feeling. The speaker must be aware of images the poet has created and his interpretation must be an expression of thought and imagination.

The verse speaker must give perfect balance of music, rhythm and meaning. The sound, sense and meaning must be beautiful to listen to and rhythmically perfect. If we neglect the rhythm, there will be no sense. And if there is no sense, there will be no beauty. Poetry is alive. It is the living voice of the poet. To achieve this, we make use of technical devices to bring the poet's message and his imagination. We should therefore, be aware of the verse forms.
There are three main division in verse forms,

1. Lyrics : Ode, Sonnet, Dirge and Elegy
   Eg : Daffodils - William Wordworth
   "The Indian to his Love" - W.B.Yeats

2. Narratives : Epic, mock Epic, Ballad and Satiric verse
   Eg : Minne Maylow's Stoory - John Masefield.
   You are old, Father William - Lewis Caroll.

3. Dramatic Verse : In plays and in dramatic monologues.

Eg : My Last DUCHESS - Robert Browining.

The most important points that must be taken into consideration when reciting a poem are

**1. Pause**

A pause is a short stop or brief suspention of the voice. It indicates the end of a sentence or shows the relationship between various parts of a sentence. To make the poem a meaningful one we must give the pause at proper places. The pauses found in poetry are.

i. Suspensive pause :

This is a pause found only in poetry. It occurs at the end of a run-on-line. It is a slight lingering (or slowing down) on the last word of the run-on-line, but the voice does not break off, because this will break the flow of the sense.

A run-on-line is a line of poetry that has no mark of puntuation at the end of the line but the sense or meaning flows on the next line.

Eg : "Time to go home' by James reeves

"Down sinks the sun /
In the valley to sleep"

ii. Rhythmical pause or caesura pause.

It usually occurs in the middle of a line of poetry. It is a sense pause.

Eg : "The wind" by R.L Stevenson

And all around I heard you pass.
Like ladies skirt/ across the grass.

iii. Metrical pause.

It is found only in poetry. Part of the Metrical foot is missing and the strong pause preserves the rhymical law of poetry and makes up for the missing beat. It is not the same as caesura.

Eg : Break / Break / Break
On thy cold / gray stones / O sea. /

**2. Inflection and Modulation**

Inflection is a small change in pitch, caused by the rise and fall of the voice on a single word or group of words. There are many kinds of inflection - the rising, the falling and the compound or circumflex.

Modulation is the gliding of the voice from one pitch to another. It cannot occur on a single word, but on a whole sentence on a normal key could turn to a high pitch and then medium or low again.

**3. Pitch , Pace , Volume.**

Pitch is the height or depth of sound. There are there degrees in pitch.

i. High pitch - To express a pleasant happy mood.

ii. Medium pitch - For casual conversation or description

iii. Low pitch - To express sad, serious or ghostly situation.

Pace is the speed or rate which we speak. There are three degrees - quick, medium, slow, and they follow the same principle as

pitch. Poetry requires a more controlled pace.

Volume is the strength of the voice - the loudness or quantity. It has three degrees as a loud tone, a medium tone and a soft tone. Volume is determined by the sense of the poetry as well as the size of the audience. When we vary pitch, pace and volume according to the sense, we are modulating the voice.

### 4. Intonation

Intonation is the rise and fall of the voice in speaking. It gives more effective to poetry. It breaks the monotony. To express various emotions in a poem, the intonation helps to highlight different emotions.

### 5. Rhythm and Metre.

Rhythm is the flow of the poem. It comes from the poet's imagination and flows through the whole poem.

Metre is regular beat in a line of poetry. Metre measures or divides a line of poetry into feet. Metre gives "shape" to a poem. The poem gets its shape from the metre, but its soul from the rhythm.

### 6. Facial expression.

Facial expression means that the face reflects the feelings of the speaker. The speaker of the poem expresses the feeling in the poem through his / her face to make the poem alive. It is not taught during the process, but it should come out from the speakers mind. The movable parts of the face are the eyeballs, eyelids, eyebrows, nostrils, forehead, cheeks, lips and jaw.

## The presentation of the poem

When we prepare the students to perform poems for competitions, we must take special consideration on the following.

The child should

Have all the senses and mind alive and working. Be relaxed.

Be poised, have a good posture- still but relaxed and avoid eccentric clothes or distracting habits.

Be enthusiastic, vital, sincere and spontaneous to suit the mood of the poem.

Be completely audible - this involves good breath control, resonant tone, good articulation and projection, and modulation and to suit the poem, meaning and mood.

Be aware of the rhythm of the poem - the use of the neutral vowel sound - and how the poem moves towards the end of the line and stanza. A sensitivity to inflection is important.

Watch the shape of the poem - where the pauses occur, the line and stanza patterns, the rhyme and metre.

Create an impact, an immediacy, but do not over articulate, exaggerate or over emphasize.

Hold the audience, allow it to respond. Be control of the poem- do not let it run away from you.

Use sense, emphatic, dramatic, end of line, suspensive and caesural pauses to create the desired effect, and keep the poem as a poem- not a piece of prose.

Try to be presence - the mouthpiece of the poet, the vehicle of the story and convey that indefinable something that makes the poem live.

The Art of verse speaking is considered to have fulfilled its main purpose of anlyzing the mode of presentation of poetry with all its aspects through the appropriateness of the structural method in brief.

The basic concepts of certain words presented here regarding the poetry would help the teacher and the verse speaker to use the language with correct enunciation and articulation. If we succeed in enhancing the child'd sensitivity to the beauty of the language then poetry will be something more than the repetition of the poem. When a poem has been memorized for recitation, good articulation should be insisted upon. The clear enunciation of consonants and the correction of individual mistakes are helped by means of speech training. Hence, it will be useful for both the teachers and the students who appreciate "The Art of the verse speaking".

One man may speak beautiful language and beautiful thoughts, but they do not impress people; another man speaks neither beautiful language nor beautiful thoughts yet his words charm.


Every movement of his is powerful. That is the power of Ojas..... It is only the chaste man or woman who can make the Ojas rise and store it in the brain; that is why chastity has always been considered the highest virtue.

A man feels that if he is unchaste, spirituality goes away, he loses mental vigour and moral stamina. That is why in all the religious orders in the world which have produced spiritual giants you will always find absolute chastity instisted upon. (LI 69 - 70)

- Swami Vivekananda

Please pause here and Read it silently

# Meditation



**Mr.C.Constantine**
Specialist English Trained, Dip.in.TESL
RESC, Zonal Education Office,
Batticaloa.

**I**t is said that our mind which is always or frequently with some sort of problem can be controleed and calmed by meditation.

Meditation is fundamentally a mental exercise that can release our stressful situations of life. It is also an exercise which arouses our inner spirituality. Dialy practice of meditation creates peace and clarity of mind that facilitates inner and outer harmony. The state of mind and body helps a person to be peaceful with others. Peace and non - violence are inborn instincts of a person. As mind becomes clearer, the problems and the difficulties that arise in our life becomes less confusing and painful. Also when happiness is experienced, there is no danger of being carried away by it.

The short interpretation of meditation is that it is a temporary withdrawal from the world. But, it does not mean we try to escape the from the problems. It is a way to face the world in order to understand it and understand ourselves. It helps us to be involved in our daily routine with full awareness. It also helps us to respond to a situation in a balance way. Meditation is the key way by which one can be engaged in the worldly things.

Regardless of any religion or profession medidation helps a person lead a more productive, satifying, healthy and comfortable life. The real happiness brought by engaging in meditation, surpasses all others. It helps people enjoy life as they should be. Despite the machinery, fast, materialistic and stessful life, meditation helps people and heals their mind to be joyful in all what they do. Meditation, not only heals the wounds of the mind, but it also creates a healthy balance in the hearts of everyone. Since we live in the world of conflicts and problems, we need inner strength to cope with the demands of the society.

Finally, half an hour of daily meditation would provide us with strength to face the challenges that are ahead of us.

Let's lead a life of happiness and satisfaction by doing meditation.

# *Diminishing trend of English literature in Batticaloa.*

**K.Kulenthiran**
B.A.in Social Science
RESC, Batticaloa.

Literature springs from inspired and creative minds. It is about human life and its surroundings. In other words it is the criticism of human life. it rejuvenates the human soul and creates ripples of understanding one's own culture and other cultures. In a multi ethnic, multi religious and multi lingual society, literature plays the key role of bridging cultural and racial differences. Thus the multifaceted benefits of literature should be viewed as a catalyst in promoting the qualities of mankind.

Having said this present Situation in Batticaloa, when the interest for English literature is taken into consideration seems to be bleak. It is quite clear when we consider the number of students who offer English litterature, at the G.C.E (O/L) are on the decline. There may be various reasons for this. But what we cannot accept is the fact in some schools students are advised to give up English literature and offer other basket related subject to obtain 9A's. It's my view at this juncture to point out the value of literature is completely undermined.

The scope of literature for a student is numerous. For instance it socializes him / her and entices the particular person to help others and to accept the state of being helped by others. It evokes the proper sense needed to lead a balanced life by practicing tolerance. It enables to develop the skill of reading among students and instills the ability of sustaining required information; a skill which is essential for a student to face any kind of examinations. It enriches the word power in students eventually making them confident and capable in expressing their views and ideas effectively. Above all literature induces the innovative talents in students and moulding as better users of the English language.

There for it is the duty of the educationists and the education officers in Batticaloa to consider the plight of English literature in the Batticaloa district and to take necessary action that would ultimately encourage the students in applying English literature as a subject at the G.C.E (O/L). It is needless to say the teachers of English and parents should also contribute in this aspect by pursuing their students / children to take interest in the field of English literature.

It is now or never. Before it is too late let's think positively and progressively and do the needful to uplift the standard of English literature for the next generation.

**Beauty depends on your mind's beauty**

# அதிபர் / ஆசிரியர்களுக்கான படிப்பு விடுமுறை- முழு நேர / பகுதி நேர (முழுச்சம்பளத்துடனான / சம்பளமற்ற)

வேலுப்பிள்ளை புவனேந்திரராசா
நிருவாக உத்தியோகத்தர்
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

படிப்பு விடுமுறை பெற்றுக்கொள்வது சம்பந்தமாகச் சில குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

1. பட்டப்பின் படிப்பு விடுமுறை பெற்றுக்கொள்வதற்கான கற்கை நெறிகள் சில.
PGDE, M.Ed, MA in Ed, PGDEM, DSM, Ph.D.Ed, Mphil.Ed etc.......

2. படிப்பு விடுமுறை விபரம்
   1. முழுச்சம்பளத்துடனான படிப்பு விடுமுறை
   2. சம்பளமற்ற படிப்பு விடுமுறை
   3. வார இறுதி / பகுதி நேர படிப்பு விடுமுறை

3. படிப்பு விடுமுறையைப் பெற்றுக்கொள்ளத் தேவையான முக்கிய தகைமைகள்
   1. ஆட்சேர்ப்பு/பதவி உயர்வு திட்டத்தில் அத்தகைய உயர்கல்வித் தகைமை தேவை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் அவ்வாறு குறிப்பிடப்படாவிடினும் ஒரு தடவை சந்தர்ப்பம் வழங்கப்படும்.
   2. பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
   3. மாகாண சேவையாயின் மாகாண சேவையில் உள்ளீர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. முறையாகப் படிப்பு விடுமுறை பெற்று அதில் சித்தி பெறுவதால் ஏற்படும் பலாபலன்
   1. படிப்பு நெறியினைத் தொடர்வதற்கான முழுச்சம்பளத்துடனான / சம்பளமற்ற முழுநேர விடுமுறை.
   2. பரீட்சைக்குத் தயார்படுத்தல் மற்றும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான கடமை விடுமுறை
   3. படிப்பு நெறியினை மேற்கொண்ட செலவினத்திற்கான மீளளிப்பு (பொருத்தமானதாயின் மட்டும்)
   4. தொழில்வாண்மை விருத்தி (மாணவர்→பாடசாலை→சமூகம்→நாடு→அபிவிருத்தி)
   5. பதவி உயர்வு நலன்கள்

5. படிப்பு விடுமுறை பெற்றுக்கொள்வதற்கு எடுக்க வேண்டிய முன் நடவடிக்கைகள்:
   1. உரிய கல்வி நிறுவனத்திற்குக் கற்கை நெறி பயில்வதற்கான விண்ணப்பத்தினை வலயக் கல்வி அலுவலகத்தினூடாக முறையாக அனுப்பிவைத்தல் வேண்டும். ஒரு பிரதி திகதி முத்திரையிடப்பட்டுச் சுயவிபரக் கோவையில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

   அலுவலர்→அதிபர்→ வலயக் கல்விப் பணிப்பாளர்→ மாகாணக் கல்விப் பணிப்பாளர்

2. கற்கைத் நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டபின் கற்கை விடுமுறையினை முறையாகப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பத்தை உரிய படிவத்தில் பூர்த்திசெய்து உரிய ஆவணங்களுடன் வலயக் கல்வி அலுவலகத்தினூடாகச் செயலாளரின் அனுமதி பெறும் பொருட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அலுவலர்→அதிபர்→வலயக் கல்விப் பணிப்பாளர்→ மாகாண கல்விப் பணிப்பாளர் →செயலாளர்

6. கவனிக்கப்பட வேண்டியது:

1) படிப்பு விடுமுறை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் இரு வார காலத்திற்கு முன்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும். (மாகாண சேவை-இரு பிரதிகளில் வரிசை அமைச்சு - 3 பிரதிகள்)


2) படிப்பு விடுமுறை அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமுன் எந்தவித கற்கை நெறியும் மேற்கொள்ள முடியாததுடன் விடுமுறை எதுவும் பெற்றுக்கொள்ளவும் அனுமதிக்கப்படமாட்டாது.

3) 6 மாத காலத்திற்கு மேற்பட்ட முழுச்சம்பளத்துடனான / சம்பளமற்ற முழு நேரப் படிப்பு நெறிக்கு உரிய ஒப்பந்தம் மற்றும் பிணைமுறி மேற்கொள்ளப்படல் வேண்டும்

7. ஏற்ற சுற்றுநிருபங்கள் / விதிகள் / ஏற்பாடுகள் பின்வருமாறு.

1. தாபன விதிக் கோவை அத்தியாயம் XII பிரிவு 14,15,16
2. கல்வி அமைச்சுச் செயலாளர் சுற்றுநிருபம் 26/2013 மற்றும் 04/2014
3. அரச நிருவாகச் சுற்றறிக்கை - 23/2014

8. படிப்பு விடுமுறை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்- ( முகப்புக் கடிதம் தகவலுக்காகத் தரப்பட்டுள்ளது.)



### ஆசிரியர்களுக்கான கற்கை விடுமுறை அனுமதி (முழு நேரம் கற்கை / வார இறுதி நாட்கள்

திரு/திருமதி/செல்வி ....................................................(ஆசிரியர் / ஆசிரியை)
மட்/......................................................................................

மேற்படி ஆசிரியரின் கற்கை விடுமுறைக்கான விண்ணப்பம் கல்வி அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறும் பொருட்டுப் பின்வரும் ஆவணங்களுடன் இணைத்துத் தங்களின் உரிய மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

01. கற்கை விடுமுறைக்கான குறித்த ஆசிரியரின் கோரிக்கைக் கடிதம்

02. பாடநெறிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் / நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

03. விரிவான கற்கை விடுமுறைகான விண்ணப்பம் (கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை இல 26/ 2013 இணைப்பு -2)

04. விண்ணப்பதாரி கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்ளும் காலத்திற்குள் அவரது கடமைத் தழுவலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக அதிபர் / நிறுவனப் பொறுப்பாளரின் பரிந்துரை

05. முதல் நியமனக் கடிதம் / பட்டதாரி ஆசிரியராக உள்ளீர்க்கப்பட்ட கடிதம்

06. பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தின் பிரதி

07. உடன்படிக்கை (தாபன விதிக் கோவையின் 8ஆவது வாசகம்)

08. முறி (தாபன விதிக் கோவையின் 15 ஆவது வாசகம்)

09. தொடரும் பாடநெறி ஆசிரியரின் தொழில் விருத்திக்குரியதாகும் என அதிபர் / நிறுவனப் பொறுப்பாளரின் பரிந்துரை

10. திணைக்களத் தலைவர் ஊடாகப் பாடநெறிக்கு விண்ணப்பித்த விண்ணப்பப் படிவம்

11. கற்கை நெறியினைப் பதிவுசெய்வதற்குக் குறித்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பம் / பரீட்சை நேரசூசி

"கற்பதற்குரிய விருப்பம், வளர்வதற்குரிய தேவை, கண்டு பிடிப்புக்குரிய தேடல், பாண்டித்தியம் பெறுவதற்கான நம்பிக்கை, புத்தாக்கம் செய்வதற்கான உறுதி என்றவாறு மாணவர்கள் நோக்கில் மானுடக் கோட்பாட்டினை முன்வைத்தவர்."

- கார்ல் றொஜர்ஸ்

# அரச பெறுகைச் செயன்முறையை விளங்கிக் கொள்ளல்

த. தேவகாந்தன்
(இலங்கை கணக்காளர் சேவை I)
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்,
மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

அரச பெறுகை நடைமுறை தொடர்பாக உள்ளார்ந்த அர்த்தங்களை விளங்கிக் கொள்வதே நோக்கமன்றி உள்ளவற்றை விலாவாரியாக மீளவும் தருவது அல்ல இக்கட்டுரையின் நோக்கம். எனவே, அரச பெறுகை தொடர்பான நோக்கம், குறிக்கோள், ஒழுக்கவியல் என்பவற்றுடன் சமூகம் சார்ந்த அமைப்புகளுக்கான நேரடி ஒப்பந்தங்கள் தொடர்பிலும் நோக்குவது பொருத்தமானதாக அமையும். பெறுகை எனும் பதத்திற்கு நேரொத்த சொல்லாகப் பிரயோகிக்கப்படும் Procurement எனும் ஆங்கிலச் சொல் 'Procure' என்ற அடிச்சொல்லிலிருந்து ஆரம்பிக்கிறது. இச்சொல்லுக்கான அர்த்தம் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் 'Succed in getting' (முயன்று பெறுதல்) எனக் குறிப்பிடப்படுவதில் இருந்து பெறுகை நடைமுறையிலுள்ள உள்ளார்ந்த ஆழ, அகலங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆரம்பத்தில் கேள்வி நடைமுறைகள் எனக் குறிப்பிடப்பட்டுவந்த போதிலும் தற்போது பெறுகை நடைமுறைகள் என அழைக்கப்படுகிறது. இதற்கான கைந்நூல் மற்றும் வழிகாட்டு நெறிகள் என்பன 2006ஆம் ஆண்டில் தேசிய பெறுகை முகவர் நிலையத்தால் வெளியிடப்பட்டன. கைந்நூலிலுள்ள எல்லைகள் தொடர்பில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்கள் சுற்றுநிருபங்கள் மூலமாக அறியத்தரப்படும். எனவே, இவற்றை ஒப்புநோக்கிப் பொருள் கொள்ளல் அவசியமாகும். அரச பெறுகை வழிகாட்டு நெறிகள், பெறுகைச் செயன்முறையை இலகுபடுத்தும் நோக்கமாகக் கொண்டவை. அரசு அல்லது வெளிநாட்டு நிறுவனத்தினால் நிதியளிப்புச் செய்யப்படும் போது பெறுகை செய்யும் நிறுவனம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை எடுத்துக்கூறுகின்றன.

பெறுகைச் செயன்முறை ஒன்றின் போது பின்வரும் விடயங்கள் குறிக் கோள்களாகக் கொள்ளப்படுகின்றன. முதலாவதாகக் காசுக்கான பெறுமதி (Value for Money) பெறுகையின் போது இடம் பெறுவதனை உறுதிசெய்தல் வேண்டும். அதாவது சிக்கனம் (Economy) வினைத்திறன் (Efficiency) விளைதிறன் (Effectiveness) எனும் மூன்றும் ஆகும். பெறுகை, ஆகக் குறைந்த செலவையும் உயர் தரத்தையும் விளைவிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

அடுத்து நியமங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் நல்லாளுகை என்பவற்றைப் பின்பற்ற வேண்டிய தேவையை வலியுறுத்துவதுடன், தகைமையுள்ள அக்கறையுள்ள திறத்தினர் பெறுகையில் பங்குபற்றுவதற்கு நியாயமான, சமமான உச்ச வாய்ப்பை வழங்க வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றன. கட்டுமான வேலையைத் துரிதமாக நிறைவேற்றல், பண்டங்கள் தேவைகளைத் துரிதமாக ஒப்படைத்தல், உள்நாட்டுச் சட்டங்களுடனும் ஒழுங்கு விதிகளுடனும் சர்வதேசக் கடப்பாடுகளுடனும் இணங்கியொழுகுதல், மதிப்பீடு, தெரிவு ஆகிய நடவடிக்கையில் வெளிப்படையான தன்மையை உறுதி செய்தல் என்பதுடன் விலைக் கேள்வியாளர் தொடர்பில் அவர்களால் வழங்கப்பட்ட தகவலின் அந்தரங்கத் தன்மையைப் பேண வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

பெறுகைச் செயன்முறையின் குறிக்கோள்களுடன் நல்லாளுகையைத் தொடர்புபடுத்துவது பொருத்தமானதாகும்.

நல்லாளுகை என்பது பின்வரும் தன்மைகளை உள்ளடக்கியதாகும்.

- ஒப்புரவு - Equity
- வினைத்திறன் - Efficiency
- வெளிப்படைத் தன்மை - Transparency
- பொறுப்புக்கூறல் - Accountability
- எதிர்வு கூறுகை - Predictability
- பங்கேற்பு - Participation

ஒப்புரவு என்பது எவ்வித பகுபாடுமின்றி அனைவரும் வாய்ப்புகளை அணுகக்கூடிய (Equal access to Opportunities) தன்மையைக் குறிக்கும்.

வினைத்திறன் மக்களின் வரிப்பணத்திலிருந்து செய்யப்படும் செலவினங்கள் சிக்கனமாகவும் நேர்த்தியாகவும் இடம் பெறுவதை வலியுறுத்துகிறது. ஒரு விடயம் இடம்பெறும் போது அதனை அக்கறையுள்ள திறத்தவரால் ஊடுபார்க்கத்தக்கதாகவும் இருப்பதுடன் அதற்கு வரையறைகள் கூடாது எனவும் 'வெளிப்படைத்தன்மை' என்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பெறுகைச் செய்முறையில் பொறுப்புக்கூறல் என்பது அரச உத்தியோகத்தர்கள் தாம் செய்யும் செயல் தொடர்பில் அக்கறையுள்ள (மேலதிகாரிகள், பொதுமக்கள் முதலிய) திறத்தினருக்கு வகை கூற வேண்டியவராவர். எதிர்வு கூறுகையானது கொள்கைத் தீர்மானங்கள், நடைமுறைகள், விதிகள், சட்டங்கள் முதலியவை அடிக்கடி மாற்றத்துக் குட்படாது பேணப்படும் என்பதனைப் பொருள் கொள்கிறது. அவ்வாறில்லாத போது ("Uncertainty regarding the application of regulations raises the cost of capital by increasing the risk of investments") விளைவுகள் மறுதலையாக முதலீட்டைப் பாதிப்பதாக அமையுமென கலாநிதி லொயிட் பெர்னாந்து குறிப்பிடுகிறார்.

சமூகத்தின் தேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் ஒன்று சேர்ந்து செயற்படுதலை அதாவது அரசு, தனியார் துறை, சிவில் சமூகம் என்பவற்றின் சுயாதீனமான ஊடாட்டத்தைப் பங்கேற்பு குறிக்கிறது. அரச பெறுகை நடைமுறையின் குறிக்கோள்களுக்குள் இவ்வியல்புகள் தனித்தும் இணைந்தும் தொக்கி நிற்பதனை ஒப்பு நோக்கும் போது உணர்ந்துகொள்ளலாம். அரச பெறுகை நடைமுறையில் ஒழுக்கவியல் (Ethics) வலியுறுத்தப்படுகிறது. இது அந்தரங்கத் தன்மையைப் (Confidentiality) பேணாமை, ஊழல் (Corruption), அக்கறை முரண்பாடு (Conflict of Interest), வெகுமதி/ ஊக்குவிப்புப் பெறல் (Gift/ Incentive) என்பவற்றை முற்றாக விலக்குகிறது. பெறுகையில் ஈடுபடுவோர் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும் என்பது இதன் உட்கிடையாகும். அதாவது அவர்கள் அப்பெறுகைச் செயன் முறை முடியும் வரை அந்தரங்கத்தைப் பேண வேண்டியவராவர். மேலும் தனது பதவி வழியான அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து குறிப்பிட்டவர்கள் நன்மை பெறத் தக்க வகையில் செயற்படுவது ஊழலாகக் கருதப்படும். அச்செயன்முறை முழுவதும் அதில் பங்கேற்கும் அலுவலர் ஒருவர் அக்கறை முரண்பாடற்றவராக இருக்க வேண்டும். அவ்வாறான சூழல் ஏற்படும் போது அவர் தாமாக விலகிக்கொள்ளுதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. வெகுமதிகள் பரிசுகள் ஊக்குவிப்புகள் என்பவற்றை அலுவலர்கள் பெறுவது கட்டாயமாகத் தவிர்க்கப்படுகிறது. இவற்றை வழங்க முன்வரும் ஒப்பந்த தாரர்கள் போன்றோர் தகுதியிழக்க நேரிடும்.

திணைக்களத் தலைவரால் நியமிக் கப்படும் இருவருடன் அந்தப் பிரதேசத்திற் குரிய பிரதேசச் செயலாளர் கொண்ட குழுவின் சிபார்சின் பேரில் பெறுகைக் கைந்நூலின் 56ஆம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சமூகம் சார்ந்த சங்கங்களுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு அமைவாக ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். இந்நடைமுறை குறித்த கருத்திட்டத்தின் பேண்தகு தன்மை (Sustainability), விசேடமான சமூக இலக்குகளை அடைதல்,

குறித்த பிரதேசத்தில் வேலை வாய்ப்புக் களை உருவாக்குதல் என்பதுடன் பெறுகை நடைமுறையில் உள்ளூர்ச் சமூகத்தையும் பங்கேற்கச் செய்தலாகும்.

பங்கேற்பு என்பது நல்லாளுகையின் முக்கிய தன்மைகளில் ஒன்றாகும். அதாவது நாட்டின் அபிவிருத்தியில் அரசு, தனியார் துறை, சிவில் சமூகம் என்பன தத்தமது பங்களிப்பை நேர்த்தியாகச் செய்யும் போதே நாட்டின் அபிவிருத்தி அர்த்தமுள்ளதாகவும் நல்லாளுகையின் பாற்பட்டதாகவும் நிலைத்து நிற்பதாகவும் அமையும். இக்கருத்தியலை உள்வாங்கியதாகவே சமூக அமைப்புகளுடன் அபிவிருத்திக் கருத்திட்டங்களில் நேரடி ஒப்பந்தம் செய்யும் செயன்முறை நோக்கப்படுதல் வேண்டும். இப்புரிந்துகொள்ளலே அவசியமானது. இப்புரிதல் இடம்பெறும் போது சமூக நிறுவனங்கள் வலுப்பெறும். சமூக நிறுவனங்கள் சுயாதீனமாக வலுப்பெறும் போது குறித்த சமூகம் வலுப்பெறும். இவ்வாறு சமூகங்கள் வலுப்பெறுமானால் அது சமூக, பொருளாதார அடித்தளங்களில் வலிமையை ஏற்படுத்தும். அது அபிவிருத்தியை நிலைபேறான தன்மைக்கு இட்டுச் செல்லும். ஏனெனில் சமூக நிறுவனங்கள் சமூக மூலதனங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. மாறாக சமூக அமைப்புக்கள் பங்காளிகள் எனும் அந்தஸ்துக்கு உயர்த்தப்படாது பார்வையாளர்களாகத் தொடர்ந்தும் வைத்திருக்கப்படுவது துரதிஷ்டமானது. அவை எடுப்பார் கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்தப்படுவது சமகால யதார்த்தம்.

நல்லாளுகைத் தத்துவத்தையும் காசுக்கான பெறுமதித் தத்துவத்தையும் கசடறப் புரிந்து கொள்ளும் போது பெறுகைச் செயற்பாடும் அர்த்தமுள்ளதாக அமையும். அது சமூகத்தைச் சுபீட்சமான தடத்தில் இட்டுச்செல்லும்.

References:


- Procurement Manual – 2006
- Procurement Guidelines – 2006
- Dr. Shelton Wanasinghe - Good Governance
- Dr. Lloyd Fernando - Role of the Public Service
- Little Oxford Dictionary


"ஒருமொழியின் எல்லாச் சொற்களையும் அறிந்துகெள்ள முடிவதில்லை. அறிந்துகொள்ள வேண்டிய தேவையுமில்லை. எனினும் சொற்களின் பயன்பாடு, ஒருவரின் கருத்து வெளிப்பாட்டுக்கு அவசியமாகிறது. எனவே ஒவ்வொருவரும் தத்தமது மொழியின் சொற்களஞ்சிய அறிவை வளர்த்துக்கொள்வது அத்தியாவசியமாகும்."

- புண்ணியேஸ்வரி நாகலிங்கம்

நன்றி: புலமை

# உள்நாட்டுக் கடமைப் பிரயாணம்
# (Travel on duty with in tha island)

**திருமதி க. பார்த்தீபன்**
கணக்காளர்.
வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.

**அறிமுகம்**

அரச அலுவலர் ஒருவர் தனது அரசாங்கக் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ளும் பிரயாணம் கடமைப் பிரயாணம் ஆகும். இப்பிரயாணம் உள்நாட்டில் செய்யப்பட்டால் அப்பிரயாணம் உள்நாட்டுக் கடமைப் பிரயாணம் எனச் சொல்லப்படும். தாபனக் கோவையின் பதினான்காம் (XIV) அத்தியாயத்தில் உள்நாட்டுக் கடமைப் பிரயாணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அரசாங்க அலுவலரால் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட கடமைப் பிரயாணத்தினால் அவருக்கு ஏற்பட்ட, மீளப்பெறுவதற்கு உரித்துடைய செலவுகளை மட்டும் மீளப் பெற்றுக் கொள்ளலாம். இதனை அமைய அலுவலர்களும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரயாணச் சிக்கனம்**

கடமைப் பிரயாணமானது

ஆகக் குறைந்த நேரத்திலும்
ஆகக் குறைந்த தூரத்திலும்
ஆகக் குறைந்த செலவிலும்

செய்யப்பட்டு 'பிரயாணச் சிக்கனம்' உடையதாக இருக்க வேண்டும். பிரயாணச் செலவுகள் பின்வரும் மூன்று விதமான கொடுப்பனவுகளை உள்ளடக்கியதாக அமையும்.

1. இணைந்த படிகள் (Combined allowance)

2. மைல் கூலி (Milage)

3. இடை நேர்ச் செலவு (Incidental)

**1. இணைந்த படிகள்**

இது உணவுக்காகவும் உறையுளுக்காகவும் ஏற்பட்ட செலவுக்கான மீளளிப்பாக வழங்கப்படுகிறது.

***இணைந்த படியைப் பெற்றுக்கொள்வதற்கான வரையறைகள் :***

♦ பிரயாணம் கடமைப் பிரயாணமாக இருக்க வேண்டும்.

♦ அலுவலகம் அமைந்திருக்கும் நகராட்சி எல்லைக்கு அப்பால் பயணம் செய்திருக்க வேண்டும்.

♦ 7 மைல் அல்லது 11.2 கிலோமீற்றருக்குக் குறையாத தூரம் பிரயாணம் செய்திருக்க வேண்டும்.

♦ 6 மணித்தியாலம் அல்லது அதற்கு மேற்பட்ட நேரம் செலவிடப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு :- அவசிய கடமையின் போது தனது வீட்டில் இரவைக் கழிக்காது நகராட்சி எல்லைக்குள் கழித்தால் அதற்கான அங்கீகாரத்தை உரிய அதிகாரியிடமிருந்து பெற்றிருந்தால் மட்டுமே நகராட்சி எல்லை, தூரம் என்பனவற்றை கருத்தில் கொள்ளாது இணைந்தபடி வழங்கப்படலாம்.
(உ-ம்) தேர்தல் கடமை

இணைந்தபடி வீதம்

பொது நிருவாக அமைச்சின் 2006ஆம் ஆண்டு சுற்று நிருபத்தின்படி மாதச் சம்பளத்தின் அடிப்படையில் இணைந்தபடி வீதம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மாதச்சம்பளம் | ரூபா 15839 வரை | ரூபா 350 |
| மாதச்சம்பளம் | ரூபா 15840 - 21044 வரை | ரூபா 400 |
| மாதச்சம்பளம் | ரூபா 21045 உம் அதற்கு மேலும் | ரூபா 500 |

இணைந்தபடி கொடுப்பனவுக்குரிய நேரமும் அதன் படியான இணைந்தபடியும்.

| பிரயாண காலம் | இணைந்தபடி |
|---|---|
| ♦ 6 மணித்தியாலத்திற்குள் | இல்லை |
| ♦ 6 மணித்தியாலம் தொடக்கம் 12 மணித்தியாலத்திற்குள் | இணைந்தபடியில் 50% |
| ♦ 12 மணித்தியாலம் தொடக்கம் 24 மணித்தியாலம் வரை | இணைந்தபடியில் 100% |
| ♦ 24 மணித்தியாலத்திற்கு மேல் | இணைந்தபடி + இணைந்தபடியில் 25% |

2. மைல்கூலி

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் அரச கடமையின் பொருட்டு புகையிரதம், அரச வாகனம் தவிர்ந்த ஏனையவைகள் மூலம் வீதி வழியாகப் போக்குவரத்துச் செய்வதனால் ஏற்படும் போக்குவரத்துச் செலவிற்காக மைல்கூலி வழங்கப்படுகின்றது.

| வாகன வகை | மைல்கூலி வீதம் |
|---|---|
| துவிச்சக்கர வண்டி | ரூ. 0.35 |
| பொதுவாகனம் இ.போ.ச | ரூ 0.85 |
| மோட்டார் சைக்கிள் | ரூ. 1.25 |
| தனிப்பட்ட வாகனம் / சொந்த வாகனம் | ரூ. 6.25 |

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.09/2010க்கு அமைவாக உத்தியோகபூர்வ பிரயாணங்களில் ஏற்படும் அலுவலர்களுக்கான மைல்கூலி 01.06.2010 முதல் பின்வருமாறு வழங்கப்படுகின்றது.

| கடமையின் பொருட்டுப் பயன்படுத்தப்படும் வாகன வகுதி | 1kmக்கான கட்டணம் |
|---|---|
| பெற்றோல் மோட்டார் வாகனம் | ரூ. 12.00 |
| டீசல் வாகனம் | ரூ. 08.00 |
| மிதிவண்டி | ரூ. 02.00 |

3. இடை நேர்ச் செலவுகள்

அரச கடமையின் பொருட்டுப் பிரயாணம் செய்யும் உத்தியோகத்தருக்கு அவருடைய வதிவிடத்திற்கும் பஸ் நிலையத்திற்கும் அல்லது புகையிரத நிலையத்திற்கும் இடையில் வாகனம் தேவைப்படுமிடத்து ஏற்படும் செலவு 'இடைநேர்ச் செலவு' ஆகும்.

1 கி. மீற்றருக்கு உட்பட்ட தூரத்திற்கு ரூபா 5.00
1 கி. மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திற்கு ரூபா 10.00 மட்டுமே பெற்றுக் கொள்ளலாம்.

## பிரயாணக் கொடுப்பனவுகள் தாமதமாகச் சமர்ப்பித்தால் அறவிடவேண்டிய தண்டப்பணம்

பிரயாணக் கொடுப்பனவுக் கோரிக்கைகள் பிரயாணத்தின் இறுதித் தினத்திலிருந்து 30 நாள்களுக்குள் சமர்ப்பிக்கப்படாவிடின் கீழே குறிப்பிட்டவாறு தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும்.

| காலம் | வீதம் |
|---|---|
| ♦ பிரயாண இறுதித் திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் | இல்லை |
| ♦ பிரயாண இறுதித் திகதியிலிருந்து 1 மாதத்திற்கு மேற்படின் (1 மாதம் தாமதம்) | 3% |
| ♦ பிரயாண இறுதித் திகதியிலிருந்து 2 மாதத்திற்கு மேற்படின் (2 மாத தாமதம்) | 10% |
| ♦ பிரயாண இறுதித் திகதியிலிருந்து 3 மாதத்திற்கு மேற்படின் (3 மாதம் தாமதம்) | 12% |
| ♦ பிரயாண இறுதித் திகதியிலிருந்து 4 மாதத்திற்கு மேற்படின் (3 மாதத்திற்கு மேற்படின்) | 15% |

அலுவலர் பிரயாணக் கோரிக்கையை 3 மாதத்திற்கு மேற்பட்ட கால தாமதத்துடன் சமர்ப்பித்தால் தாமதத்திற்கான விளக்கத்தினைத் திணைக்களத் தலைவருக்கு அவர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். திணைக்களத் தலைவரின் அங்கீகாரம் பெற்ற பின்னரே கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

"எல்லாப் பேய்களும் நம்மனத்திலேதான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கிவிட்டால் எந்த இடத்தில் இருந்தாலும் அது சொர்க்கமாகிவிடும்."
- சுவாமி விவேகானந்தர்

# சிறிது சிறிது சிறிது சிறிது சிறிது சிறிது சிறிது

**சண். இலங்கேஸ்வரன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
(தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்.)
வலயக் கல்வி அலுவலகம்.
மட்டக்களப்பு

இந்த மாபெரும் பிரபஞ்சமோ, கணக்கில்லா உடுக்களோ, எண்ணில்லாக் கோள்களோ, அன்றி நாம் வாழும் இந்தப் பூமியோ, அதிலுள்ள உயிர்களோ எதுவாயினும் அவற்றின் உருவாக்கம் எப்பொழுதும் மிகமிகமிகச் சிறியதுதான். இவை மனித வெற்றுக் கண்களுக்குப் புலப்படாதவைகள்தான் என்பது முற்றிலும் உண்மையாகும். பூமியிலோ, இப்பரந்த பால் வெளியிலோ எங்காயினும் மனித சாதனைகளின் ஆரம்பமும் எப்பொழுதுமே சிறியதுதானே. அளப்பரிய வியக்கத்தக்க விந்தைகளை ஆற்றிவரும் கணினியாயினும் அதன் ஆரம்பம் இந்த மண்மீது இடப்பட்ட சிறுசிறு கோடுகளும் அவற்றின் மேலிடப்பட்ட சிறுசிறு மணிகளும் தானே. ஆச்சரியமாக உள்ளதா?

மனிதனின் முதலாவது கணித்தற் பொறி அபாகஸ் என்று சொல்லப்படுகின்றது. இது தோன்றிய காலப்பகுதியை வரலாற்றால் சரியாகக் கூறமுடியாத வகையில் உள்ளபோது அதன் பிறப்பிடத்தைத் துல்லியமாகக் கூறமுடியுமா? இருப்பினும் கி. மு. 3000 வருடங்கள் என்றும் இடம் கிரேக்கம் என்றும் கருதப்படுகின்றது. மண்மீது வரையப்பட்ட கோடுகளின்மேல் மணிகளை அதன்மீது வைத்துக் கணக்கிடும் முறையொன்று உருவானது, அன்று. ஆனால் அது படிப்படியாகப் பல ஆயிரம் மனித சிந்தனைகளின் ஊடாக இன்று கணினியாகப் பரிணமித்து, நம் மத்தியில் மிக வேண்டப் பட்ட ஒரு துணையாக, நண்பராக, உதவியாளராக, ஏன் ஒரு குருவாகக்கூடப் பயன்படுத்துமளவிற்கு அவசியமான கருவியாக மாறிவிட்டது.

ஏனைய உயிர்வாழ் உயிரினங்களுடன் ஒப்பிடுகையில் "நுண்ணறிவு" மனிதருக்கு மட்டும் மிக அதிகமாக விருத்தியடைந்து காணப்படுகின்றது என்பது ஒருகாலக் கனவு ஆகிவிட்டது. ஆனால் இப்பொழுது இயந்திரங்களும் அதாவது ஜடப்பொருள்களால் உருவான உயிரற்ற இயந்திரங்களும் நுண்ணறிவுடன் செயற்படவும் தீர்மானங்களை எடுக்கவும் அதனூடாக மனிதனுக்கு வழி காட்டத் தலைப்பட்டும் புறப்பட்டும்விட்டன. இவை யாவை? மனிதனாலேயே உருவாக்கப்பட்ட இயந்திரங்களதான்.

இன்று இவை முழுக்க முழுக்க மின் மயமானவை. அதாவது இலத்திரன் மயமானவைதான். கணினிக்கு உயிரைக் கொடுப்பவையும் இவைதான் என்று கூறினாலும் அதுமிகப் பொருத்தம்தானே. இவை வெற்றுக் க்ண்களுக்குப் புலப்படாதவைகள் அல்லவா? இவற்றின் பருமன் ஒருமீற்றரை நூறு கோடித் துண்டங்களாக்கினால் அதில் ஒரு துண்டின் அளவை ஏறத்தாள ஒத்ததாகும். வாவ்! எவ்வளவு சிறிது! மனிதன் கருவின் கருவிலேயே காரியங்களை ஆற்றிவிட்டான்!

இப்பிரபஞ்சமெங்கிலும் மின்புலமும் காந்தப்புலமும் பின்னிக்கிடக்கின்றன. இதனுள் ஒருவடிவம்தான் இந்த நுண்ணலைகள். இவை வெற்றுக் கண்களுக்குப் புலப்படாதவை. அதேவேளை ஒன்றுக் கொன்று புலப்படாத வகையிலோ அன்றி புலப்பட முடியாத் தூரத்திலோ இருக்கும் சாதனங்களையும் இணைக்கின்றன. அவற்றுக்கிடையே தொடர்பாடல் செய்கின்றன. செவ்வாய்க் கிரகத்திலுள்ள இயந்திரம் பூமியிலுள்ள இயந்திரத்துடன் தொடர்புறுகிறது. எவ்வாறு?

நீர்ப்பரப்பின் மேலாக ஓர் இடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் பொழுது அக்குழப்பம் (அலை) அந்நீர்ப்பரப்பின் மேல் பயணித்து எல்லாத் திசைகளினூடாகவும் பயணிப்பது போல மின் காந்தப்புலத்தில்

செவ்வாயில் உண்டாக்கப்படும் குழப்பம் இப்புலத்தில் பயணிக்கின்றது. அதனைப் பூமியிலுள்ள உணர் கருவி உள்வாங்கித் தகவலாக மாற்றிப் பரிமாறுகின்றது. அவ்வள வுதான்.

இலத்திரன்களின் கட்டடுப்படுத் தப்பட்ட பாய்ச்சல் இலத்திரனியலில் முன் வைக்கப்படுகின்றன. கணினியின் சகல செயற்பாடுகளும் இயக்கங்களும் முறை வழியாக்கங்களும் இந்தக் கட்டுப்படுத்தப்பட்ட இலத்திரன்களின் இயக்கத்தினால் ஈடேற்றப் படுகின்றன. இது எவ்வாறு?

இலத்திரன்களின் வேகமான இயக்கம், கருவியின் செயல் வேகத்தை அதிகரிக்கின்றது. காதும் காதும் வைத்தது போல துரரதேச உறவுடன் பேசமுடிகிறது அல்லவா?

கணினியின் செயற்பாடு என்பது இந்த மிகச் சிறிய இலத்திரன்களைக் கையாள்வதில்தான் தங்கியள்ளது. கணினியின் செயற்றிறன் என்பது இவ்விலத்திரன்களைக் கையாளும் அளவிலும் (எண்ணிக்கையிலும்) கையாளும் வேகத்திலும் தங்கியுள்ளது. இதன் செயற்றி றனை அளவிடுதலில் சொல்லளவு (Wordsize), முறைவழியாக்கியின் வேகம் (Processor Speed), பாட்டை அகலம் (Bus Width) என்பன முக்கியமான இடங்களை அடிப்படையாகப் பெறுகின்றன. என்ன இவை?

கணினியினுள் உருவாக்கப்பட்டுள்ள விசேட இடத்தில் இலத்திரன்கள் நிலை கொள்ளச் செய்யப்பட்டால் அது (1) எனவும், அவ்விடத்தில் வறிதாக்கம் செய்யப்பட்டால் அது (0) எனவும் கொள்ளப்படும். இத்தகைய இவ்விடம் "பிற்று" (bit) என அழைக்கப் படுகின்றது. எனவே பிற்று என்பது 1 அல்லது 0 பெறுமானங்களை எடுக்கின்றது.

"சொல்லளவு" என்பது ஒரு தடவை யில் மத்திய செயற்பாட்டு அலகினால் கையாளக்கூடிய பிற்றுக்களின் எண்ணிக்கை என வரையறுக்கப்பட்டுள்ளது. இதனை இவ்வாறு விளங்கிக்கொள்வோம். ஒரு மனிதன் ஒருதடவையில் 10 பெட்டிகளை ஒன்றாகத் தூக்கி வேறு இடத்தில் வைக்க வல்லவன். வேறொருவன் ஒரே தடவையில் 20 பெட்டிகளை இடம் பெயர்க்க வல்லவன் என்போம். இவர்களில் இரண்டாமவன் செய்திறன் மிக்கவனாகின்றான். அதாவது 5 தடவைகள் இருவரும் செயலாற்றும் பொழுது முதலாமவன் 50 பெட்டிகளையும் இரண்டா மவன் 100 பெட்டிகளையும் நகர்த்தியிருப்பர். இவ்வகையில் இரண்டாவது சொல்லளவுள்ள கணினி சிறந்ததுதானே.

அடுத்ததாக "முறைவழியாக்கியின் வேகம்" என்பது ஒரு முறைவழியாக்கியினால் ஒரு அலகு நேரத்தில் (ஒருசெக்கனில்) நிறைவேற்றப்படும் செயல்களின் எண்ணிக்கை என வரைவுபடுத்தப்படுகின்றது. இதனை இவ்வாறு விளங்கிக் கொள்வோம்.

ஒரு செக்கனில் முதலாமவன் 5 தடவைகள் வேகமாகச் செயற்படத்தக்கவனா கவும் மற்றையவன் 10 தடவைகள் வேகமாகச் செயற்படத்தக்கவனாகவும் திறனுள்ளவர்க ளெனில், ஒருசெக்கன் முடிவில் இரண்டாமவன் முன்னையவனிலும் பார்க்க அதிக எண்ணிக்கை யான பெட்டிகளை (பிற்றுக்களை) நகர்த்தியி ருப்பானல்லவா? எனவே இத்தகைய அதிகரித்த வேகமுள்ள கணினி செயற்றிறன் மிக்க தாகின்றது.

இறுதியாக, "பாட்டை அகலம்" என்பது யாதெனில் ஒரு, "தரவு கடத்தும் பாதையினூடாக ஒரு தடவையில் கடத்தக் கூடிய பிற்றுக்களின் எண்ணிக்கை" என வரையறுக்கப்பட்டுள்ளது. அதனையும் இவ்வாறே புரிந்துகொள்வோம். ஒரு பாதை வழியே செல்லும் சிறிய வாகனத்தில் ஏற்றிச் செல்லக் கூடிய பயணிகளிலும் பார்க்க பெரிய வாகனத்தில் அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச் செல்லலாம் அல்லவா? பார்த்தீர்களா, அதிக பிற்றுக்களைக் கடத்தும் பொழுது அக்கணினியின் செயற்றிறன் அதிகரிக்கும் என்பது கண்கூடு.

எனவே, கணினிகளைக் கையாள நேரும் பொழுது இச்சிறிய விடயங்களைச் சற்று நீங்கள் அலசிப்பாருங்களேன்.





மட்டக்களப்பு வலய மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டி - 2014 பரிசளிப்பு விழா 22.11.2014



ENGLISH FOR ALL - 2014 RESC- BATTICALOA. 14.12.2014




TALENT SHOW ENGLISH FOR ALL - 2014 RESC- BATTICALOA. 14.12.2014



சர்வதேச சாரணர் / சாரணியர் பாசறை 01.08.2014 - 07.08.2014 கம்பல ஆரியா, மாதம்பை, சிலாபம்



மட்டக்களப்பு வலய மட்ட அழகியல் தின விழா - 24.12.2014 கலைஞர் கௌரவிப்பு



மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட க.பொ.த (உ.த) மாணவர்களுக்கான செயன்முறை பயிற்சி வகுப்பு 11.11.2014



மட்டக்களப்பு வலய ஒளி விழா - 19.12.2014

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 065 2053060